★
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 ஒகஸ்ட் 17 புதன்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

1932 - 2022

வரு. 90 இல. 193 | Wednesday 17, August, 2022 | 16 பக்கங்கள் | 40/-


75 ஆவது சுதந்திர தின விழா:

## விழா ஏற்பாடுகளுக்கு அமைச்சரவை உபகுழு



இலங்கையின் 75 ஆவது சுதந்திர தின விழா நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்காகவும் வழிநடாத்துவதற்காகவும் அமைச்சரவை உபகுழுவொன்றை நியமிப்பதற்காக பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும்

06

எதிர்கால சிறுவர்களுக்கான தரமான சேவைகளை வழங்க

## சிறுவர் அபிவிருத்தி நிலையங்களுக்கான தேசிய வழிகாட்டல், குறைந்தபட்ச தரநிலை



ஜனாதிபதி ரணில் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம்

இலங்கையிலுள்ள சிறுவர் அபிவிருத்தி நிலையங்களுக்கு தேசிய வழிகாட்டுதல் மற்றும் குறைந்தபட்ச நியமங்களை அறிமுகப்படுத்துவது குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கவனம் செலுத்தியுள்ளார்.

இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

எதிர்கால சிறுவர்களுக்கான தரமான சேவைகளை வழங்குவதற்காக சிறுவர் அபிவிருத்தி நிலையங்களுக்கு, மாகாண மட்டத்தில் உருவாக்கப்பட்ட வழிகாட்டுதல்கள் மற்றும் கொள்கைகள் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

06

## சர்வதேசம் ஏற்றுக்கொண்டுள்ள கொள்கைக்கு அமையவே தடைநீக்கம்

அவர்களது முதலீடுகளை எதிர்பார்த்து அல்ல - அமைச்சர் பந்துல

**லோரன்ஸ் செல்வநாயகம்**

சர்வதேசத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்கவே அரசாங்கம் சில புலம்பெயர் அமைப்புகள் மீதான தடையை நீக்கியுள்ளதாக தெரிவித்துள்ள அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன வெளிநாட்டு முதலீடுகளை எதிர்பார்த்து அரசாங்கம் புலம்பெயர் அமைப்புகள் மீதான தடையை நீக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்றைய தினம் தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது.



அதன் போது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். சர்வதேச முதலீடுகளை எதிர்பார்த்து புலம்பெயர் தமிழ் அமைப்புகள் மீதான தடையை அரசாங்கம் நீக்கியதா என அந்த ஊடகவியலாளர் கேள்வி எழுப்பினார். அதற்கு பதிலளித்த அமைச்சர், முதலீடுகளை பெற்றுக் கொள்வதற்காக

06

உள்ளூர், வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை கவரும் வகையில்

## பிரதான நகரங்களுக்கு சொகுசு ரயில் சேவைகள்



கண்டி, கதிர்காமம், அனுராதபுரம் ஆகிய இடங்களை உள்ளடக்கி அதிசொகுசு சேவை

**பதுளை, யாழ்ப்பாணத்துக்கான விசேட சொகுசு ரயில் சேவைகள் ஏற்கனவே ஆரம்பம்**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கண்டி, கதிர்காமம், அனுராதபுரம் உள்ளிட்ட பல மாவட்டங்களை உள்ளடக்கிய அதி சொகுசு உல்லாசப் பிரயாண ரயில் சேவையை வார இறுதி நாட்களில் நடத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். இந்த செயற்திட்டத்திற்காக தனியார் துறை மற்றும் இலங்கை போக்குவரத்து சபையின் ஒத்துழைப்பையும் பெற்றுக் கொள்ளவுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றைய தினம் அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

மேற்படி சொகுசு ரயில்களில் உல்லாசப்பிரயாணிகளுக்கு தேவையான சிற்றுண்டிச்சாலை மற்றும் கழிவறை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக தனியார் துறையினரின் பங்களிப்பையும் பெற்றுக் கொள்வதற்கு பேச்சுவார்த்தை நடத்தப்பட உள்ளதாகவும்

06



மின்சாரத்தில் இயங்கும் முச்சக்கர வண்டி நேற்று கொழும்பில் அறிமுகம் செய்யப்பட்டது. அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர மற்றும் அமெரிக்க தூதுவர் ஜூலி சங் ஆகியோர் நிகழ்வில் கலந்துகொண்டனர். இதற்

## "இலங்கை பட்டய ஊடக தொழில்வாண்மையாளர் நிறுவனம்"

ஸ்தாபிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியது

03

விசேட குழுவின் அனுமதி பெற்ற பின்பே

## அரச நிறுவனங்களுக்கு புதிய தலைவர்கள் நியமனம்

ஜனாதிபதியின் செயலாளர் தலைமையில் புதிய குழு



அரச கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் அரச நிறுவனங்களின் தலைவர் மற்றும் பணிப்பாளர் பதவிகளில் புதிய நியமனங்கள் அல்லது மாற்றங்களுக்காக முன் அனுமதி பெறுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குழுவொன்றை நியமித்துள்ளார். ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க தலைமையிலான குழுவின் ஏனைய உறுப்பினர்களாக பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க,

06

Levothyroxion, Omeprazlo, Mefenamic Acid

## புதிய மூன்று வகை மருந்துகள் SPC ஊடாக சந்தைக்கு அறிமுகம்

இலக்கில் 20 சதவீத வெற்றி என அமைச்சர் கெஹெலிய தெரிவிப்பு



நாட்டுக்கு தேவையான மருந்து வகைகளில் 40% ஐ உள்ளூரிலேயே உற்பத்தி செய்யும் நடவடிக்கை தற்போது செயல்படுத்தப்பட்டு வருகின்றது. அதில் 20 வீத இலக்கை தற்போது

06

## காலிமுகத்திடலில் இனி ஆர்ப்பாட்டம் நடத்த முடியாது

நகர அபிவிருத்தி அதிகார சபை

போராட்டகாரர்கள் நான்கு மாதங்களுக்கு மேல் பயன்படுத்திய காலிமுகத் திடலை எதிர்காலத்தில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் அனுமதியுடன் மட்டுமே பொது வைபவங்களுக்கு பயன்படுத்த முடியும் என அந்த அதிகார சபை தெரிவித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பொது எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களுக்காக ஒதுக்கிய "ஆர்ப்பாட்ட இடம்" இனிவரும் காலங்களில் அங்கு இருக்காது எனவும் நகர அபிவிருத்தி அதிகார சபை கூறியுள்ளது. இனிவரும் காலங்களில் அந்த இடத்தில்

06

நாட்டின் தற்போதைய முன்னேற்றம் குறித்து

## வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு அமைச்சர் அலி சப்ரி விளக்கம்



ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது கூட்டத் தொடருக்கு முன்னதாக தற்போதைய நாட்டின் அபிவிருத்திகள் தொடர்பில் கொழும்பிலுள்ள வெளிநாட்டு தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்களை சந்தித்து வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி விளக்கமளித்தார்.

அமைச்சர் அலி சப்ரி,

06

1000 பாடசாலைகள் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தின் கீழ்

## நாவலப்பிட்டி அல்ஷபா ஆரம்ப பாடசாலைக்கு ரயில்வே காணி

அமைச்சர்கள் பந்துல, சுசில் இணைந்து பெற்றுக்கொடுப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**





நாவலப்பிட்டி, அல்ஷபா ஆரம்ப பாடசாலைக்கு ரயில்வே திணைக்களத்துக்குச் சொந்தமான காணியை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மற்றும் போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துலகுணவர்தன ஆகியோர் இணைந்து சமர்ப்பித்துள்ள அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அரசாங்கத்தின் 1,000 பாடசாலைகள்

06

## செப்டம்பர் மாதம் முதல் நீர்க்கட்டணம் அதிகரிக்கிறது

60 முதல் 70 வீதமாக அதிகரிக்கலாம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நீர் கட்டணத்தை எதிர்வரும் செப்டம்பர் முதலாம் திகதி முதல் அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கான அமைச்சரவை அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் உயர்மட்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

நீர் கட்டண அதிகரிப்பு தொடர்பான வர்த்தமானி இவ்வாரத்திற்குள் வெளியிடப்பட உள்ளதாக தெரிவித்துள்ள அவர், புதிய நீர் கட்டண

06

நாட்டிலிருந்து வெளியேறக் கோரிய

## பிரித்தானிய யுவதியின் ரிட் மனு நிராகரிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்கிய குற்றச் சாட்டில் பிரிட்டன் யுவதி கெலிக் ப்ரேஷர் தம்மை இலங்கையிலிருந்து வெளியேற்றுவதற்காக குடிவரவு, குடியகல்வு திணைக்களம் மேற்கொண்டுள்ள தீர்மானத்தை செல்லுபடியற்றதாக்க உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த ரிட் மனு விசாரணையின்றி நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி ஷோபித ராஜகருணா

06

## ஹம்பாந்தோட்டை துறைமுகத்துள் பிரவேசித்தது சீன ஆய்வுக் கப்பல்

22 வரை நங்கூரமிட்டிருக்கும் என அறிவிப்பு

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**



சீனாவின் "யுவான் வேங் 5" ஆய்வுக் கப்பல் நேற்று (16) காலை ஹம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகத்தை வந்தடைந்தது. கப்பலை வரவேற்கும் நிகழ்வில் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

எண்ணெய் மற்றும் சேவைகளைபெற்றுக்

06




தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2022 ஒகஸ்ட் 17
புதன்கிழமை



இந்தியாவின் 75 ஆவது ஆண்டு நிகழ்வை முன்னிட்டு யாழ். இந்திய துணைத் தூதரகத்தினால் நேற்று காலை பலாலியில் அமைந்துள்ள இந்திய அமைதி காக்கும் படையினரி நினைவிடத்தில் பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. யாழ். இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ், யாழ்ப்பாணப் பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதி சார்பில் மேஜர் ஜெனரல் வி ஜயசுந்தர இணைந்து மலரஞ்சலி செலுத்தினர். நிகழ்வின் தொடர்ச்சியாக, யாழ். இந்தியத் துணைத்தூதரக வளாகத்தில், இந்தியத் துணைத் தூதுவர், இந்திய தேசியக் கொடியை ஏற்றி வைத்து, இந்தியக் குடியரசுத் தலைவரின் செய்தியை வாசித்தார். இந்நிகழ்வில் துணைத் தூதரக அதிகாரிகள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினர், பாரதத்தின் குடிமக்கள், இந்திய வம்சா வழியினர், பாரத தேசத்தின் நண்பர்கள், மற்றும் ஊடகவியலாளர்கள் உட்பட 90 இற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

## எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு தீர்வு கோரி முல்லைத்தீவில் கவனயீர்ப்பு போராட்டம்



எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு தீர்வு கோரியும் இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையை கட்டுப்படுத்தக் கோரியும் முல்லைத்தீவு மீனவர்கள் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களுக்கு தடையின்றி மானிய விலையில் மண்ணெண்ணெய் வழங்க வேண்டும், இந்திய இழுவைப் படகுகளின் வருகையினை தடை செய்ய வேண்டும், 3 மாதத்திற்கான இழப்பீடு வழங்க வேண்டும், சட்டவிரோத மீன்பிடி தொழில்கள் அனைத்தும் தடை செய்ய வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து முல்லைத்தீவு நகரில் மாபெரும் கவனயீர்ப்பு போராட்டமொன்றினை முன்னெடுத்தனர்.

முல்லைத்தீவு மீனவ சம்மேளனத்தினால் நேற்றைய தினம் காலை 10.00 மணிக்கு முல்லைத்தீவு நகரப்பகுதியிலுள்ள புனித இராஜப்பர் ஆலயத்துக்கு அருகில் ஆரம்பமான மாபெரும் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமானது முல்லைத்தீவு நகரின் ஊடாக மாவட்ட செயலகத்தை வந்தடைந்தது.

பேரணியாக சென்ற மீனவர்கள் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் (நிர்வாகம்) மேலதிக அரசாங்க அதிபர் எஸ். குணபாலன் (காணி) மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் ஆகியோரிடம் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரை கையளித்தனர்.

ஜனாதிபதி, பிரதமர், கடற்றொழில் அமைச்சர் மற்றும் எரிசக்தி அமைச்சர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பதற்காக கையளிக்கப்பட்ட மகஜர்களை தங்களது குறிப்புக்களையும் உள்ளடக்கி உரிய தரப்பினர்களுக்கு அனுப்பி வைப்பதாக முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் (நிர்வாகம்) மீனவர்களுக்கு தெரிவித்தார்.

# முல்லைத்தீவு கடலில் ஒளிபாச்சி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட 8 மீனவர்கள் கைது

(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)

முல்லைத்தீவு கடலில் ஒளிபாச்சி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட 8 மீனவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட கடற்பரப்பில் சட்டவிரோத கடற்தொழில் நடவடிக்கையில் மீனவர்கள் ஈடுபட்டு வருவதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் அதனை கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகள் நேற்றுமுன் தினம் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். முல்லைத்தீவு கடலில் தடைசெய்யப்பட்ட கடற்தொழில்நடவடிக்கையில்ஒன்றானகடலுக்குள் ஒளிபாச்சி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கொக்கிளாய் கடற்பரப்பில் மூன்று படகுகளும்,மாத்தளன் கடற்பரப்பில் ஒரு படகும்,வலைஞர்மடம் கடற்பகுதியில் இரண்டு படகுகளும் என மொத்தமாக 6 படகுகளுடன் 8 மீனவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்ட நபர்களையும் சான்று பொருட்களையும் முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தும் நடவடிக்கையில் கடற்தொழில் நீரியல்வளத்திணைக்களம் ஈடுபட்டுள்ளது.

## ஆசிரியரின் நடவடிக்கைகளுக்கு எதிராக பெற்றோர் கவனயீர்ப்பு போராட்டம்

(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)

புதுக்குடியிருப்பு மந்துவில் அரசரத்தினம் வித்தியாலயத்தில் ஆசிரியர் ஒருவரின் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து மாணவர்கள், பெற்றோர் நேற்று கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும் தரம் 5 புலமை பரிசில் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு கல்விகற்றுவந்த ஆசிரியரின் இடமாற்றத்தை கண்டித்தும் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மாணவர்களை அடித்து துன்புறுத்துவது, தனது காதல் கதையினை கற்பிப்பது என ஆசிரியரின் செயற்பாடு இருந்ததாக மாணவர்கள், பெற்றோர்கள் இதன்போது தெரிவித்தனர்.

மேலும் இப்பாடசாலையில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு கல்வி கற்பித்த ஆசிரியர் ஒருவரை இடம் மாற்றம் செய்தமையினை கண்டித்தும் ஆசிரியரை மீள பணிக்கு அமர்த்த கோரியும் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

## பல்கலைக்கழக மாணவிகளுக்கு தொலைபேசியில் பாலியல் தொல்லை

யாழ்.விசேட நிருபர்

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவிகளின் தொலைபேசிகளுக்கு அழைப்பெடுக்கும் மர்ம நபர் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது

மாணவிகளின் தொலைபேசிகளுக்கு இரவு வேளைகளில் அழைப்பெடுக்கும் நபர் ஆபாசமாக பேசி வந்துள்ளார். அவரின் தொலைபேசி இலக்கத்திலிருந்து அழைப்பு வராதவாறு தடுத்தாலும் (ப்ளக்) வேறு இலக்கங்களிலிருந்து அழைப்பெடுத்து மாணவிகளை இம்சைக்குள்ளாக்கி உளவியல் ரீதியாக பாதிக்கும் வகையில் செயற்பட்டுள்ளார். இது தொடர்பில் மாணவிகளால் பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு அறிவித்த போதிலும், நிர்வாகம் உரிய முறையில் நடவடிக்கை எடுக்கவில்லை என பாதிக்கப்பட்ட மாணவிகள் குற்றம்சாட்டியுள்ளனர். எனவே தமக்கு தொலைபேசியில் தொல்லை தரும் மர்ம நபர் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர்.

முறைப்பாட்டில் நபரின் தொலைபேசி இலக்கத்தினை மாணவிகள் வழங்கியுள்ளனர். அதன் அடிப்படையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# நாய் கொடூர கொலை சந்தேகநபர் பொலிஸில் சரண்

யாழ்.விசேட நிருபர்

புங்குடுதீவில் நாய் ஒன்றை கைக்கோடாரியினால்கொலைசெய்தசந்தேகநபர் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார். இதனையடுத்து சந்தேகநபர் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு.

நீதிமன்ற உத்தரவின்பேரில் எதிர்வரும் 29ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் நாய் ஒன்றை கைக்கோடாரியினால் வெட்டி கொடூரமாகக் கொலை செய்யும் காட்சி சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ளது.

புங்குடுதீவு 9ஆம் வட்டாரத்தில் இடம்பெற்றதாக விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது. அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் புங்குடுதீவு 9ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த 21 மற்றும் 35 வயதுடைய இருவரை கைது செய்தனர்.

நாயை வெட்டிக் கொல்லப் பயன்படுத்திய கைக்கோடாரி மற்றும் அதனை காணொளி எடுத்த தொலைபேசி என்பனவும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டன.

சந்தேகநபர் போதைப்பொருளுக்கு அடியானவர் என்றும் ஊரில் திருட்டுகளில் ஈடுபடுபவர் என்றும் தெரியவந்துள்ளது. எனவே தம்மைக் கண்டவுடன் நாய் குரைத்து காட்டிக் கொடுத்துவிடும் என்பதால் நாயை கொடூரமாக கொலைசெய்ததாக தெரியவருகின்றது. அந்தக் காணொளி தவறுதலாக ரிக்ரொக்கில் பதிவேற்றப் பட்டுவிட்டது" என்று காணொளியை பதிவெடுத்தவர் பொலிஸாரிடம் வாக்குமூலம் வழங்கியிருந்தார்.

சந்தேக நபர்களை சட்ட மருத்துவரின் பரிசோதனைக்குட்படுத்தி அறிக்கை பெற்ற பின்னர் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அவர் மிருகவதைச் சட்டத்தின் கீழ் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது பிணை வழங்க மறுத்த நீதிமன்றம் 14 நாட்களுக்கு சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது.

# லிற்றோ எரிவாயு சிலிண்டர்களை அதிகரிக்க மாவட்ட செயலகம் நடவடிக்கை

கோப்பாய் குறூப் நிருபர்

யாழ் மாவட்டத்திற்கு விநியோகிக்கப்படும் லிற்றோ எரிவாயு சிலிண்டர்களின் அளவை அதிகரிப்பதற்கு எரிவாயு நிறுவனத்திடம் கோரிக்கை முன்வைக்க வேண்டுமென யாழ் மாவட்ட லிற்றோ எரிவாயு விநியோக நிறுவனம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

கொழும்பில் லிற்றோ எரிவாயு சிலிண்டர்களை சாதாரணமாக பெற முடிந்த போதிலும் ஏன்? யாழ் மாவட்டத்தில் அவ்வாறு பெற முடியவில்லையென நிறுவனத்திடம் தொடர்பு கொண்ட போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

மேலும் தெரிவிக்கையில் நாட்டில் லிற்றோ எரிவாயு தட்டுப்பாடு நிலவிய போது எரிவாயு விநியோகிப்பதற்கு யாழ் மாவட்டத்தில் சில பகுதிகள் எரிவாயு அதிகம் தேவைப்படும் பகுதிகளாக அடையாளப்படுத்தப்பட்டன.

இவ்வாறு அடையாளப்படுத்தப்பட்ட நிலையில் அதற்கேற்ற எரிவாயு சிலிண்டர்களே தற்போது வரை யாழ் மாவட்டத்திற்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

நல்லூர் பெருந்திருவிழா இடம் பெற்றுக் கொண்டிருக்கின்ற நிலையில் நல்லூர் பிரதேச செயலாளருக்கு உட்பட்ட பகுதிகளில் முன்பு பயன்படுத்தப்பட்ட எரிவாயு அளவிலும் பார்க்க இரட்டிப்பு மடங்கிலான எரிவாயு தேவைப்படுகிறது. மேலும் யாழ் மாவட்டத்திற்கு அதிகளவிலான சுற்றுலாப் பயணிகள் வந்திருக்கின்றமையால் எரிவாயுவின் தேவைப்பாடு அதிகமாக உணரப்படுகிறது. இதனால் வெற்று சிலிண்டர்களின் கேள்வியும் அதிகரித்துள்ளது.

ஆகவே யாழ் மாவட்டத்திற்கு லிற்றோ எரிவாயுவின் தேவைப்பாடு முன்பு இருந்ததை விட அதிகமாக காணப்படுகின்றமையால் தேவைப்பாடுகள் தொடர்பில் யாழ் மாவட்ட செயலகம் லிற்றோ எரிவாயு நிறுவனத்திடம் கோரிக்கை முன்வைக்கும் பட்சத்தில் அதனை அதிகரித்து பெற்றுக் கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



யாழ்ப்பாணத்தில் தமிழர் காலாசார நிகழ்வுகளில் கேரள நடனநிகழ்வுகளும் இடம்பெறுவதை படத்தில் காணலாம்.

## அதிக விலைக்கு தண்ணீர் போத்தல் விற்பனை உணவகத்திற்கு எதிராக சட்டநடவடிக்கை

யாழ்.விசேட நிருபர்

தண்ணீர் போத்தலை அதிக விலைக்கு விற்பனை செய்த குற்றச்சாட்டில் நெல்லியடியிலுள்ள உணவகம் ஒன்றுக்கு எதிராக யாழ்.மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நெல்லியடியிலுள்ள உணவகம் ஒன்றில் 35 ரூபாய் விற்பனை விலையாக பொறிக்கப்பட்ட தண்ணீர் போத்தலை 70 ரூபாய்க்கு விற்பனை செய்வதாக பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில், விசாரணைகளை முன்னெடுத்த போதே இவ்வாறு நடவடிக்கை எடுத்துள்ளனர். அதேவேளை தண்ணீர் போத்தலை சான்று பொருட்களாக கைப்பற்றியுள்ளனர். அவற்றை நீதிமன்றில் ஒப்படைத்து, உணவக உரிமையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## நீர்வேலியில் வெள்ளியன்று சிறப்புச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம் நீர்வேலி அருள்மிகு கந்த சுவாமி தேவஸ்தானத்தில் வாராந்தச் சிறப்புச்சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் 19.08.2022 மாலை 5.00 மணிக்கு நடைபெறும். சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறும் இந்நிகழ்வில் ஆலயத்தின் பிரதமகுரு சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்களின் ஆசியுரையினை தொடர்ந்து பரிபாலன சபைத் தலைவர் த.சோதிலிங்கம் தலைமையுரை ஆற்றுவார். சைவப்புலவர் ச.முகுந்தன் 'கார்த்திகையும் கார்த்திகேயனும்' என்னும் விடயப்பொருளில் சொற்பொழிவாற்றுவார்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் ஆண்டிலே (2022) இளம் இந்துச் சிறார்களிடையே நாவலர் பெருமான் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும்முகமாக யாழ்.மாவட்ட இந்து சமய அறநெறிப் பாடசாலைகளில் 'வாராந்தச் சொற்பொழிவும் மாதந்தோறும் நாயன்மார் குருபூஜை நிகழ்வும்' நடைபெறுகின்றன. நிகழ்ச்சித் தொடர் வரிசையிலே 34 ஆவது சொற்பொழிவு நிகழ்வு உடுப்பிட்டி சைவத்திருதொண்டர் அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் 19.08.2022 மாலை 03.30 மணிக்கு இந்து கலாசார உத்தியோகத்தர் திருமதி ஜெயச்செல்வி சசிகுமார் தலைமையில் இடம்பெறவுள்ளது. நாவலர் குருபூஜை மற்றும் தலைமையுரை நிகழ்வுகளைத் தொடர்ந்து 'நாவலர் பெருமானின் சைவ வாழ்வு' எனுந் தொனிப்பொருளில் சைவப் புலவர் செ.த.குமரனின் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்வு நடைபெறும். அதனைத் தொடர்ந்து சொற்பொழிவிலிருந்து வினாக்கள் தொடுக்கப்பட்டு மாணவர்களுக்கான பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

(அ.கனகசூரியர்)

தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 ஓகஸ்ட் 17 புதன்கிழமை

# தினகரன்

THINAKARAN
තිනකරන්



**தொழுகை நேரம்**

15 முதல் 19 வரை

| | |
|---|---|
| சுபஹ் | 04.46 |
| லுஹர் | 12.16 |
| அஸர் | 03.31 |
| மஃரிப் | 06.26 |
| இஷா | 07.38 |

**இன்றைய சுபதினம்**

சுபகிருது வருடம் ஆவணி 1

ராகுகாலம் : பகல் : 12.00 - 1.30வரை
சுபநேரம் : காலை : 9.00 - 10.30வரை

யோகம்: மரணசித்த யோகம்

திதி: சூன்ய

**இராசி பலன்கள்**


| | |
|---|---|
| மேஷம் | வெற்றி |
| ரிஷபம் | பாராட்டு |
| மிதுனம் | தனம் |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | கோபம் |
| கன்னி | முயற்சி |
| துலாம் | நன்மை |
| விருச்சிகம் | நிறைவு |
| தனுசு | செலவு |
| மகரம் | பொறுமை |
| கும்பம் | மறதி |
| மீனம் | சுகம் |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

# நாட்டில் மேலும் 06 கொரோனா மரணங்கள்

## மொத்த மரண எண்ணிக்கை 16,630

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டில் மீண்டும் கொரோனா வைரஸ் தொற்று நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில் நேற்று முன்தினம் 6 கொரோனா வைரஸ் மரணங்கள் இடம் பெற்றுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அது தொடர்பில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன தெரிவிக்கையில், மரணமடைந்தவர்கள் 60 வயதுக்கும் மேற்பட்டவர்கள் என்றும் ஆண்கள் மூவரும் பெண்கள் மூவரும் அதில் உள்ளடங்குவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன் தினம் இடம் பெற்றுள்ள மரணங்களோடு இதுவரை நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 16, 630 ஆகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# கல்முனையில் போதைவஸ்து வைத்திருந்த ஒருவர் கைது

## போலி நாணயத்தாள்களும் மீட்பு



ஹெரோயின் மற்றும் போலி நாணயத்தாள்களை தம்வசம் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவரை கல்முனையில் விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

கல்முனை விசேட அதிரடிப்படை முகாமுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல் ஒன்றையடுத்து திங்கட்கிழமை (15) நள்ளிரவு கல்முனை காஸிம் வீதியில் வைத்து சந்தேக நபர் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட தேடுதலில் கைதானார்.

இவ்வாறு கைதான நபர் 39 வயது மதிக்கத்தக்கவர் என்பதுடன் சந்தேக நபரிடமிருந்து 5, 000 போலி நோட்டுகள் மற்றும் ஹெரோயின் போதைப்பொருள் 3 கிராம் 100 மில்லிகிராம் என்பன விசேட அதிரடிப் படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜெயசுந்தரவின் பணிப்புரைக்கமைய அம்பாறை வலயக்கட்டளை அதிகாரி சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் சில்வெஸ்டர் விஜேசிங்கவின் அறிவுறுத்தலுக்கமைய இந்நடவடிக்கையை முன்னெடுத்து சந்தேக நபரை கைது செய்தனர்.

நபர் சான்று பொருட்களுடன் கல்முனை பொலிஸாரிடம் விசேட அதிரடிப்படையினர் பாரப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீபாத கல்லூரிக்கு

# தோட்டப்புற மாணவர்களின் அனுமதி எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும்

## கல்வி அமைச்சிடம் இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் வலியுறுத்து



ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரியில் தோட்டப்புற மாணவர்கள் உள்வாங்கப்படும் சதவீதம் குறைந்துள்ளமை தொடர்பில் கல்வி அமைச்சின் கவனத்துக்கு கொண்டுவந்துள்ள இ.தொ.கா. தலைவர் செந்தில் தொண்டமான், தோட்டப்புற மாணவர்களை அதிகமாக உள்வாங்கும் பொறிமுறையொன்றின் அவசியம் குறித்தும் வலியுறுத்தியுள்ளார்.

அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் முயற்சியால் 1992ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரியில் கடந்த 30 வருடங்களுக்கு முன்னர் தோட்டத் தொழிலாளர்களது பிள்ளைகளை மாத்திரமே சேர்க்க முடியுமென்ற நிலைமை காணப்பட்டது. ஆனால் தற்போது தோட்டங்களில் பணிப்புரிபவர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துவிட்டது. மேலும் தோட்டத்தில் 'அவுட்குரோவர்' முறைமை புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட காரணத்தால் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஊழியர் சேமலாப மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிகள் அறவிடப்படுவதில்லை. இதனால் தோட்டப்புறங்களில் உள்ள பிள்ளைகள் ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரிக்கு உள்வாங்கப்படும் எண்ணிக்கை குறைவடைந்துவிட்டது.

இக்கல்லூரிக்கு மாணவர்களை உள்வாங்கும் பொறிமுறையை காலத்துக்கு ஏற்றால்போல் மாற்றியமைக்க வேண்டியுள்ளது. தற்போதைய சூழ்நிலையில் இக்கல்லூரிக்கான அனுமதியை பெற தாய் அல்லது தந்தையின்

06

# இலங்கைக்கான உதவிகளை ஈரான் தொடர்ந்து வழங்கும்

## அமைச்சர் அலி சப்ரியிடம் ஈரான் தூதுவர் உறுதி




இலங்கைக்கு ஈரான் குடியரசின் தொடர்ச்சியான உதவிகள் வழங்கப்படுமென ஈரான் தூதுவர் ஹஷேம் அஷ்ஜசாதே உறுதியளித்துள்ளார்.

வெளிநாட்டமைச்சர் அலி சப்ரியை ஈரான் தூதுவர் ஹஷேம் அஷ்ஜசாதே (15) வெளிநாட்டமைச்சில் சந்தித்தார். இதன்போதே அவர் இவ்வாறு உறுதியளித்துள்ளார்.

இரு நாடுகளுக்குமிடையிலான நீண்ட காலம் நீடித்த சுமுகமான உறவுகள் குறித்து குறிப்பிட்ட வெளிநாட்டமைச்சர், இலங்கை தற்போது எதிர்நோக்கி வரும் பொருளாதார வீழ்ச்சி மற்றும் நிலைமையை ஸ்திரப்படுத்துவதற்காக அரசாங்கம் இதுவரை முன்னெடுத்துள்ள உறுதியான நடவடிக்கைகள் குறித்து தூதுவருக்கு விளக்கினார்.

இலங்கை - ஈரான் இருதரப்பு உறவின் முக்கியத்துவத்தை வலியுறுத்திய தூதுவர் ஹஷேம் அஷ்ஜசாதே, இலங்கைக்கான ஈரான் குடியரசின் தொடர்ச்சியான உதவிகளை உறுதி செய்தார்.

# தாமரைக் கோபுரம் செயற்பாடு அடுத்த மாதம் 15 முதல் ஆரம்பம்



தெற்காசியாவின் மிக உயரமான கோபுரமாக கருதப்படுகின்ற தாமரைக் கோபுரம் அடுத்த மாதம் 15 ஆம் திகதி முதல் திறக்கப்படவுள்ளது.

வர்த்தக நன்மைகளை பெற்றுக் கொள்ளும் நோக்கில் முதலீட்டு வாய்ப்புகளுக்காக இந்த 300 மீற்றர் உயர கோபுரத்தை திறக்க கொழும்பு தாமரை கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, தாமரை கோபுரத்தில் வர்த்தக நிலையங்கள், காட்சியறைகள், மாநாட்டு மண்டபங்கள் மற்றும் பிரத்தியேகமான கடைகளுக்கான அலுவலக வசதிகளைப் பெற்றுக் கொள்ளமுதலீட்டாளர்களுக்குவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

சர்வதேச அளவிலான நிகழ்வுகள், இசை நிகழ்ச்சிகள் மற்றும் கண்காட்சிகளை ஏற்பாடு செய்வதற்கான வாய்ப்பும் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தாமரைக் கோபுரத்தில் 50 தொலைக்காட்சி நிலையங்கள், 35 வானொலி நிலையங்களுக்கான தொலைதொடர்பு வசதிகள், முதல் மாடியில் வர்த்தக கடைத்தொகுதியொன்றும் மூன்றாவது மற்றும் நான்காவது மாடிகள் வைபவங்கள் நடத்துவதற்கான மண்டபங்களும் ஆறாவது மாடியில் அமைக்கப்பட்டுள்ள உணவகமானது, சுழலும் வகையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இங்கு 400 பேர் அமரக்கூடிய மாநாட்டு மண்டபம், ஆடம்பர அறைகள், ஹோட்டல்கள், தொலைத்தொடர்பாடல் அருங்காட்சியகம் என பல வசதிகள் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளதாக என கூறப்படுகிறது.

# "இலங்கை பட்டய ஊடக தொழில்வாண்மையாளர் நிறுவனம்"

## ஸ்தாபிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியது



'இலங்கை பட்டயம் பெற்ற ஊடகவியலாளர் நிறுவனம்' எனும் பெயருக்குப் பதிலாக முன்மொழியப்பட்டுள்ள நிறுவனத்தின் பெயர் "இலங்கை பட்டய ஊடக தொழில்வாண்மையாளர்கள் நிறுவனம்" எனத் திருத்தம் செய்வதற்காக வெகுசன ஊடக அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.


ஊடகத் துறையில் பணிபுரிகின்ற ஊடகவியலாளர்களின் தொழில்வாண்மையை அதிகரிக்கும் நோக்கில் 'இலங்கை பட்டயம் பெற்ற ஊடகவியலாளர்களின் நிறுவனம்' இனைத் தாபிப்பதற்காக கடந்த வருடம் ஒக்டோபர் 5ம் திகதி இடம் பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

அதற்கமைய, அந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வெகுசன ஊடக அமைச்சின் செயலாளர் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள வழிநடாத்தல் குழுவால் அந்த நிறுவனத்தைத் தாபிப்பதற்கு ஏற்புடைய வகையில் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்தின் அடிப்படையில் சட்ட வரைஞர் திணைக்களத்தின் மூலம் சட்டமூலமொன்றைத் தயாரிப்பதற்கும், இதற்கு முன்னர் முன்மொழியப்பட்டுள்ள 'இலங்கை பட்டயம் பெற்ற ஊடகவியலாளர் நிறுவனம்' எனும் பெயருக்குப் பதிலாக முன்மொழியப்பட்டுள்ள நிறுவனத்தின் பெயர் "இலங்கை பட்டய ஊடக தொழில்வாண்மையாளர்கள் நிறுவனம்" எனத் திருத்தம் செய்வதற்காக வெகுசன ஊடக அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கண்ணாடிகளை அடித்து நொறுக்கி

# யாழ்தேவிக்குள் குழப்பம் விளைவித்த நால்வர் கைது

## போதையில் பயணிகள் மீதும் தாக்குதல்



யாழ்தேவி ரயிலின் கண்ணாடிகளை அடித்து நொறுக்கி குழப்பம் விளைவித்த 04 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் ரயிலுக்குள் குழப்பம் விளைவித்ததையடுத்து பயணிகள் அவசர நிலைமை சங்கிலியை இழுத்து ரயிலை நிறுத்தியதையடுத்தே இவர்கள் 04 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மஹவ ரயில் நிலையத்திலிருந்து ரயிலில் ஏறிய இந்த நால்வர் மதுபோதையில் வன்முறையில் ஈடுபட்டதன் காரணமாக காங்கேசன்துறையிலிருந்து கல்கிஸை நோக்கி பயணித்த யாழ் தேவி ரயில் சுமார் ஒரு மணிநேரம் தாமதமாக கொழும்பு கோட்டையை வந்தடைந்தது.

இந்த ரயில் ஞாயிற்றுக்கிழமை (15) மாலை 4.10 மணியளவில் மஹவ ரயில் நிலையத்திலிருந்து பயணத்தை ஆரம்பித்தபோது இந்த நால்வரும் ரயிலுக்குள் குழப்பத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனையடுத்து பயணிகள் அவசரகால சங்கிலியை இழுத்து ரயிலை நிறுத்தினர்.

ரயிலிலிருந்து இறங்கி நால்வரும் கட்டைகளால் ரயிலைத் தாக்கியுள்ளனர். இதனால்

06

# இறக்குமதியாகும் அரிசி 05 ரூபாவால் குறைப்பு

## அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



இறக்குமதி செய்யப்பட்டுள்ள அரிசி வகைகளை ஐந்து ரூபாவால் விலைக்குறைப்பு செய்வதற்கு தீர்மானித்துள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நெல் சந்தைப்படுத்தும் சபை மூலம் விநியோகிக்கப்படும் அனைத்து வகை அரிசி வகைகளின் விலைகளும் இவ்வாறு ஐந்து ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன் அதுதொடர்பில் சதொச மற்றும் கூட்டுறவு நிலையங்களுக்கும் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

புதிய விலையின் படி ஒரு கிலோ சம்பா அரிசி 225 ரூபாவுக்கும் கீரி சம்பா ஒரு கிலோ 245 ரூபாவுக்கும் வெள்ளை மற்றும் பச்சை அரிசிகள் 205 ரூபாவாகவும் வெள்ளை மற்றும் சிவப்பு நாட்டரிசி வகைகள் 215 ரூபாவாகவும் நேற்று முதல் விற்பனை செய்யப்படுவதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சிறுபோகத்தில் அறுவடை செய்யும் நெல்லை கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் தற்போது நெல் சந்தைப்படுத்தும் சபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# மின்சார முச்சக்கர வண்டி நேற்று கொழும்பில் அறிமுகம்

**லோரன்ஸ் செல்வ நாயகம்**




நாட்டில் முதல் தடவையாக மின்சாரத்தில் இயங்கும் முச்சக்கர வண்டி நேற்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

நாட்டின் பிரதான முச்சக்கர வண்டி விநியோகஸ்தர்களான டேவிட் பீரிஸ் மோட்டார் நிறுவனம் மேற்படி மின்சார முச்சக்கர வண்டியை அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த திட்டத்திற்காக அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி முகாமைத்துவ நிறுவனம் மற்றும் டேவிட் பீரிஸ் மோட்டார் நிறுவனம் ஆகியவற்றுக் கிடையில் நேற்று புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது.

இந்த உத்தியோகபூர்வ நிகழ்வில் மின்சக்தி எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் மற்றும் முக்கிய அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டுள்ளனர்.

கொழும்பு தமிழ்ச் சங்கத்தில்

# பேராசிரியர் ம.முகம்மது உவைஸ் புலமைப்பகிர்வு



கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் முன்னாள் துணைக் காப்பாளரான பேராசிரியர் ம.முகம்மது உவைஸின் புலமைப்பகிர்வு நிகழ்வு 20ம் திகதி சனிக்கிழமை பி.ப.4.00 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்க இலக்கியக்குழுச் செயலாளர் தெ.மதுசூதனன் தலைமையில் விநோதன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

"இஸ்லாமிய தமிழ் இலக்கியப்புலத்தில் பேராசிரியர் ம.மு.உவைஸ்" என்னும் தலைப்பில் கொழும்புத் தமிழ்ச் சங்க துணைக்காப்பாளர் கலாநிதி க. இரகுபரன், "பேராசிரியர் ம.மு. உவைஸ் அவர்களின் தமிழ்ப்பணி" என்னும் தலைப்பில் இலங்கை ஜமா அத்தே இஸ்லாமி அமைப்பின் உதவிப் பொதுச் செயலாளர் எம்.எச்.எம். ஹஸன் ஆகியோர் சிறப்புரையாற்றவுள்ளனர் என கொழும்பு தமிழ்ச்சங்கம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 249.31 | 261.39 |
| கனடியன் டொலர் | 274.90 | 288.06 |
| யூரோ | 361.54 | 376.57 |
| ஜப்பான் யென் | 2.6693 | 2.7772 |
| சிங்கப்பூர் டொலர் | 257.84 | 269.03 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 428.61 | 446.10 |
| சுவிஸ் பிராங்க் | 375.23 | 393.05 |
| அமெரிக்க டொலர் | 357.37 | 368.68 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 957.45 | கட்டார் ரியால் | 98.08 |
| குவைத் டினார் | 1,176.53 | சவூதி ரியால் | 96.12 |
| ஓமான் ரியால் | 937.58 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 98.27 |

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

சுபகிருது வருடம் ஆவணி மாதம் 01ஆம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 முஹர்ரம் பிறை 16

### குறள் தரும் சிந்தனை

இறுதி பயப்பினும் எஞ்சாது இறைவற்கு
உறுதி பயப்பதாம் தூது

தனக்கு அழிவே தருவதாக இருந்தாலும், அதை எண்ணிப் பயந்து விடாமல் உறுதியுடன் கடமையாற்றுகின்றவனே தன்னுடைய தலைவனுக்கு நம்பிக்கையான தூதனாவான்.

## கொவிட் தொற்று தீவிரமடைவதால் மக்கள் மத்தியில் அலட்சியம் கூடாது!

நாட்டில் கொவிட் தொற்று படிப்படியாக அதிகரித்துச் செல்வதாக மருத்துவ அறிக்கைகள் தெரிவிக்கின்றன. கடந்த சில வாரங்களில் கொவிட் தொற்றுக்குள்ளானோரில் பலர் மரணமடைந்துள்ளனர். அதேநேரம் கொவிட் தொற்றுக்குள்ளானோர் பலர் சமீப நாட்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்த நிலைமை ஆரோக்கியமானதல்ல.

எமது நாட்டில் கொவிட் தொற்று பல அலைகளைக் கடந்து வந்துள்ளது. ஆயிரக்கணக்கான உயிர்களை எமது நாடு பறிகொடுத்தும் உள்ளது. கொவிட் தொற்று காரணமாக எமது நாட்டின் பொருளாதாரத்துக்கு ஏற்பட்ட வீழ்ச்சியும் அதிகம். அந்த வீழ்ச்சியானது இலங்கையின் அரசியலிலும் பெரும் தாக்கத்தைச் செலுத்தியது. கொவிட் தொற்றினால் உண்டான பொருளாதார பின்னடைவில் இருந்து எமது நாடு இன்னுமே மீண்டெழவில்லை.

இந்நிலையில் மீண்டும் கொவிட் தொற்று பரவத் தொடங்கியுள்ளது. நாம் எவ்வாறாவது இத்தொற்றைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர வேண்டியது அவசியம். இல்லையேல் எமது நாடு மீண்டும் பெரும் துன்பத்துக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படலாம். இந்த விடயத்தில் மக்கள் அலட்சியமாக நடந்து கொள்வது நல்லதல்ல.

கொவிட் தொற்று முன்னர் தணிவடைந்த வேளையில், இலங்கை மக்கள் முகக்கவசம் அணிவதை நிறுத்திக் கொண்டமை தவறென்று மருத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர். கொவிட் தொற்று மீண்டும் தலைதூக்குமென்றும், முகக்கவசம் அணிவதையும், அடிப்படை சுகாதாரப் பழக்கவழக்கங்களையும் கைவிடாமல் தொடருமாறும் மருத்துவ நிபுணர்கள் முன்னரே எச்சரிக்கை விடுத்திருந்தமை நினைவிருக்கலாம். எனினும் மக்களில் பலர் அதனை அலட்சியம் செய்து விட்டனர்.

கொவிட் தொற்று உலகை விட்டு முற்றாக நீங்கவில்லையென்பதும், முகக்கவசம் உட்பட அனைத்து சுகாதார நடைமுறைகளையும் மக்கள் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டுமென்பதும் இப்போது அனைவருக்கும் நன்கு புரிகின்றது. அதேசமயம் நான்காவது தடுப்பூசியில் மக்கள் கவனம் செலுத்த வேண்டியதும் அவசியமாகின்றது.

கொவிட் தொற்று ஏற்படும் போது பாதுகாப்புப் பெறுவதற்கு தடுப்பூசி என்பதே ஆயுதமென்பதை மக்கள் மறந்து விடலாகாது. கொவிட் பாதிப்பினால் உயிரிழப்பு ஏற்படுவதை தடுப்பூசி பெருமளவில் தடுக்கின்றது. இலங்கையில் மாத்திரமன்றி உலக நாடுகள் அனைத்திலும் கொவிட் தொற்றினால் ஏற்பட்ட உயிரிழப்புகள் வீழ்ச்சி நிலைமைக்குக் கொண்டு வரப்பட்டதற்கு தடுப்பூசியே துணைபுரிந்ததென்பதை மறந்து விடலாகாது.

நாட்டில் தற்போது கொரோனாவுக்கு எதிரான நான்காவது தடுப்பூசி மக்களுக்கு ஏற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இந்த நான்காவது தடுப்பூசியை ஏற்றிக் கொள்வதில் மக்கள் மத்தியில் ஆர்வம் குறைவாகவே காணப்படுவதாக தகவல்கள் வெளிவந்துள்ளன. முதலாவது தடுப்பூசியையும் இரண்டாவது தடுப்பூசியையும் ஏற்றிக் கொள்வதில் மக்கள் காண்பித்த அக்கறை மூன்றாவதான 'பூஸ்டர்' தடுப்பூசி மீது காண்பிக்கப்படவில்லை.

தற்போது செலுத்தப்பட்டுக் கொண்டிருப்பது நான்காவது 'டோஸ்' தடுப்பூசி ஆகும். மருத்துவ நிபுணர்கள் பரிந்துரைக்கின்ற அத்தனை தடுப்பூசிகளையும் கட்டாயம் ஏற்றிக் கொள்ளவே வேண்டும். அதனைத் தவற விடுகின்ற போது வீணான ஆபத்துகளை எதிர்கொள்ள வேண்டி ஏற்படலாம். எனவே நான்காவது தடுப்பூசியை ஏற்றிக் கொள்வதில் மக்கள் அலட்சியம் காண்பிக்கக் கூடாது.

கொவிட் தடுப்பூசி தொடர்பாக மக்களில் ஒரு தரப்பினரிடம் தவறான நம்பிக்கைகள் நிலவுகின்றன. கொவிட் தடுப்பூசி ஏற்றிக் கொள்வதால் எதிர்காலத்தில் உடலில் பாரதூரமான பாதிப்புகள் ஏற்படுமென அவர்கள் தவறான நம்பிக்கை கொண்டுள்ளனர். இதன் காரணமாக எமது நாட்டில் முதலாவது தடுப்பூசியை ஏற்றிக் கொள்ளாதவர்களே பலர் உள்ளனர். கிராமப் பகுதிகளில்தான் அதிகமானோர் இவ்வாறு உள்ளனர்.

பலர் ஒரேயொரு தடுப்பூசியுடன் நிறுத்திக் கொண்டுள்ளனர். இதைவிட இரண்டு தடுப்பூசிகளை மாத்திரம் பெற்றுக் கொண்டு 'பூஸ்டர்' தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளாமல் உள்ளோரும் பலர் உள்ளனர். சமூக ஊடகங்களிலும், மக்கள் மத்தியிலும் நிலவுகின்ற ஆதாரமற்ற வீணான வதந்திகளே இதற்குக் காரணமாகும். சாதாரணமாகவே மக்களுக்கு ஏற்படுகின்ற வழமையான உபாதைகளுக்கும் தடுப்பூசிக்கும் முடிச்சுப் போட்டவாறு அச்சம் பரப்பப்படுவதாலேயே இந்நிலைமை ஏற்படுகின்றது.

இந்த அச்சத்தில் அர்த்தமில்லை. கொவிட் தடுப்பூசியானது சர்வதேசத்தின் புகழ் பெற்ற நிறுவனங்களின் மருத்துவ நிபுணர்களால் நன்கு பரீட்சிக்கப்பட்ட பின்னரே மக்கள் மத்தியில் பாவனைக்கு விடப்பட்டுள்ளது. தடுப்பூசி ஏற்றிக் கொண்டதும் ஓரிரு நாட்களுக்கு ஏற்படுகின்ற சிறு உபாதைகள் வழமையானதாகும். ஆனால் கொவிட் பாதிப்புக்கு எதிரான உறுதியான நிர்ப்பீடனத்தை தடுப்பூசி வழங்குகின்றதென்பதை மறந்து விடலாகாது.

editor.tkn@lakehouse.lk

# நாட்டை நெருக்கடியிலிருந்து மீட்க புலம்பெயர் தமிழர்கள் உதவ தயார்!

'தற்போதைய நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பதற்கு புலம்பெயர் தமிழர்கள் உதவத் தயாராக உள்ளனர். அதற்கான உத்வேகத்தை அதிகாரப் பகிர்வு அளிக்கும்' என்று மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்தார்.

ஜனாதிபதி முன்வைக்கக் கூடிய தேசிய கொள்கைத் திட்டத்தின் அடிப்படையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சர்வகட்சி அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைவரம் தொடர்பில் எமது பத்திரிகை நிறுவனத்துக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

**கேள்வி: புதிய ஜனாதிபதி மற்றும் பிரதமரை பாராளுமன்றம் தெரிவு செய்துள்ள நிலையில், இடைக்கால சர்வகட்சி நிர்வாகம் தொடர்பில் உங்கள் கட்சியின் நிலைப்பாடு என்ன?**

**பதில்:** பொதுஜன பெரமுன மற்றும் சுதந்திரக் கட்சியிலிருந்து சுயாதீனமான உறுப்பினர்களுடன் இணைந்து எமது கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் வாக்கெடுப்பில் டலஸ் அழகப்பெருமவுக்கு ஆதரவாக வாக்களித்திருந்தது. சர்வகட்சி ஆட்சியை உருவாக்குவதை நோக்காகக் கொண்டே இத்தீர்மானத்தை எடுத்திருந்தோம். பொருளாதாரத்தை மீண்டும் சரியான பாதையில் கொண்டு செல்வதற்கும் மக்களை ஒன்றிணைப்பதற்கு சர்வகட்சி இடைக்கால அரசாங்கம் அமைப்பதே ஒரேயொரு வழியாக இருந்தது. இதனால்தான் டலஸ் அழகப்பெருமவுக்கு ஆதரவு தெரிவிக்க நாம் முடிவெடுத்தோம். ெபாதுஜன பெரமுனவின் வாக்குகளால் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட போது, அக்கட்சிக்கு வெளியில் இருந்து ஒருவர் பிரதமராக நியமிக்கப்படுவார் என எதிர்பார்த்தேன் ஆனால் அது நிகழவில்லை. தற்போதைய அமைச்சரவையைப் பார்த்தால் முன்னைய அரசாங்க காலத்தைப் போன்றே காணப்படுகிறது. பாரிய மாற்றங்கள் எதுவும் தென்படவில்லை.

**கேள்வி: இருந்தாலும் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் வெளிவிவகார அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கப்பட்டிருந்தார். இது மாற்றம் இல்லையா?**



**பதில்:** ஆம், அவர்கள் மனுஷ நாணயக்கார மற்றும் ஹரின் பெர்னாண்டோ ஆகியோரையும் அமைச்சர்களாக நியமித்தனர்; இல்லையெனில் பழைய அமைச்சரவை போன்றதாகவே இருக்கும். இதனால் இது சர்வகட்சி அரசாங்கத்தின் பண்புகளைக் கொண்டிருக்கவில்லை. உதாரணமாக தற்போதைய அமைச்சரவையில் உள்ள சில அமைச்சர்கள் பல்வேறு குற்றச்சாட்டுகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

அண்மையில் நாம் ஜனாதிபதியைச் சந்தித்து தமிழ் மக்களின் பிரச்சினைகள் பற்றிய விடயங்களை எடுத்துக் கூறியிருந்தோம். நாம் அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தேசியக் கொள்கைத் திட்டத்தின் அடிப்படையில் அனைத்துக் கட்சி அரசாங்கத்தை ஆதரிக்கத் தயாராக இருப்பதாகவும் அவருக்குத் தெரிவித்தோம்.

**கேள்வி: நீங்களும் உங்கள் அரசியல் கட்சியும் எந்த நிலையில் சர்வகட்சி அரசாங்கத்தில் சேர உத்தேசித்துள்ளீர்கள்?**

**பதில்:** அது தேசிய கொள்கைத் திட்டத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும். அந்த அரசாங்கத்தின் அமைச்சுப் பதவிகள் மற்றும் நிலையங்களை ஏற்றுக் கொள்வதா என்பது கொள்கையை மீளாய்வு செய்த பின்னர் சிந்திக்க வேண்டிய விடயமாகும். அதன் அடிப்படையிலேயே நாம் எவ்வாறு ஆதரவை வழங்குவோம் என்பது அமையும்.

> 'தேசிய கொள்கைத் திட்டத்தின் அடிப்படையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சர்வகட்சி அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்கும்' அதற்கான உத்வேகத்தை அதிகாரப் பகிர்வு அளிக்கும்' என்கிறார் பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன்

**கேள்வி: நாட்டின் டொலர் நெருக்கடியைத் தீர்ப்பதற்கு புலம்பெயர் தமிழர்களின் உதவியைப் பெற முடியும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது அல்லவா?**

**பதில்:** ஜனாதிபதிக்கு கொள்கையை கொண்டு வருவதற்கு நாங்கள் ஆதரவளிக்க தயாராக உள்ளோம். அதன் அடிப்படையில் ஆதரவு தருவதா வேண்டாமா என்பதை முடிவு செய்வோம்.

**கேள்வி: இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டு வருவதற்கு புலம்பெயர் தமிழ் மக்கள் ஆர்வமாக இருப்பதாக நீங்கள் கூறுகிறீர்களா?**

**பதில்:** ஆம், தற்போதைய நெருக்கடியிலிருந்து நாட்டை மீள்வதற்கு புலம்பெயர் தமிழர்கள் உதவத் தயாராக உள்ளனர். அதிகாரப் பகிர்வு அதற்குத் தேவையான உத்வேகத்தை அளிக்கும்.

**கேள்வி: ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போராட்டக்காரர்களை நியாயமாக நடத்துகிறாரா?**

**பதில்:** முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மக்களுக்கு உகந்ததைச் செய்யாத காரணத்தினால் போரட்டங்கள் மூலம் அழுத்தம் கொடுக்கப்பட்டது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போராட்டக்காரர்களுக்கு சரியானதைச் செய்ய வேண்டும். அவர்களின் கோரிக்கைகளை நிவர்த்தி செய்ய முற்பட வேண்டும். போராட்டக்காரர்களின் முக்கிய கோரிக்கைகளில் ஒன்று பொறுப்புக்கூறல் ஆகும்.

நாட்டின் வெளிநாட்டுக் கையிருப்பு 7 பில்லியன் டொலர்களில் இருந்து பூச்சியத்திற்கு எப்படிச் சரிந்தது? இந்த நிலைமைக்குச் செல்லும் அளவுக்கு முடிவுகளை எடுத்தவர்கள் யார்? இதற்கு யார் பொறுப்பு என்பதை ஆராய்வதற்கு ஜனாதிபதி குழுவொன்றை நியமிக்கலாம். உர ஊழல், சீனி ஊழல், ஈஸ்டர் தாக்குதல் ஆகியவற்றுக்கு யார் காரணம் என்று அவர் விசாரிக்கலாம். பொறுப்புக்கூறல் தொடர்பான முக்கியமான விடயங்களில் ஜனாதிபதி கவனம் செலுத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது. போராட்டத்தில் ஈடுபட்ட தலைவர்களைப் பின்தொடர்வதில் எந்தப் பயனும் இல்லை.

தற்போதைய ஜனாதிபதிக்கு வெற்றியடையும் வாய்ப்பு உள்ளது. ஒவ்வொரு நாளும் இந்த நாட்டின் ஜனாதிபதிகளை மாற்ற முடியாது. எங்களுக்கு பொருளாதார ஸ்திரத்தன்மை தேவை. அதற்கு அரசியல் ஸ்திரத்தன்மை வேண்டும்.

பி. ஹர்ஷன்

# பேத்தாழை பொதுநூலக பதினேழாவது நிலாமுற்றம்

வாழைச்சேனை பிரதேசத்திலுள்ள பேத்தாழை பொது நூலகம் பிரதி பௌர்ணமி தினமும் விபுலானந்தர் வாசகர் வட்டத்துடன் இணைந்து நடத்தும் 'நிலா முற்றம்' எனும் இலக்கிய ஒன்றுகூடலானது இம்மாதம் 11ஆம் திகதி 17 ஆவது ஒன்றுகூடலாக இடம்பெற்றது. வவுனியாவைச் சேர்ந்த எழுத்தாளர் திருமதி மைதிலி தயாபரனின் 'விஞ்சிடுமோ விஞ்ஞானம்' எனும் கவிதை நூல் மற்றும் வாழைச்சேனை எழுத்தாளர் ஏ.எல்.எம். இர்ஷாத் எழுதிய 'ஒளி பூக்கும் இரவு' எனும் கைக்கூ கவிதை நூல் ஆகியவற்றின் வாசிப்பு அனுபவமாக இம்முறை நிலா முற்றம் வழமை போன்று zoom செயலியின் ஊடாக நடைபெற்றது.




நூலகத்தின் பொறுப்பாளர் மரகதம் பிரகாஷின் நெறியாள்கையுடன் ஆரம்பமான இந்நிகழ்வில் உரையாளராக இணைந்து கொண்ட மாணவி ரவீந்திரன் அபிராமியை வாசகர் வட்ட உறுப்பினரும் ஆசிரியையுமான விஜிதா முருகவேள் அறிமுகம் செய்திருந்தார். அதனைத் தொடர்ந்து இலங்கை மின்சார சபையின் வவுனியா பிரதேச பிரதம மின்பொறியியலாளரும் எழுத்தாளருமான மைதிலி தயாபரன் தொடர்பான அறிமுகத்தை ர.அபிராமி வழங்கினார்.

எழுத்தாளரின் குடும்ப விபரங்கள், அவர் பெற்ற விருதுகள், பாராட்டுக்கள் பற்றிய விடயங்கள் விரிவாகக் கூறப்பட்டதுடன், ஐந்து நாவல்கள், நான்கு கவிதை நூல்கள், இரண்டு கட்டுரை நூல்கள், ஒரு சிறுகதை நூல் என பன்னிரு படைப்புகளை வழங்கியிருக்கும் எழுத்தாளரினால் மேலும் பல படைப்புக்கள் வெளிவர வேண்டும் என எமது வாசகர் வட்டம் எதிர்பார்ப்பதாகவும் ரவீந்திரன் அபிராமி குறிப்பிட்டிருந்தார்.

அதனைத் தொடர்ந்து 'விஞ்சிடுமோ விஞ்ஞானம்' எனும் கவிதை நூல் மீதான தனது வாசிப்பு அனுபவத்தினை வாசகர் வட்ட உறுப்பினர் பனிச்சையூர் சிந்துஜா பகிர்ந்திருந்தார். இந்நூலில் தன்னை வெகுவாக ஈர்த்த 'ஆணோடு ஆணாக', மற்றும் 'இருபதாம் நூற்றாண்டில் அகலிகை' ஆகிய இரு கவிதைகள் தொடர்பில் ஆழமாக தனது வாசிப்பு அனுபவத்தை அவர் பகிர்ந்திருந்தார். ஆசிரியரும், எழுத்தாளருமான ஏ.எல்.எம்.இர்ஷாத் தொடர்பான அறிமுகத்தை மாணவியும், வாசகர் வட்ட உறுப்பினருமான தியாகராஜா ஜதுர்ஷிகா வழங்கியிருந்தார். அதனைத் தொடர்ந்து அவரது 'ஒளி பூக்கும் இரவு' எனும் கைக்கூ கவிதை நூல் தொடர்பான தனது வாசிப்பு அனுபவத்தை ஆசிரியையும் வாசகர் வட்ட உறுப்பினருமான பாரதி சாஜஹான் பகிர்ந்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து உரையாளர்கள் மற்றும் நிலாமுற்ற உறவுகளுடன் தனது கருத்துக்களையும், ஆலோசனைகளையும் பகிர்ந்து கொண்ட எழுத்தாளர் மைதிலி தயாபரன், இந்த நிகழ்வில் உரையாளர்கள் உச்சரிக்கும் தமிழ் தன்னை வெகுவாக கவர்ந்து விட்டதாகவும், அத்தோடு தற்காலத்தில் இளையோர் மட்டத்தில் வாசிப்பின் ஆர்வம் அருகி வருகின்றது என பலரும் குறைகூறிக் கொண்டிருக்கும் வேளையில் இவர்களைப் போன்ற இளையோர், குறித்த குற்றச்சாட்டுக்களை எல்லாம் புரட்டிப்போடும் வண்ணம் இவ்வாறான நிகழ்வுகளை நடாத்துவது உண்மையிலேயே மகிழ்வளிக்கின்றது. இவ்வாறான நிகழ்வுகளை தொடச்சியாக நடாத்திவரும் பேத்தாழை பொது நூலகத்தாருக்கு எனது மனமார்ந்த நன்றிகளும், பாராட்டுக்களும் என தனது நன்றி கலந்த வாழ்த்துக்களைக் கூறியிருந்தார்.

எழுத்தாளர் ஏ.எல்.எம்.இர்ஷாத் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில் "கைக்கூக் கவிதைகளை பொறுத்தளவில் வாசகர்களும் கூட்டுப் படைப்பாளிகளே! அந்த வகையில் நான் பார்த்திராத புதுவிதமான பார்வையினை உரையாளரது அனுபவப் பகிர்வின் மூலம் காணக் கூடியதாக இருந்தது மகிழ்ச்சியளிக்கிறது. இவ்வாறான நிகழ்வுகள் மூலம் என்னைப் போன்றவர்களுக்கு மேலும் உற்சாகம் அளிக்கும் பேத்தாழைப் பொது நூலகத்தின் வாசகர் வட்டத்தினருக்கு மனமார்ந்த நன்றிகள்" எனத் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து ஆசிரியரும், வாசகர் வட்ட உறுப்பினருமான எ.ஜெயரஞ்சித், எழுத்தாளர் மைதிலி தயாபரனுக்கும் வாழைச்சேனை பிரதேசத்திற்கும் இடையிலான தொடர்பு பற்றிக் கூறியதோடு, எழுத்தாளர் ஏ.எல்.எம்.இர்ஷாத் அவர்களின் தமிழ் மீதான ஆர்வம் தொடர்பிலும் தனது கருத்தினை பதிவு செய்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து ஆசிரியரும் வாசகர் வட்ட உறுப்பினருமான த.சர்மிதன் மற்றும் வாசகி இம்றானா ஆகியோரின் கருத்துரைகளுடன் நிறைவு பெற்ற பேத்தாழை பொதுநூலகத்தின் 17 ஆவது நிலாமுற்றம் மீண்டும் அடுத்த பௌர்ணமியில் பிரகாசிக்கும்.

மரகதம் பிரகாஷ்...

# மட்டக்களப்பு தமிழ், முஸ்லிம் ஊடகவியலாளர்களிடையே நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் விசேட வேலைத்திட்டம்

பன்மைத்துவம் மற்றும் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை தனிமனிதன் ஒவ்வொருவனும் நேசிப்பதன் மூலம் நாட்டில் நிலையான சமாதானத்தையும் அபிவிருத்தியையும் கட்டியெழுப்ப முடியும் என்ற ஆழமான நம்பிக்கை எமக்குண்டு என கல்குடா மீடியா போரத்தின் பணிப்பாளரும், ஊடகவியலாளருமான எம்.ரீ.எம்.பாரிஸ் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ், முஸ்லிம் ஊடகவியலாளர்களுக்கான நலன்புரி விஷேட வேலைத் திட்ட நிகழ்வில் தலைமையுரையாற்றும் போது தெரிவித்தார்.

தியாகி அறக்கொடை நிதியத்தின் ஸ்தாபகத் தலைவரும், சமூக செயற்பாட்டாளருமான வாமதேவன் தியாகேந்திரனிடம் கல்குடா மீடியா போரம் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க மட்டக்களப்பு மாவட்டத்தில் முதன்முறையாக களப்பணியாற்றும் தெரிவு செய்யப்பட்ட 30 தமிழ்,முஸ்லிம் ஊடகவியலாளர்களுக்கு முதல் கட்டமாக ஊக்குவிப்புத் தொகை வழங்கி வைக்கப்பட்டது. இநிகழ்வு கல்குடா மீடியா போரத்தின் ஏற்பாட்டில் ஏறாவூர் நகர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அதன் பணிப்பாளரான ஊடகவியலாளர் எம்.எம்.ரீ.எம்.பாரிஸ் தலைமையில் நடைபெற்றது.







மேற்படி நிகழ்வில் உரையாற்றிய அவர் தெரிவித்ததாவது:

"ஊடகவியலாளர்கள் என்பவர்கள் அனைத்து இன மக்களுக்கும் பொதுவானவர்கள். அவர்கள் நலிவுற்ற, நசுக்கப்பட்ட மக்களின் வார்த்தைகளாக ஜனநாயகத்தின் குரலாக என்றுமே உழைத்துக் கொண்டிருப்பவர்கள்.



மக்கள் எதிர்நோக்குகின்ற எவ்விதமான நன்மை மற்றும் தீமையான காரியங்களாக இருந்தாலும் முன்னின்று களப்பணியாற்றுபவர்கள் ஊடகவியலாளர்கள் என்பதை எவரும் மறுக்க முடியாது.

ஒரு ஊடகவியலாளன் தான் வாழுகின்ற சமூகத்தில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்த முடியும். இன மற்றும் மதவாத,பிரதேசவாத கருத்துகள் எம்மத்தியில் பரந்து விரிந்து காணப்படுகின்றன. இவற்றை இலகுவாக அடையாளம் கண்ட சிலர், முரண்பாடுகளைத் தோற்றுவித்து ஒருவருக்கு ஒருவர் குழப்பத்தை ஏற்படுத்துவதற்கு முற்படுகின்றனர். சமூகங்களைத் துண்டாடும் அளவுக்கு இனங்களுக்கிடையிலான முரண்பாடுகளை தோற்றுவித்து தமது இலக்கை அடைந்து கொள்வதற்கான நிகழ்ச்சி நிரலே எமது நாட்டில் பரவலாக அரங்கேற்றப்பட்டு கொண்டிருக்கிறது.

இவை அனைத்துக்கும் முற்றுப்புள்ளி வைப்பதாயின் குறுகிய எண்ணங்களோடு எமது பணியினைத் தொடராமல் எமது நாடு, நம் நாட்டு மக்கள் என்ற தேசிய ஒருமைப்பாட்டோடு நடுநிலையாக எமது பணியினை தொடர வேண்டும். அதன் மூலமே உண்மையான நல்லிணக்கத்தையும் பன்மைத்துவத்தையும் அதன் அடையாளங்களையும் பாதுகாத்து நிலையான சமாதானத்தை எம்மால் கட்டியெழுப்ப முடியும். அந்த மாற்றத்திற்கான ஆரம்பப் புள்ளியே இந்த மட்டக்களப்பு மாவட்ட தமிழ்,முஸ்லிம் ஊடகவியலாளர்களின் நலன்புரி வேலைத்திட்ட சிநேகபூர்வ ஒன்றிணைவாகும்."

இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.



# இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு; உணவுப் பாதுகாப்புக்கு நாற்று விதைகளின் பங்களிப்பு

















## இலங்கையின் பொருளாதார நெருக்கடியில் உள்ளூர் உற்பத்திகள் இன்றைக்கு மிக அத்தியவசியமானதாக இருக்கிறது....



**யாழ் மாவட்ட கள இணைப்பாளர் அ. இன்பராசா**

இலங்கையின் பொருளாதார நெருக்கடியில் உள்ளூர் உற்பத்திகள் இன்றைக்கு மிக அத்தியாவசியமானதாக இருக்கிறது. மக்களை பொருளாதார நெருக்கடியில் இருந்து பாதுகாப்பதற்காகத் தான் நாற்று விதை வங்கி, சீட்டு முறை, புதிய உணவு வடிவம், பாரம்பரிய உணவின் சுவை போன்ற முக்கியமான புதுப் புதுப் பெயர்களுடன் கிளிநொச்சிக் காவேரிக் கலாமன்றம் பாரிய வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. அ. இன்பராசா, யாழ் மாவட்டத்தினுடைய கள இணைப்பாளர் காவேரிக் கலாமன்றம் மற்றும் சேதனப் பசளை உற்பத்தியில் அதிக ஈடுபாடு கொண்ட கிளிநொச்சி மலையாளபுரத்தில் வசிக்கும் அவர் தினகரன் பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணல்

**கேள்வி:** ***இன்றைய பொருளாதார நெருக்கடியான கால கட்டத்தில் பொது மக்களுக்கு ஊட்டச் சத்திமிக்க ஆரோக்கியமான உணவுகளை வழங்குவதில் உங்களுடைய பங்களிப்பு என்ன?***

**பதில்:** நாற்று விதை வங்கி என்ற விடயத்தை நாங்கள் யாழ்ப்பாணத்தில் அறிமுகம் செய்து சந்தைப்படுத்தி வருகின்றோம். வெளிநாட்டில் இருந்து வருகை தரக் கூடிய இரசாயன விதைகளுக்கு மாறாக, சேதனப் பசளையின் மூலம் உள்ளூரில் உற்பத்தி செய்யும் விதைகளை நட்டு அந்த விதைகளைச் சேகரித்து விதை வங்கிகளைத் திறந்து வருகின்றோம். இந்த விதை வங்கியின் தலைமை அலுவலகம் யாழ்ப்பாணம் சுழிபுரத்தில் திறக்கப்பட்டுள்ளது.

**கேள்வி:** ***இதன் மூலம் எவ்வாறான வேலைத் திட்டங்களை மேற் கொண்டு வருகின்றீர்கள்?***

**பதில்:** ஒரு வேளைக்கு உணவு என்ற செயற்திட்டத்தின் கீழ் யார் யாரெல்லாம் தோட்டச் செய்கையில் ஈடுபடுகின்றார்களோ அவைகளுக்கு அதற்குரிய தேவையான நிதி உதவிகள் செய்து வருகிறோம். தோட்டச் செய்கையில் ஈடுபடும் குடும்பங்களில் ஐந்து பேருக்கு குறைவானளவு எண்ணிக்கையை கொண்டிருந்தால் ரூபாய் 4000 வழங்கப்படும். ஐந்து பேருக்கு அதிகமாக இருப்பார்களாயின் ரூபாய் 7500 வழங்கப்படும். அவர்கள் தங்களுக்குத் தேவையான விரும்பிய பொருட்களை கடைகளில் வாங்க முடியும்.

இந்த திட்டம் ஆறு மாதம் மேற்கொள்ளப்படுகிறது. தோட்டச் செய்கையில் ஈடுபடும் குடும்பங்களுடைய தோட்டங்களை நேரில் சென்று பார்வையிடுவோம். அவர்கள் சிறந்த முறையில் தோட்டச் செய்கையில் ஈடுபட்டால் அவர்கள் நிதியைப் பெற்றுக் கொள்வதற்கான தகுதியுடையவராகின்றார்கள். அவர்கள் எவ்வாறான வேலைத் திட்டங்களை செய்துள்ளார்கள் என்பதை அவதானித்து அவர்களை ஊக்குவிக்கும் வகையில் இந்த நிதி உதவிகள் வழங்கி வருகிறோம்.

**கேள்வி:** ***மக்களை வறிய நிலையில் இருந்தும் அதேவேளையில் போசாக்கற்ற உணவை உட்கொள்வதில் இருந்து தடுப்பதற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுக்கும் நீங்கள் வீட்டுத் தோட்டச் செய்கையாளர்களுக்கு எத்தகைய வழிகளைக் காட்டி வருகின்றீர்கள்?***

**பதில்:** தோட்டத்தில் இரசாயனப் பசளைக்கு பதிலாக சேதனைப் பசளையின் மூலம் தோட்டச் செய்கை பண்ணைப்படுகிறது. அதன் மூலம் சிறந்த அறுவடைகளைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள் எனில் அவர்களுக்கு அந்த நிதி வழங்குவதற்கு தகுதியுடையவராகிறார்கள். இயற்கை உரமான சேதனப் பசளை செய்வதற்கும் நிதி உதவிகள் செய்து வருகின்றோம். சேதனப் பசளையில் ஈடுபாடு உடையவர்களுக்கு அதற்கான வழிகளைக் காட்டிக் கொடுப்பதோடு அதற்குத் தேவையான மூலப் பொருட்களையும் வாங்கி கொடுத்து வருகிறோம்.

சமையலறை கழிவு பொருட்களைக் கொண்டு எவ்வாறு உரம் செய்யலாம் என்ற அடிப்படையிலும் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அவற்றைத் தான் தங்களுடைய வீட்டுத் தோட்டச் செய்கையிலும் அவர்கள் பயன்படுத்த வேண்டும். அதனால் காய்கறிகள் ஆரோக்கியமிக்கதாகவும் வீரியமிக்கதாகவும் வளர்கின்றன. தோட்டச் செய்கையாளர்களுக்கு நாங்கள் நிதி உதவிகள் செய்வதற்கான காரணம் என்னவென்றால் இந்த பொருளாதார நெருக்கடியான காலத்தில் நிவாரணம் உதவி செய்தல் என்ற அடிப்படையில் தான் ஏனைய சமூக அமைப்புக்கள் ஊக்குவித்து வருகின்றன. ஆனால் 'நிவாரணம் வழங்குதல்' எனும் போது எல்லோருக்கு ஒரே அளவிலான உலருணவுப் பொதிகள் வழங்கப்படும். ஆனால் எங்களுடைய முறையென்னவென்றால் நாங்கள் பண உதவியைச் செய்து வருகிறோம். அவர்களுக்குத் தேவையான அளவுக்கு பொருட்களையோ அல்லது விவசாயத் துறைக்குத் தேவையான பொருட்களையோ பெற்றுக் கொள்ள முடியும்.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் அடையாளம் காணப்பட்ட 92 வீட்டுத்தோட்ட விவசாய குடும்பங்களுக்கு இந்த நிதி உதவிகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக மூளாய், சுழிபுரம், பெரிய பிலோ, தொல்புரம், அராலி முதலிய பிரதேசங்களில் இந்த வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அத்தோடு 25 வணக்கத்திற்குரிய பிதாக்களுக்கும் அதன் சபைகளுக்கும் இந்த வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது. ஏனைய சமயத் தலைவர்களுக்கும் இத்திட்டத்தை அறிமுகப்படுத்தி நாங்கள் ஊக்குவிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றோம். இத்தகைய சமயத் தலைவர்கள் தோட்டச் செய்கையில் ஈடுபடும் பட்சத்தில் பொது மக்களும் தானாகவே தோட்டச் செய்கை பண்ணுவதற்கான தூண்டுதல்களில் அதிகம் வாய்ப்புக்கள் ஏற்படலாம் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

பொதுவான வங்கிகள் இருந்த போதிலும் விதைகளுக்கான வங்கி முறை இருக்க வில்லை. அதனை முதன் முதலாக இலங்கையில் அறிமுகப்படுத்திய அமைப்பு கிளிநொச்சிக் காவேரிக் கலா மன்றம் தான் ஆகும். அதாவது 'நாற்று விதை வங்கி' முறையை அறிமுகப்படுத்தி தோட்ட விவசாயத் துறையை ஊக்குவித்து வருகிறது. இத்திட்டம் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வவுனியா, மன்னார், கிளிநொச்சி, அநுராதபுரம், இரத்தினபுரி ஆகிய ஏழு மாவட்டங்களில் இந்த வேலைத் திட்டம் சிறப்பான முறையில் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது. மாவட்ட மட்டத்தில் ஒரு பிரதான விதை வங்கியும், பிரதேச மட்டத்தில் கிளை விதை வங்கிகள் எனத் திறந்து வருகிறோம்.

இந்த விதை வங்கியில் விதைகள் ஊக்குவிப்புக்காக நிதி உதவிகள் செய்கின்ற தோட்டச் செய்கையாளர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படும். அவர்கள் குறித்த விதைகளை விதை வங்கிக்கு கொடுத்துதவ வேண்டும். அவர்களுடைய ஊக்குவிப்பினுடைய பிரதி உபகாரமாக அவர்கள் நட்டு அறுவடை செய்த விதைகளை விதை வங்கிக்கு கொண்டு வந்து கொடுத்தல் வேண்டும். அவர்களுக்காக மாதாந்தம் பொதுக் கூட்டம் நடத்தப்படும். அக் கூட்டத்திற்கு வருகை தருபவர்கள் அவர்களினால் உற்பத்தி செய்யப்பட்டு அறுவடை செய்யப்பட்ட விதைகளை எடுத்து வர வேண்டும்.

**கேள்வி:** ***நீங்கள் விவசாயிகள் மத்தியில் சீட்டு முறையொன்றை அறிமுகப்படுத்தி விவசாய ஊக்குவிப்பு பணி முன்னெடுத்து வருகின்றீர்கள். அது பற்றி கூறுவீர்களா?***

**பதில்:** இந்த நிகழ்ச்சித் திட்டத்தோடு விவாசியிகள் மத்தியில் சீட்டு முறை ஒன்றும் அறிமுகம் செய்யப்பட்டு இருக்கிறது. இது ஒரு முக்கியமான விடயம். அதாவது வீட்டுத் தோட்டச் செய்கை பண்ணிக் கொண்டு போகும் போது சில சிறிய தேவைகள் ஏற்படலாம். எப்பொழுதும் விவசாயிகள் அறுவடை முடிந்த பின்னர்தான் அதன் இலாபத்தையும் முதலையும் பெற்றுக் கொள்வார்கள். இடையில் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது அதனைப் பெற்றுக் கொள்ள இயலாது.

60 பேர் கொண்ட விவசாயிகள் இருப்பார்களாயின் 10 பேர் ஒரு கொண்ட குழு ஒரு பிரிவாக இயங்கும். அதாவது குறித்த கிராமத்தில் 10 பேர் இருப்பார்களாயின் மாதம் ஒரு முறை ஒவ்வொரு கூட்டம் நடைபெறும். அதில் விவாசயம் தொடர்பான குறை நிறைகள் அலசி ஆராயப்படும். குறித்த கூட்டம் நடைபெறும் இடத்திற்கு ஏனைய ஒன்பது அங்கத்தவர்களும் சமுகமளித்தல் வேண்டும். அவருடைய வீட்டுத் தோட்டச் செய்கையை பார்வையிட வேண்டும். அங்கு ஒரு பேச்சுப் போட்டி நடைபெறும். அவர்களுடைய தோட்டம் பற்றி பேச வேண்டும். அந்தப் பத்துப் பேரில் திறன்படப் பேசிய இருவருக்கு பரிசில்களும் வழங்கப்படும். அவ்வாறு பேச்சுப் போட்டியில் முதல், இரண்டாம் இடம்பெறுபவர்களுக்குப் பணப் பரிசில்கள் வழங்கப்படும். அவர்கள் அப்பணத்தையும் விவசாயச் செய்கைக்கு பயன்படுத்த முடியும்.

இதில் விசேட அம்சமாக சீட்டு என்ற விவசாய ஊக்குவிப்பு அறிமுகப்படுத்தப்படுகிறது. குறித்த 10 பேர் வாரம் ஒரு தடவை 250 ரூபாய் கட்டணம் செலுத்த வேண்டும். அப்படியாயின் 2500 ரூபா வரும். அந்த 2500 ரூபாயோடு காவேரிக் கலா மன்றம் மேலும் ரூபாய் 2500 அன்பளிப்பாக வழங்கும். மொத்தம் 5000 ரூபாய் வரும்.

குறித்த 5000 ரூபாய் பணத்தைப் பெற்றுக் கொள்வதற்காக 10 பேர் அங்கத்தவர்களுடைய பெயரை எழுதி குலுக்கப்படும். அதில் யாருக்கு சீட்டுக் கிடைக்கின்றதோ அந்த இடத்தில் வைத்து அந்த 5000 ரூபா வழங்கப்படும். இந்த கூட்டத்திற்கு சமுகமளிப்பவர்கள் 6000 ரூபா உழைத்துக் கொண்டு வீடு செல்லலாம். இந்த முறையின் மூலமும் வீட்டுத் தோட்டச் செய்கையாளர்களுக்கு ஊக்குவிப்புத் திட்டத்தை முன்னெடுத்து வருகின்றோம். இப்பணத்தைப் பயன்படுத்தி தோட்டத்திற்கு தண்ணீர் மோட்டருக்கு மண்ணெண்ணெய் அவசியமே அதை அவர்கள் வாங்கலாம்.

இப்படி இந்த சீட்டு முறை திட்டம் எங்கேயும் இல்லை. அந்தக் கலந்துரையாடலுக்குப் போய் மற்றவர்களுடைய தோட்டத்தைப் பார்த்து தானும் செய்ய வேண்டும் என்ற அதிக ஆர்வத்தை தூண்டுவதற்காகத் தான் இந்த செயற் திட்டத்தை அறிமுகப்படுத்தி மேற்கொண்டு வருகின்றோம்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடியில் உள்ளூர் உற்பத்திகள் இன்றைக்கு மிக அத்தியவசியமானதாக இருக்கிறது. இப்படி மக்களை பொருளாதார நெருக்கடியில் இருந்து பாதுகாப்பதற்காகத் தான் நாற்று விதை வங்கி, சீட்டு முறை , புதிய உணவு வடிவம் போன்ற முக்கியமான தேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதில் சுவை அவை என்றால் பாரம்பரிய உணவுகளை மீட்டெடுத்தல் மற்றையது செலவினைக் குறைத்து எப்படி ஆரோக்கியமான உணவுகளை உண்ணலாம் என்பதாகும். சோறு, ஒரு கறி என்ற அடிப்படையில் உண்ணுதல் ஆகும். அதாவது நிறையக் கீரை வகைகளை ஒன்று சேர்த்து உண்ணுதல் ஆகும். அந்த சோற்றில் பல்வேறுபட்ட கீரை வகைகள் இருத்தல் வேண்டும். கிராம மட்டங்களிலும் இந்த சுவை அவை நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றோம்.

**கேள்வி:** ***நீங்கள் சேதனப் பசளை செய்முறையை ஊக்குவித்து வருகின்றீர்கள் அவை பற்றிக் கூறுவீர்களா?***

**பதில்:** ஆம் நிச்சயமாக.சேதன பசளையை தயாரிக்கும் முறை தொடர்பில் விரிவான விளக்கங்களை விவசாயிகளுக்கு வழங்கி ஊக்குவிப்பும் வழங்குகின்றோம். தயாரிக்கப்பட்ட சேதன பசளை விற்பனையும் செய்யப்படுகின்றது. இரு கிலோ சேதனைப் பசளை 100 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

இது இந்தியாவில் மாட்டு முட்டை 25 ரூபாவும் மாட்டுச் சாணம் 100 லீட்டருக்கும் விற்பனை செய்கிறார்கள். இலங்கை நாட்டில் இதற்குப் பெறுமதி இல்லை.

இத்தகைய வேலைத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு ஆரம்பத்தில் காவேரிக் கலா மன்றம் தண்ணீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. தண்ணீர் இன்றி எவையும் செய்ய முடியாது. இந்த கொம்பஸ் சேதன வேலைத் திட்டத்தை முன்னெடுக்க காவேரிக் கலா மன்றம் தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்குகின்றது.

வீட்டுத் தோட்டச் செய்கையாளர்கள் 10 பேரைத் தெரிவு செய்து விதைகளை வழங்கி ஊக்கு வித்து வருவது போன்று சேதனப் பசளைகளை செய்கை பண்ணுபவர்களை ஊக்குவிக்கும் பணிகளிலும் காவேரிக் கலா மன்றம் ஈடுபட்டு வருகின்றது. சேதன பயிற்சி முறையில் நீண்ட காலம் அனுபவங்களைப் பெற்ற விவசாயிகளை ஈடுபடுத்தி இத்திட்டத்தை திறன்பட காவேரிக் கலா மன்றம் செய்து வருகின்றது.

சேதனப் பசளையின் மூலம் செய்கை பண்ணப்படும் ஒரு பிடி முளைக் கீரையை 100 ரூபாவுக்கு விற்பனை செய்யலாம். ஏனைய கீரை வகைகள் 50 ரூபாவுக்குத் தான் விற்பனை செய்யலாம். இந்தக் கீரையை சந்தைக்கு கொண்டு போனால் வியாபாரிகள் நல்ல விலை கொடுத்து வாங்கி விற்பனை செய்து வருகிறார்கள். ஏனைய கீரை வகைகள் வியாபாரிகள் மிகக் குறைவாகத் தான் வாங்குவார்கள். இதன் தண்டு நன்றாக வளர்ந்திருக்கும் மிக உயரமாகவும் இருக்கும். மற்றையவர்களுடைய கீரை அப்படி வளர்ந்து இருக்காது. சேதனப் பசளையின் மூலம் உற்பத்தி செய்யப்படும் தண்டு நன்கு உடையும். பிஞ்சாகவே இருக்கும். பயிற்றை. கத்தரி கொட்டவரை, வெண்டி, மூக்குத்தி அவரை எனப் பாரம்பரிய உணவுகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

இந்த விதைகளை விற்பனை செய்வதற்கு இராக்கைகள் நிர்மாணித்துக் கொடுத்து விற்பனை செய்வதற்கான ஒழுங்குகளை காவேரிக் கலா மன்றம் ஏற்பாடு செய்து வருகின்றது.

நேர்காணல்
இக்பால் அலி

### இலஞ்சம் பெற்றாரரென்ற குற்றச்சாட்டு:

# அமைச்சர் நிமல் தொடர்பாக இலஞ்ச, ஊழல் ஆணைக்குழு விசாரணை ஆரம்பம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவுக்கு எதிரான குற்றச்சாட்டு தொடர்பில் இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு நேற்று விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. ஊழலுக்கு எதிரான முன்னணியினர் மேற்படி ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்துள்ள முறைப்பாட்டுக்கமையவே நேற்று அதுதொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவிடம் வாக்குமூலமொன்றை பதிவுசெய்வதற்காக அவர் விரைவில் ஆணைக்குழுவுக்கு அழைக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலைய நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளும் ஜப்பானின் தாய்சே நிறுவனத்திடமிருந்து இலஞ்சம் பெற்றுக்கொண்டுள்ளார் எனத் தெரிவிக்கும் சம்பவம் தொடர்பில் மேற்படி முறைப்பாடு முன்வைக்கப்பட்டுள்ளது. அந்த விடயம் தொடர்பில் இந் நிறுவனத்தின் பிரதிநிதிகள் மற்றும் இலங்கையிலுள்ள ஜப்பானிய தூதுவர் காரியாலய அதிகாரிகளிடமும் விடயங்களைப் பெற்றுக்கொள்வதற்கு இலஞ்ச ஊழல் ஆணைக்குழு எதிர்பார்த்துள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

# 3,120 மெ.தொன் லாப் கேஸுடன் கப்பல் நேற்று நாட்டுக்கு வருகை

## விநியோக நடவடிக்கைகள் விரைவில்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

சமையல் எரிவாயு 3,120 மெற்றிக் தொன் தொகையுடன் கப்பலொன்று நேற்று ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடைந்துள்ளதாக லாப் கேஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

நேற்று முற்பகல் மேற்படி கப்பல் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடைந்துள்ளதுடன் கப்பலிலிருந்து சமையல் எரிவாயுவை இறக்கும் பணிகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த நிறுவனம் தெரிவித்தது.

வழமையான நடவடிக்கைகள் நிறைவு பெற்றதும் மிக விரைவாக அதனை சந்தைக்கு விநியோகிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

நாட்டில் கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக லாப் கேஸுக்கான

தட்டுப்பாடு நிலவி வருகின்றது. இந்த நிலையில் லாப் கேஸ் பாவனையாளர்கள் பெரும் எதிர்பார்ப்புடன் காத்திருந்த இச்சந்தர்ப்பத்தில் நேற்று மேற்படி கப்பல் நாட்டை வந்தடைந்துள்ளது. (ஸ)

### இந்தியாவிலிருந்து மேலும்

# 21,000 மெ.தொன் உரம் ஓரிரு தினங்களில் நாட்டுக்கு வருகிறது

**லோரன்ஸ் செல்வநாயகம்**



இந்திய கடன் திட்டத்தின் கீழ் இலங்கைக்கு வழங்கப்படவுள்ள யூரியா உரத்தின் 21,000 மெற்றிக் தொன் உரத்துடனான இரண்டாவது கப்பல் ஓரிரு தினங்களில் கொழும்பு துறைமுகத்தை வந்தடையுமென விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இந்தியாவிடமிருந்து கிடைக்கும் உரத்துடன் தற்போது பெரும்போகத்துக்காக பகிர்ந்தளிக்கப்பட்டு மீதமடைந்துள்ள யூரியா உரத்தையும் சேர்த்து நெல், சோளம், தேயிலை மற்றும் கிழங்கு பயிர்ச்செய்கை விவசாயிகளுக்கு அதனைப்பெற்றுக் கொடுக்க தீர்மானித்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். இந்திய கடன் திட்டத்தின் கீழ் இலங்கைக்கு 65,000 மெற்றிக் தொன் உரத்தை வழங்குவதற்கு இந்தியா நடவடிக்கையெடுத்துள்ளது. அதன் முதல் தொகையாக 44,000 மெற்றிக் தொன் ஏற்கனவே நாட்டுக்கு கிடைத்துள்ளதாகவும் மேலும் 21,000 மெற்றிக் தொன் உரம் இரண்டொரு தினங்களில் நாட்டுக்கு கிடைக்குமென்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பிரதான நகரங்களுக்கு...

தெரிவித்துள்ளார். அது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அமைச்சர்,

பதுளை வரையிலான வார இறுதி அதிசொகுசு ரயில் சேவைக்கு தற்போது பெரும் கேள்வி நிலவுகிறது. எதிர்வரும் இரண்டு வாரங்களுக்கான ஆசன ஒதுக்கீடு தற்போது நிறைவு பெற்றுள்ளது.

மேலும் ரயில் சேவைகளை நடத்துவதனால் எஞ்சின் மற்றும் ரயில் பெட்டிகளுக்கான தேவை காணப்படுகிறது.

தனிப்பட்ட போக்குவரத்துகளுக்காக பெருமளவு செலவுகளை ஏற்றுக் கொள்ள நேர்வதால் உல்லாசப் பிரயான விசேட ரயில் சேவைகளை வார இறுதியில் நடத்துமாறு ரயில்வே திணைக்கள அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எல்ல அதி விசேட சொகுசு ரயில் வெள்ளிக்கிழமை இரவு கொழும்பிலிருந்து புறப்பட்டு சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமையின் பின்னர் திங்கட்கிழமை மீண்டும் கொழும்புக்கு பயணிக்கும் வகையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. அந்த ரயிலில் தற்போது பெருமளவு பிரயாணிகள் பயணிப்பதால் ஆசனங்கள் ஒதுக்குவதிலும் நெருக்கடிகள் தோன்றியுள்ளன.

அதற்கிணங்க விரைவில் கதிர்காமத்திற்கு பயணிக்கும் வகையில் கொழும்பிலிருந்து பெலியத்தைக்கு விசேட ரயில் சேவையை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. அந்த ரயிலில் பயணிப்பவர்கள் பெலியத்தையிலிருந்து கதிர்காமத்திற்கு பயணிப்பதற்கு விசேட அரசாங்க மற்றும் தனியார் பஸ் இணைந்த சேவைகளை நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று அனுராதபுரத்திற்கும் கண்டிக்குமான வார இறுதி விசேட ரயில் சேவைகளை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அதை வேளை ஏற்கனவே பதுளைக்கும் யாழ்ப்பாணத்திற்குமான விசேட சொகுசு ரயில் சேவைகள் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சகல பல்கலைக்கழகங்களும் விரைவில் மீள ஆரம்பம்

## பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழு எதிர்பார்ப்பு



நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து பல்கலைக்கழகங்களையும் விரைவில் மீள ஆரம்பிப்பதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு எதிர்பார்த்துள்ளது.

இது தொடர்பில் தீர்மானிப்பதற்காக எதிர்வரும் திங்கட்கிழமை அனைத்து உப வேந்தர்களும் அழைக்கப்பட்டுள்ளதாக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர், பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

இந்த கலந்துரையாடலின் பின்னர் பல்கலைக்கழகங்களை மீள ஆரம்பிப்பது பற்றி தீர்மானிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் மருத்துவ மற்றும் இணை சுகாதார பீடங்களின் செயற்பாடுகள் தற்போதும் இடம்பெறுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஏனைய பீடங்களை சேர்ந்த சில மாணவர்கள் பல்கலைக்கழகங்களிலேயே தங்கியிருந்தும், மேலும் சிலர் வீடுகளுக்குச் சென்றும் கற்றல் செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர், பேராசிரியர் சம்பத் அமரதுங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

## தோட்டப்புற மாணவர்களின்... 03ஆம் பக்கத் தொடர்

ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிய விபரம் அவசியமாகிறது. அதை மாற்றி அமைத்து தமது மூதாதையினர் தோட்டங்களில் பணிப்புரிந்திருந்தால் அவர்களுடைய குடும்பத்தை சேர்ந்தவர்களுக்கு கட்டாயம் அனுமதியை வழங்க வேண்டும். அதே போன்று தோட்டப் பாடசாலைகளில் மாணவர் ஒருவர் கல்வி கற்றிருப்பதற்கான அத்தாட்சியை உறுதிப்படுத்தினால் ஸ்ரீபாத கல்வியற் கல்லூரியில் கல்வி கற்பதற்கான வாய்ப்பை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை கல்வி அமைச்சிடம் இ.தொ.கா. தலைவர் செந்தில் தொண்டமான் முன்வைத்துள்ளார்.

## யாழ். தேவிக்குள்... 03ஆம் பக்கத் தொடர்

ரயில் பெட்டியின் கண்ணாடிகள் சேதமடைந்தன. உடனடியாக செயற்பட்ட ரயில்வே பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், அவர்களைக் கைது செய்து மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். நால்வரும் பயணிகளை ஆசனங்களிலிருந்து எழும்புமாறு வற்புறுத்தி இருக்கைகளை கோரியதால் மோதல் ஏற்பட்டுள்ளதாக பாதுகாப்பு தரப்பினர் தெரிவித்தனர். இதன்போதே அவர்கள் பயணிகளுடன் மோதலில் ஈடுபட்டதாகவும் தெரிய வந்துள்ளது.

## விழா ஏற்பாடுகளுக்கு அமைச்சரவை...

உள்ளூராட்சி அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

பிரதமர் தினேஷ் குணவர்த்தன, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்தன, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார விவகாரங்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க,

மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ்.

## நாட்டின் தற்போதைய முன்னேற்றங்கள்;...

வெளிவிவகார அமைச்சில் (15) தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்களை சந்தித்த போதே இவ்வாறு விளக்கமளித்தார்.

சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினம், அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்த்தன மற்றும் நிதிச் செயலாளர் மஹிந்த சிறிவர்தன ஆகியோரும் விளக்கமளிக்க பங்களித்தனர்.

அரசியலமைப்புக்கமைவாக பதவிகளை ஜனநாயக ரீதியாக மாற்றுவது உட்பட இலங்கையின் தற்போதைய அபிவிருத்திகளை அமைச்சர் சப்ரி கோடிட்டுக் காட்டினார். மக்களுக்கான அதிக ஸ்திரத்தன்மைக்கு வழிவகுத்த சில உடனடி சவால்களை எதிர்கொள்வதில் ஏற்கனவே காணக்கூடிய முன்னேற்றத்தின் பல பகுதிகளை அவர் சுட்டிக் காட்டினார்.

அரசியல் முன்னணியில், சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து அமைச்சர் விளக்கினார். 19 ஆவது திருத்தத்தை திறம்பட மீட்டெடுக்கும் அரசியலமைப்பின் 22 ஆவது திருத்தம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு பாராளுமன்றத்திலுள்ளதையும் அவர் நினைவு கூர்ந்தார். இந்த நடவடிக்கை பாராளுமன்ற ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்கும், அரசாங்கத்தின் நிர்வாகக் கிளைகளின் மேற்பார்வைக்கும் மற்றும் முக்கிய நிறுவனங்களின் சுதந்திரத்துக்கும் பங்களிக்கும். பயங்கரவாத தடைச் சட்டத்தின் விரிவான மறுஆய்வுக்காக தொடங்கப்பட்டுள்ள முன்னேற்றத்தையும் அவர் விளக்கினார். மக்களின் பொருளாதார மற்றும் சமூக உரிமைகளை உறுதி செய்வதற்கும், மேலும் ஏற்றத்தாழ்வுகளைத் தடுப்பதற்கும், தற்போதைய பொருளாதார சூழ்நிலையின் பாதகமான தாக்கத்தை மக்கள் தொகையின் பாதிக்கப்படக்கூடிய பிரிவுகளைத் தணிக்க அரசாங்கம் கவனம் செலுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அண்மைய ஆண்டுகளில் நாட்டில் முன்னெப்போதும் இல்லாத சூழ்நிலை நிலவிய போதிலும், கோவிட்19 தொற்று நோய்க்குப் பின்னர், உள்நாட்டு செயல்முறைகள் மூலம் மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கத் துறையில் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். மனித உரிமைகள், நீதி மற்றும் சமத்துவம் தொடர்பான விஷயங்களில் மேலும் முன்னேற்றமடையும் வகையில் ஒருமித்த கருத்தை உருவாக்கும் பணியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. ஜெனீவாவில் எதிர்வரும் 51 ஆவது கூட்டத்தொடரில் மனித உரிமைகள் பேரவையுடனான ஆக்கபூர்வமான ஈடுபாட்டை இலங்கை தொடருமென வெளிவிவகார அமைச்சர் வலியுறுத்தினார்.

நிதிச் செயலாளர் சிறிவர்த்தன, பாதகமான தாக்கங்களைத் தணிக்கும் நோக்கில், பாதிப்புக்குள்ளான குழுக்களுக்கு அரசாங்கம் மேற்கொண்டுள்ள சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து கவனம் செலுத்தி, தற்போதைய பொருளாதார நிலைமை குறித்து விளக்கமளித்தார்.

அண்மையில் இடம்பெற்ற போராட்டங்கள் மற்றும் அவசர காலச் சட்டம் அமுல்படுத்தப்பட்டமை தொடர்பான அரசாங்கத்தின் பதிலளிப்பு தொடர்பான சட்ட கட்டமைப்பை சட்ட மாஅதிபர் விளக்கினார். ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் கட்டமைப்பின் பல நடைமுறைகள் மற்றும் செயல்முறைகளுடன் இலங்கையின் தொடர்ச்சியான மற்றும் விரிவான ஈடுபாட்டை வெளிவிவகார செயலாளர் விஜேவர்த்தன எடுத்துரைத்தார்.

விளக்கக்காட்சிகளைத் தொடர்ந்து நடைபெற்ற கலந்துரையாடலின் போது, ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் ஹனா சிங்க ர்ஹம்டி, சவால்களை எதிர் கொள்வதிலும், பாதிக்கப்படக்கூடிய குழுக்களின் சமூகப் பாதுகாப்பு வலையை விரிவுபடுத்துவதிலும் அரசாங்கத்தின் தொடர்ச்சியான முயற்சிகளுக்குப் பாராட்டு தெரிவித்தார்.

## சர்வதேசம் ஏற்றுக்கொண்டுள்ள...

புலம்பெயர் தமிழ் அமைப்புகள் மீதான தடை நீக்கப்பட்டதாக கூறுவது சிலரது தனிப்பட்ட கருத்தாகும் என்றும் தெரிவித்தார்.

அது தொடர்பில் அமைச்சர் மேலும் தெளிவுபடுத்துகையில்:

1968 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் சட்ட விதிகளுக்கு அமையவே பாதுகாப்பு அமைச்சினால் இந்த அமைப்புகள் மீதான தடை நீக்கம் மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கமையவே 06 புலம்பெயர் தமிழ் அமைப்புகளின் மீதான தடை நீக்கப்பட்டது. அத்துடன் அண்மைக்காலமாக மேற்படி அமைப்புகளின் செயல்பாடுகள் தொடர்பில் தொடர்ச்சியாக தீவிர கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்ட பின்னரே இந்த தடை நீக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## நாவலப்பிட்டி அல்ஷபா ஆரம்ப...

மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தின் கீழ் நாவலப்பிட்டி அல்ஷபா வித்தியாலயத்தின் ஆரம்ப பாடசாலை கட்டட நிர்மாண பணிகளுக்காக மேற்படி காணி ரயில்வே திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

ரயில்வே திணைக்களத்திற்கு சொந்தமான நாவலப்பிட்டி ரயில் நிலையத்தின் களஞ்சியசாலை அமைந்துள்ள காணியிலிருந்து இரண்டு ஏக்கர் காணி மேற்படி பாடசாலைகளுக்காக வழங்கப்பட்டுள்ளது. பாடசாலையின் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துவரும் நிலையில் கட்டடங்கள் பற்றாக்குறையை நிவர்த்திசெய்யும் வகையிலேயே கட்டட நிர்மாணத்திற்காக முறைப்படி அந்தக் காணி விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

## சிறுவர் அபிவிருத்தி நிலையங்களுக்கான...

ஆனால், தேசிய அளவில் அங்கீகரிக்கப்பட்ட வழிகாட்டுதல் தொடர்பில் குறைபாடுகள் நிலவுவது குறித்தும் கண்டறியப்பட்டுள்ளது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் முன்வைக்கப்பட்டுள்ள இந்த தேசிய வழிகாட்டல்கள் நாடு முழுவதிலும் உள்ள அனைத்து சிறுவர் அபிவிருத்தி நிலையங்களிலும் நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. சிறுவர் பராமரிப்பு துறையுடன் தொடர்புடைய அனைத்து தரப்பினர்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் குறித்த துறைசார் நிபுணர்களின் மேற்பார்வை மற்றும் வழிகாட்டுதலின் கீழ் இந்த தேசிய வழிகாட்டுதல்கள் மற்றும் குறைந்தபட்ச தரநிலைகளை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சிறுவர் மேம்பாட்டு மையங்களுக்கான தேசிய வழிகாட்டுதல்கள் மற்றும் குறைந்தபட்ச தரநிலைகளின் ஆரம்ப வரைவு தயாரிக்கும் பணி 2013 இல் ஆரம்பிக்கப்பட்டது. இது சர்வதேச அளவில் இருக்கும் குறைந்தபட்ச தரநிலைகளை ஆய்வு செய்து ஆரம்பிக்கப்பட்டதுடன், அதன் பின்னர், பல கட்டங்களாக சிறுவர் மேம்பாடு, சட்டம், சுகாதாரம், சிறுவர் பாதுகாப்பு உள்ளிட்ட வழிகாட்டுதல்கள் மற்றும் தரநிலைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இந்த தேசிய வழிகாட்டுதல்கள் மற்றும் தரநிலைகள், இத்துறையில் உள்ள வல்லுநர்கள் மற்றும் சிறுவர் மேம்பாட்டு மையங்களில் பணிபுரியும் அதிகாரிகள் மற்றும் பணியாளர்களின் பங்களிப்புடன் தயாரிக்கப்பட்டுள்ளன. சிறுவர் பராமரிப்பு தொடர்பான ஆறு முக்கிய அம்சங்கள் தேசிய வழிகாட்டுதல்கள் மற்றும் தரநிலைகளின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன.

சிறுவர் மேம்பாட்டு மையங்களை நிறுவுதல் மற்றும் பதிவு செய்தல், சிறுவர் மேம்பாட்டு மையங்களின் பணியாளர்கள், நிறுவனமயமாக்கல் மற்றும் சிறுவர்களை மீண்டும் சமூக மயப்படுத்தல், சுற்றுச்சூழல் மற்றும் பாதுகாப்பு தர நியமங்கள், சிறுவர் ஆரோக்கியம், நலன்புரி மற்றும் முறைப்பாடுகளைக் கையாளுதல், மையங்களை சோதனையிடல் மற்றும் கண்காணித்தல் ஆகியவற்றை இந்த தரநிலைகளின் அடிப்படையில் பரிசீலிக்க வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

## செப்டம்பர் மாதம் முதல்...

அதிகரிப்பின்படி வீடுகளுக்கான நீர் கட்டணம் நூற்றுக்கு 60 வீதத்திலிருந்து 70 வீதம் வரை அதிகரிக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க வர்த்தக நிறுவனங்களுக்கான நீர் கட்டணம் அதிகரிக்கப்படவுள்ளதாகவும் அதே வேளை வர்த்தக நிறுவனங்களுக்காக தற்போது அறவிடப்படும் சேவைக் கட்டணத்தை 50 ரூபா முதல் 300 ரூபா வரை அதிகரிக்க தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நீர் கட்டணமானது இறுதியாக கடந்த 2012 ஆம் ஆண்டிலேயே அதிகரிக்கப்பட்டது.கடந்த பத்து வருடங்களில் உற்பத்திச் செலவுகள் வெகுவாக அதிகரித்துள்ளன. அதனைக் கவனத்தில் கொண்டே நீர் கட்டணத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அரச நிறுவனங்களுக்கு புதிய...

அமைச்சரவை செயலாளர் டபிள்யூ.எம்.டி.ஜே. பெர்னாண்டோ ஆகியோர் செயற்படுவார்கள்.

இந்தக் குழுவின் செயலாளராக ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் சமிந்த குலரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

அரச கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் அரச நிறுவனங்களின் தலைவர் மற்றும் பணிப்பாளர்கள் பதவிகளில் மாற்றம் செய்ய வேண்டுமாயின், நியாயமான காரணங்களுடன் இந்தக் குழுவிடம் பரிந்துரைகளைச் சமர்ப்பித்து முன் அனுமதி பெறுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

முன் உடன்பாடுகளின்றி, அரச கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் அரச நிறுவனங்களின் தலைவர் மற்றும் பணிப்பாளர் பதவிகளில் மாற்றம் செய்யுமாறு ஜனாதிபதியிடம் அவ்வப்போது விடுக்கப்பட்ட எழுத்து மூலமான கோரிக்கைகள் மற்றும் சில முறைசாரா நியமனங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தி இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஜனாதிபதி செயலாளரின் கையொப்பத்துடன் அனைத்து அமைச்சுகளின் செயலாளர்களுக்கும் நேரடியாக கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுடன், அது தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பிரதமரின் செயலாளர் மற்றும் நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சுக்கும் இக்கடிதத்தின் பிரதிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## ஹம்பாந்தோட்டை துறைமுகத்துள்...

கொள்வதற்காகவே உலகப் பிரசித்தி பெற்ற இந்தக் கப்பல் ஹம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகத்தை வந்தடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 22 ஆம் திகதிவரை இந்தக் கப்பலுக்கு ஹம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகத்தில் நங்கூரமிட்டு சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் கப்பல் கடந்த 11 ஆம் திகதி தொடக்கம் 17 ஆம் திகதி வரையிலான காலப் பகுதியில் ஹம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வருகை தர திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் ஒருசில நாடுகள் எதிர்ப்பை தெரிவித்ததை தொடர்ந்து இதன் வருகை தாமதமடைந்தது. இலங்கை அரசாங்கம் இந்தக் கப்பலுக்கு அனுமதி வழங்கியதை தொடர்ந்து சர்ச்சை முடிவுக்கு கொண்டுவரப்பட்டு கப்பல் துறைமுகத்தை வந்தடைந்தது.

2017 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்ட 222 மீற்றர்நீளமும் 25.2 மீற்றர்அகலமும் கொண்ட இந்தக் கப்பலில் 2,000 இற்கும் மேற்பட்டோர் கடமையில் ஈடுபட்டுள்ளனர். இதன் கொள்ளளவு 11000 தொன் என மதிப்பிடப்பட்டுள்ளது. அதி நவீன தொழிநுட்பவசதிகளுடன் தொலைநோக்கி மற்றும் ஏவுகணைகளையும் கொண்டு இந்த ஆய்வுக் கப்பல் காணப்படுகின்றது. மேற்கத்திய நாடுகள் இந்த கப்பலை சீனாவின் உளவுக் கப்பல் என வர்ணிப்பதோடு சமுத்திரத்தின் ஆழம் மற்றும் நீர்மூழ்கிக் கப்பல்களின் செயற்பாடுகள் என்பனவற்றை அவதானித்து அவற்றிற்கு எதிராக செயற்படமுடியும் என நம்பப்படுகிறது.

ஆனாலும் இந்தகப்பலுக்கு ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் தங்கியிருக்கும் காலப்பகுதியில் இப்பிரதேசத்திலும் அயல் பிரதேசங்களிலும் எவ்வித ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

## புதிய மூன்று வகை மருந்துகள்...

நிறைவேற்றிக் கொள்ள முடிந்துள்ளதாக சுகாதார அமைச்சர் கலாநிதி கெஹெலிய ரம்புக்வெல்ல சுட்டிக்காட்டினார்.

இதன் காரணமாக மருந்துகளை இறக்குமதி செய்வதற்கு செலவிடப்படும் பெருமளவு பணத்தை சேமிக்க முடியுமெனவும் டொலர் பிரச்சினைக்கு இதன் மூலம் தீர்வு கிடைக்குமென எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தினால் உற்பத்தி செய்யப்பட்ட மூன்று மருந்து வகைகளை சந்தைக்கு வெளியிடும் நிகழ்வு இரத்மலானையிலுள்ள கூட்டுத்தாபன வளாகத்தில் நடைபெற்ற போதே அமைச்சர் இதனை தெரிவித்தார்.

தைரொட்சின் குறைப்பாட்டுக்காக பெற்றுக் கொடுக்கப்படும் Levothyroxion 50 mg, இரைப்பை அமிலத்தன்மையை தடுக்க உதவும் Omeprazlo 20mg, வலி நிவாரணியாக பயன்படுத்தப்படும் Mefenamic Acid 50mg ஆகிய மருந்து வகைகளே சந்தைக்கு உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டுள்ளன. இவ் மருந்து வகைகள் அரச வைத்தியசாலைகள் மற்றும் தனியார் பிரிவினருக்கு வழங்கப்படுவதோடு இது இந்நாட்டின் மருந்து உற்பத்தித் துறைக்கு கிடைத்த உயர் வெற்றியாகுமென அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் தெரிவிக்கின்றது.

நாட்டுக்குத் தேவையான அனைத்து மருந்து வகைகளையும் தேசிய ரீதியாக உற்பத்தி செய்ய இயலுமானால் அது வெற்றியாகும் எனவும் அதற்காக அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்துக்குரிய பொறுப்பு முதன்மையானதெனவும் அமைச்சர் அங்கு சுட்டிக்காட்டினார்.

அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபன தலைவர் டொக்டர் உத்பலா இந்திரவங்ச தனது கருத்தை தெரிவிக்கையில்,

தற்போது இந்நாட்டில் வருடத்துக்கு தேவையான மாத்திரைகள் மற்றும் கெப்ஸ்யூல்கள் 3,040 மில்லியன் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் உற்பத்தி செய்வதாகவும் அவற்றை விசேடமாக அரச வைத்தியசாலைகள் ஊடாக நோயாளிகளுக்கு பெற்றுத் தருவதாகவும் தெரிவித்தார். எதிர்காலத்தில் மேலும் 50 வகையான மருந்து வகைகளை உற்பத்தி செய்வதை இலக்காகக் கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இந்நிகழ்வில் சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக ஸ்ரீ சந்திரகுப்த உள்ளிட்ட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டார்கள்.

## பிரித்தானிய யுவதியின்...

நேற்று இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

பிரிட்டன் யுவதி மருத்துவ தேவைக்காக விசா பெற்றுக் கொண்டு இலங்கையில் தங்கியுள்ளாரென தெரிவித்திருந்த குடிவரவு குடியகல்வு திணைக்களம் 15 ஆம் திகதிக்குள் அவர் நாட்டைவிட்டு வெளியேறவேண்டுமென காலஅவகாசம் வழங்கியிருந்தது. அந்தத்தீர்மானத்தை செல்லுபடியற்றதாக்கக் கோரியே பிரிட்டன் யுவதி நீதிமன்றத்தில் மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார். அந்த மனு நீதிமன்றத்தினால் நேற்று நிராகரிக்கப்பட்டுள்ளது. காலிமுகத்திடல் ஆர்ப்பாட்ட சம்பவங்களை சமூக வலைத்தளம் மூலம் பிரசாரப்படுத்தினாரென்ற குற்றச்சாட்டு அவர் மீது சுமத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## காலிமுகத்திடலில் இனி...

ஆர்ப்பாட்டங்களை நடத்த முடியாது என நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் பிரசாத் ரணவீர கூறியுள்ளார்.

“ காலிமுகத்திடலில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் அரசுக்கு சொந்தமான பகுதியில் நாங்கள் புற்களை வளர்த்திருந்தோம். ஆர்ப்பாட்ட நடவடிக்கையால் அவை முற்றாக சேதமடைந்துள்ளன. தற்போது அதனை மீண்டும் அமைக்க வேண்டியுள்ளது. காலிமுகத்திடலுடன் இணைக்கப்பட்டுள்ள புற்தரையாக பராமரித்துச் செல்லவே நாங்கள் எதிர்பார்த்துள்ளோம்” என பிரசாத் ரணவீர தெரிவித்துள்ளார்.

மேலும் எதிர்காலத்தில் இந்த பகுதியை எந்த தரப்பிற்கு குத்தகைக்கு வழங்கவோ, முதலீடுகளுக்காக ஒதுக்கவோ திட்டங்கள் இல்லை எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.




தேசியக் கல்வியற் கல்லூரிகளுக்கு விண்ணப்பம் கோரல்

# சப்ரகமுவ மாகாண மாணவர்களுக்கான அநீதிக்கு செந்தில் தொண்டமானால் தீர்வு

**அவிசாவளை நிருபர்**



தேசியக் கல்வியற் கல்லூரி விண்ணப்பம் கோரலில் சப்ரகமுவ மாகாண மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் செந்தில் தொண்டமான் இப்பிரச்சினையை கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்தவின் கவனத்திற்கு கொண்டுவந்ததையடுத்து சாதகமான முடிவுகள் எட்டப்பட்டதாக செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

தேசிய டிப்ளோமா பாடநெறியைப் பயில்வதற்காக 2019ஆம் ஆண்டு மற்றும் 2020ஆம் ஆண்டு க.பொ.த உயர்தர பெறுபேற்றின் அடிப்படையில் பயிலுனர்களின் இரு தொகுதியினரை ஒரே தடவையில் தேசியக் கல்வியற் கல்லூரிகளுக்கு உள்வாங்கும் வர்த்தமானி அறிவித்தலில் சப்ரகமுவ மாகாண மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளமை தொடர்பாக, கேகாலை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களை சேர்ந்த தமிழ்மொழி மூல பாடசாலைகளின் அதிபர்கள் இ.தொ.கா உபசெயலாளர் ரூபன் பெருமாளிடம் கோரிக்கை முன்வைத்ததிற்கு அமைய ரூபன் பெருமாள் இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமானின் கவனத்திற்கு கொண்டுவந்ததையடுத்து இப்பிரச்சினைக்கு தீர்வு கிடைக்க பெற்றுள்ளது.

அதற்கமைய நேற்று கல்வியைச்சரின் பிரத்தியேக செயலாளர் மற்றும் கல்வி அமைச்சின் ஆசிரியக் கல்விக்கான ஆணையாளர், பெருந்தோட்டப் பாடசாலைகளின் அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளர் மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவர் செந்தில் தொண்டமான், உப செயலாளர் ரூபன் பெருமாள், சப்ரகமுவ தமிழ்ப் பாடசாலைகளின் அதிபர்களுக்கிடையிலான விஷேட கலந்துரையாடல் கல்வி அமைச்சில் இடம்பெற்றது.

வர்த்தமானி பிரகாரம் ஸ்ரீபாத தேசிய கல்வியற் கல்லூரிக்கான விசேட நிபந்தனையின் அடிப்படையில் தமிழ்மொழி மூலம் 295பேரும் சிங்கள மொழியில் 120 பேரும் ஆங்கில மொழிமூலம் 20பேரும் உள்ளடங்குகின்றனர். இதன் அடிப்படையில் இவ்விண்ணப்பக் கோரலில் சப்ரகமுவ மாகாணத்தை சேர்ந்த இரத்தினப்புரி, கேகாலை ஆகிய மாவட்ட மாணவர்கள் 56 பேருக்கு மாத்திரமே வாய்ப்பு உள்ளது அநீதியாகும். அடுத்ததாக நாடளாவிய ரீதியில் ஸ்ரீபாத கல்லூரி அல்லாத ஏனைய கல்வியற் கல்லூரிகளுக்கு கோரப்பட்டுள்ள 1630 பேரில் கேகாலைக்கு 3 பேருக்கும், இரத்தினபுரிக்கு 21பேருக்கும் மாத்திரமே வாய்ப்பு உள்ளது. இதன் அடிப்படையில் ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடும்போது சப்ரகமுவ மாகாண மாணவர்களுக்கு பாரிய அநீதி இழைக்கப்பட்டுள்ளது. அதனால் 10 வீத அதிகரிப்பான 45 விண்ணப்பதாரிகளுக்கு வாய்ப்பு வழங்குவதாக உறுதியளிக்கப்பட்டுள்ளது.

## ஹற்றன் மல்லியப்பூ பகுதியில் ரயில் மோதி ஒருவர் மரணம்

**ஹற்றன் விசேட நிருபர்**

கொழும்பு பதுளை பிரதான புகையிரத பாதையில் ஹற்றன் மல்லியப்பூ சந்தி பகுதியில் புகையிரதத்தில் மோதுண்டு நபர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சம்பவம் ஹற்றன் மல்லியைப்பூ சந்தி பகுதியில் நேற்று (16) காலை 11.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கொழும்பிலிருந்து நேற்று அதிகாலை பதுளை நோக்கி புறப்பட்டு வந்த புகையிரத்தில் மோதுண்டே குறித்த நபர் உயிரிழந்துள்ளார். இச் சம்பவத்தில் உயிரிழந்தவர் மஸ்கெலியா அப்கோட் பகுதியைச் சேர்ந்த சிவனு கண்ணியப்பன் வயது 40 என அடையாளம் காணப்பட்டுள்ளார்.


இறந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்நபர் தண்டவாளத்தில் தலையினை வைத்து தற்கொலை செய்து கொண்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹற்றன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கலாநிதி என்.எம்.பெரேராவின் 43ஆவது நினைவு தினம்

**புலத்கொஹுபிட்டிய குறூப் நிருபர்**



முன்னாள் நிதியமைச்சரும் இலங்கை சமசமாஜ கட்சியின் ஸ்தாபக உறுப்பினருமான கலாநிதி என்.எம்.பெரேராவின் 43ஆவது நினைவு தின வைபவங்கள் ஞாயிற்றுக்கிழமை ருவன்வெல்லவில் நடைபெற்றது.

அன்றைய தினம் காலை ருவன்வெல்லவிலுள்ள என்.எம்.பெரேராவின் திருவுருவச் சிலைக்கு கட்சி தொண்டர்களினால் மலர் மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலியும் செலுத்தப்பட்டது. அத்தோடு ருவன்வெல்ல மொரவத்தை முதியோர் இல்லத்திலுள்ள முதியோர்களுக்கு காலை உணவும் மதிய உணவும் வழங்கப்பட்டது.

இதன்போது, ஸ்ரீலங்கா சமசமாஜக் கட்சியின் உறுப்பினரும், முன்னாள் விவசாய பிரதி அமைச்சரும், என். எம். பெரேரா நினைவுக் குழுவின் தலைவருமான வை.ஜி. பத்மசிறி உள்ளிட்ட கட்சி உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

பதினைந்து வருடங்களாக

## மின்சார திருட்டில் ஈடுபட்ட பெண் கைது

**எம்.ஏ. அமீனுல்லா**

தனது வீட்டுக்கு சுமார் 15 வருடங்களாக திருட்டுத்தனமாக மின்சாரத்தை பெற்றுவந்துள்ளதாகக் கூறும் தலத்து ஓயா என்ட்ரேகம, வஹிகல்தெனிய என்ற பிரதேசத்தைக் சேர்ந்த பெண்ணொருவர் மின்சார சபையின் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் குழுவினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மின்சார சபையின் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் படி பொலிஸாரின் உதவியுடன் கைது செய்யப்பட்டுள்ளார்,

குறித்த பெண் வசிக்கும் வீட்டைச் சோதனையிட்ட போது, அவர், மின்சார மீட்டர் இயங்குவதைத் தடுத்து, மோசடியாக மின்சாரம் பெற்றமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பெண் லொத்தர் விற்பனை செய்பவர் என்பதுடன், அவர் வீட்டுக் கட்டணங்களைச் சரிபார்த்த போது மாதாந்தம் மிகக் குறைவான அலகுகளையே செலவிட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

## நவீன உலகில் கணனி கல்வி அத்தியாவசியமானதாகும்

அபூதாலிப் ஸதகா அமைப்பின் பொதுச் செயலாளர்

**மாவத்தகம தினகரன் நிருபர்**



கணனி கல்வி மிகவும் அத்தியாவசியமான ஒன்றாகும். அதன் மூலம் மாணவர் சமூகம் உச்ச பயனை அடைந்து கொள்ள வேண்டும் என்று அபூதாலிப் ஸதகா அமைப்பின் பொதுச் செயலாளர் ஏ. எச். எம். ஆரிப் தெரிவித்தார்.

'தெல்தெனிய திகன ஹிஜ்ராபுர மகா வித்தியாலயத்தின் முத்து' எனும் தொனிப் பொருளில் 30 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் அபூதாலிப் ஸதகா அமைப்பினால் வழங்கப்பட்ட கணனி ஆய்வு கூடத் திறப்பு நிகழ்வும் பாடசாலை அதிபர் எம். ஐ. எம். இஸ்லியாஸ் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்ட அபூதாலிப் ஸதகா அமைப்பின் பொதுச் செயலாளர் ஏ. எச். எம். ஆரிப் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

எங்கள் குடும்ப உறவினர்களின் மூலம் சேகரிக்கப்பட்ட நிதிகளைக் கொண்டே மனிதாபிமான உவிகளைச் செய்து வருகின்றோம். அதற்கென நாங்கள் ஒரு அமைப்பொன்றை உருவாக்கி செயற்பட்டு வருகின்றோம். அந்த வகையில் தான் இந்தக் கணனி இயந்திரங்களை இப்பாடசாலைக்குப் பெற்றுக் கொடுக்க முடிந்தது. குடும்பங்கள் ஒன்றிணைந்து முன்னெடுக்கும் செயற்பாடுகள் யாவும் பலமிக்கதாகும். இந்தக் கணனி இயந்திரங்களை வழங்கி வைப்பது அதில் ஒரு அம்சமாகும்.

குடும்பங்கள் ஒன்று பட்டால் வேண்டிய உதவிகளைச் செய்ய முடியும். இன, சமய பேதங்கள் அவசியமில்லை. மக்களுடைய தேவைகளைக் கருத்திற் கொண்டு மனிதாபிமான உதவிகள் செய்து வருகின்றோம் என்றார்.

## மீமுரே புஸ்ஸே கால்வாயில் பாட்டியும் பேரனும் நீரில் மூழ்கி மரணம்

**எம்.ஏ.அமீனுல்லா**

மீமுரே புஸ்ஸே கால்வாயில் நீராடச் சென்ற எட்டு வயது சிறுவன் தனது பாட்டியுடன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக உடுதும்பர பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கெமுனு புரகுடா ஓயாவைச் சேர்ந்த இந்தச் சிறுவன் கடந்த 12 நாட்களுக்கு முன்னர் தனது பாட்டியைப் பார்ப்பதற்காக தனது தந்தையுடன் மீமுரேக்கு சென்றுள்ளார். அன்றைய தினம் மாலை, பாட்டியுடன் கால்வாயில் நீந்திக் கொண்டிருந்த போது, சிறுவன் பாறையில் தவறி விழுந்து அடித்துச் செல்லப்பட்டான்.

அப்போது, குழந்தையை காப்பாற்ற பாட்டி முயன்றபோது, அவரும் அடித்துச் செல்லப்பட்டார்.

ஏ.ஆரியவதி (வயது 59) மற்றும் அவரது பேரன் தெனுகா சத்சர மிஹிரங்க (08) ஆகிய இருவரும் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ஹற்றன் எப்போட்ஸிலி

## கமுகுவத்தை தோட்ட குடியிருப்பில் தீ

**ஹற்றன் விசேட, நோட்டன் பிரிட்ஜ் நிருபர்கள்**



ஹற்றன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட எப்போட்ஸிலி தோட்ட கமுகுவத்தை பிரிவில் நேற்றுக் காலை ஏற்பட்ட தீவிபத்தில் ஆறு வீடுகள் சேதமடைந்துள்ளன.

இதில் ஒரு வீடு முற்றாக சேதமடைந்துள்ளதாகவும் ஏனைய வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். காலை வேளையில் இந்த தொடர் குடியிருப்புக்களில் உள்ளவர்கள் வேலைக்குச் சென்றிருந்தமையினால் உயிராபத்துக்கள் ஏதேனும் ஏற்படவில்லை. எனினும் குறித்த பகுதியில் உள்ள மக்கள் மற்றும் தீயணைப்பு பிரிவினர் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

24 இருபக்க குடியிருப்புக்களைக் கொண்ட லயன் குடியிருப்பிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. குறித்த வீடுகளில் ஏற்பட்ட சேதத்தினால் பெரும் எண்ணிக்கையிலான போருட் சேதங்கள் ஏற்பட்டள்ளதாகவும் இதன்போது பாதிக்கப்பட்ட மக்களை தற்காலிக இடங்களில் தங்க வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## கலகெதர நியங்கொட கைத்தறி நெசவு நிலையம் மத்திய மாகாண சபைக்கு கையளிப்பு

**அக்குறணை குறூப் நிருபர்**

இலங்கை சலுசல நிறுவனத்திற்குச் சொந்தமானதும் கடந்த 6 வருடங்களாக கைவிடப்பட்ட நிலையில் இருந்த கலகெதர நியங்கொட கைத்தறி நெசவு நிலையம் மற்றும் அதற்கு சொந்தமான 1.5 ஏக்கர் காணி என்பவற்றை மத்திய மாகாண சபைக்கு கையளிக்கும் வைபவம் ஒன்று மத்திய மாகாண ஆளுநர் காரியாலயத்தில் இடம்பெற்றது.

சலுசல நிறுவனத்தில் தலைவர் டென்சில் இந்ரஜித் பெரோ மற்றும் மத்திய மகாண ஆளுநர் லலித் யூ கமகே ஆகியோர் இதில் பங்கு கொண்டனர்.

hela

NOTICE

HELA APPAREL HOLDINGS PLC – PQ 00205151
முதலாவது வருடாந்தப் பொது ஒன்றுகூடல்

Hela Apparel Holdings PLC இன் முதலாவது (01) வருடாந்தப் பொது ஒன்றுகூடல் (AGM) 2022 செப்டெம்பர் 07 ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 3.30 மணிக்கு, மெய்நிகர் சந்திப்பாக, இல. 35, பலபொக்குன வீதி, கொழும்பு 06 எனும் பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரியிலிருந்து இடம்பெறும். நிறுவனத்தின் வழமையான வியாபாரச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமான தீர்மானங்கள் இந்த சந்திப்பின் போது நிறைவேற்றிக் கொள்ளப்படும் என்பது தொடர்பான அறிவித்தல் இத்தால் வழங்கப்படுகின்றது.

இந்த ஒன்றுகூடல் தொடர்பான விவரமான அறிவித்தல், ப்ரொக்ஸி படிவம், பங்குதாரர்களுக்கான சுற்றறிக்கை, பங்குதாரர் படிவத்தின் பதிவு மற்றும் நிறுவனத்தின் வருடாந்த நிதி அறிக்கை போன்றன கொழும்புப் பங்குப்பரிவர்த்தனையின் பின்வரும் இணையத்தளத்திலும்:

https://www.cse.lk/pages/company-profile/company-profile.component.html?symbol=HELA.N0000

நிறுவனத்தின் இணையத்தளத்திலும் பிரசுரிக்கப்பட்டுள்ளன:

https://www.helaclothing.com/

இந்த ஒன்றுகூடலில் பங்கேற்க எதிர்பார்க்கும் பங்குதாரர்கள் மேற்படி இணையத்தளத்திலிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய பதிவு செய்யும் படிவத்தை முறையாகப் பூர்த்தி செய்து hela_agm@helaclothing.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு, குறித்த ஒன்றுகூடல் இடம்பெறுவதற்கு ஆகக்குறைந்தது 48 மணி. நேரத்துக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**கொழும்பு பங்குப்பரிவர்த்தனையினால் வெளியிடப்பட்ட 2022 மே 27 ஆம் திகதியிடப்பட்ட சுற்றறிக்கை இல. 4/2022 இன் பிரகாரம், இந்த ஆண்டில் வருடாந்த நிதி அறிக்கையின் அச்சுப் பிரதிகள் வழங்கப்படமாட்டாது. ஏதேனும் தெளிவுபடுத்தல்களுக்கு, அடம் கொலின்ஸ் உடன் +94 11 4385 400 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக அல்லது மின்னஞ்சல் hela_agm@helaclothing.com ஊடாக தொடர்பு கொள்ளவும்.**

Hela Apparel Holdings PLC இன் பணிப்பாளர் சபையின் ஆணையின் பிரகாரம்
P W Corporate Secretarial (Pvt) Ltd, செயலாளர்கள்

திகதி 15.08.2022 திங்கட்கிழமை
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4848
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 8,099,060.00
ஆங்கில எழுத்து C வெற்றி இலக்கங்கள் 4 8 9 2 5 8
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 35,845,740.60

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1307
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,220,380.00
வெற்றி இலக்கினம் கும்பம் வெற்றி இலக்கங்கள் 5 7 5 8 8 7
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,616,553.60

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 878
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,268,380.00
வெற்றி இலக்கினம் M வெற்றி இலக்கங்கள் 11 57 70 75
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 121,453,394.40

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3090
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,899,300.00
ஆங்கில எழுத்து S வெற்றி இலக்கங்கள் 04 29 55 56
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 69,379,262.00

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 157
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,815,820.00
இலக்கினம் மேஷம் வெற்றி இலக்கங்கள் 08 43 44 55
விசேட இலக்கினம் மேஷம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,757,032.40

கோடி 26+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1196
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,045,720.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 265,850,534.00
ஆங்கில எழுத்து M சுப்பர் நம்பர் 11 வெற்றி எண்கள் 31 32 60 79
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

# கிழக்கின் குரல்



### கதிர்காம பாதயாத்திரையை வர்த்தமானியில் பிரகடனம் செய்ய வேண்டுமென

# காரைதீவு பிரதேச சபையில் ஏகமனதாக தீர்மானம்!

( காரைதீவு குறூப் நிருபர்)

மூவின மக்களும் சங்கமிக்கின்ற ஐக்கிய புனித பூமியான கதிர்காமம் ஆடிவேல் விழாவை முன்னிட்டு நடைபெறும் புனித பாதயாத்திரையை அங்கீகரித்து, வர்த்தமானி வெளியிட வேண்டுமென,காரைதீவு பிரதேச சபையில்

தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.காரைதீவு பிரதேச சபையின் 54 ஆவது மாதாந்த அமர்வில் நிறைவேற்றப்பட்ட இத்தீர்மானத்துக்கு,முஸ்லிம் உறுப்பினர்கள் உட்பட சபையின் சகல உறுப்பினர்களும் ஆதரவளித்தனர்.

பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தலைமையில் நடைபெற்ற அமர்விலே, இம்முக்கிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இச்சமயம் மேற்படி தீர்மானத்திற்கான பிரேரணையை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் முன்மொழிந்தார்.

மாளிகைக்காடு சுயேச்சை உறுப்பினர் ஏ.ஆர்.எம். பஸ்மீர் இதனை வழிமொழிந்தார். ஏனைய அனைத்து உறுப்பினர்களும் இதற்கு ஆதரவு தெரிவித்தனர்.

இப்பிரேரண, ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள் மற்றும் கட்சி தலைவர்கள் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்படவுள்ளன.

பிரேரணையை முன்வைத்து பேசிய தவிசாளர் கூறியதாவது,

வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காமம் கந்தன் ஆலயத்தின் ஆடிவேல் விழாவை ஒட்டிய பாதயாத்திரை இம்முறை பலத்த சோதனைகளுக்கு உள்ளாகி இருந்தது. அது மட்டுமல்ல இந்த பாதயாத்திரை அதன் புனிதத்துவத்தை இழந்துவிட்டதோ என்று நினைக்கும் அளவிற்கு பல அசாதாரண சம்பவங்களும், அனர்த்தங்களும் இடம்பெற்றிருக்கின்றன .

இப்பாதயாத்திரை முறையாக சீரமைக்கப்பட வேண்டும். புனிதத்துவமாக மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

இதன் கலாசாரம், பாரம்பரியம், பண்பாடுகள் பேணப்பட வேண்டும் என்று அடியார்கள் பலர் ஆணித்தரமாக கருத்துக்களை என்னிடம் தெரிவித்துள்ளனர். இம்முறை, வரலாற்றில் என்றுமில்லாத அளவில், யால சரணாலய பகுதி வியாழ ஆற்றிலே திடீரென ஐந்து அடிக்கு காட்டு வெள்ளம் வந்து பெரும் அனர்த்தத்தை அடியார்களுக்கு ஏற்படுத்தியது. இது ஒரு தற்செயலான செயல் அல்ல.

இது முருகனின் சோதனை. புனித பயணத்தை மாசுபடுத்துபவர்களுக்கு கற்பிக்கப்பட்ட பாடம் என்றெல்லாம் பல அடியார்களும் பல கருத்துக்களை கூறினர்.

ஏனைய சமய யாத்திரை மற்றும் விரதங்கள் போன்று, இதற்கும் அத்தனை சலுகைகளும் வழங்கப்படல் அவசியம்.

அது மாத்திரமல்ல பாதயாத்திரை செல்வோரின் வயது கட்டுப்பாடுகள், நடைமுறை விதிகள் என்பன முறைப்படி கட்டமைக்கப்பட வேண்டும்.

இது விடயத்தில் சம்பந்தப்பட்டவர் கட்டாயம் கவனம் செலுத்துவது அவசியம் என்றும் அவர் தெரிவித்தார்.

## புதிய வலயக்கல்விப் பணிப்பாளர் அமீருக்கு வரவேற்பு

( காரைதீவு குறூப் நிருபர் )



சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்ட எஸ்.எம்.எம்.அமீர் நேற்று (16) செவ்வாய்க்கிழமை கல்வி சார் உத்தியோகத்தர்களால் வரவேற்கப்பட்டார்.

புதிய வலயக்கல்விப் பணிப்பாளர் அமீருக்கு கோட்டக் கல்வி பணிப்பாளர் எம்.ஏ.சபூர்தம்பி, உதவி கல்வி பணிப்பாளர் வி ரி.சகாதேவராஜா ஆகியோர் மாலை சூட்டி வரவேற்றனர்.

இதில்,ஏனைய கல்வி சார் உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர். இதன் பின்னர் கல்வி அபிவிருத்தி கூட்டமும் நடைபெற்றது.

## மாடு அறுப்பதற்கு மீண்டும் அனுமதி குருநாகல் மாநகரசபையில் தீர்மானம்

குருநாகல் மாநகரைசபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் மாடு அறுப்பதற்கு மீண்டும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.மாநரசபை அமர்வில் இந்த தீர்மானம் அண்மையில் நிறைவேற்றப்பட்டது.மாநகர முதல்வர் துஷாரசன் ஜீவ தலைமையில் நடந்த அமர்வில், இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த அமர்வில்,மாநகர சபையிலுள்ள 21 உறுப்பினர்களில் 18 பேர் சமுகமளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.மாநகர சபை உறுப்பினர் அஸார்தீன்மொய்தீன் இதற்கான பிரேரணையை கொண்டு வந்தார்.பிரதேசத்தில் வாழும் முஸ்லிம்களின் நலன் கருதி, மாடு அறுப்பதற்கு அனுமதிக்க வேண்டுமென்ற கருத்தையும் சபை அமர்வின்போது அவர், தெளிவுபடுத்தினார்.கடந்த நான்காண்டுகளுக்கு முன்னர்,இனவாத நோக்கி'ல் மாடறுப்பதற்கு இப்பிரதேசத்தில் தடைவிதிப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## திருகோணமலையில் நான்கு நூல்கள் வெளியீடு

(அன்புவழிபுரம் தினகரன் நிருபர் )



கிழக்குமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் நூலுருவாக்கத்திட்டத்தின் கீழ், அச்சிடப்பட்ட நான்கு எழுத்தாளர்களின் நூல்கள் அண்மையில் (14) வெளியிட்டு வைக்கப்பட்டன.

திருகோணமலை மாவட்ட நூலாசிரியர்களான 1.கலாபூஷணம் பி.கனகரத்தினம் (ஷெல்லிதாசன்) எழுதிய அம்மாவுக்கு பிடித்த கனி(சிறுவர்பாடல்)

2.வைத்திய கலாநிதி.த.ஜீவராஜின் கொட்டியாரப்பற்று வன்னிபங்கள் – (வரலாற்றுக்கட்டுரைகள்)

3.கவிச்சுடர்.திருமதி.சிவரமணியின் நவீன சீதை(சிறுகதை)

4.ஜனாப்.ஏ.எம்.முகைதீன் (மூதூர் முகைடீன்) கடலோரப்பாதை – (சிறுகதை)

ஆகிய நூல்களே திருகோணமலை நகர சபை மண்டபத்தில் வெளியிடப்பட்டன. கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாணப்பணிப்பாளர் திருமதி.சரண்யா சுதர்சனினால் இந்நூல்கள் வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வின், விருந்தினர்களாக கிழக்கு மாகாண பிரதிப்பிரதம செயலாளர் (திட்டமிடல்) பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஆ,யு .முனாஸீர் ஆகியோர் பங்குபற்றினர்.

திருகோணமலை மாவட்டத்தின் அரச உயர் அதிகாரிகள் மற்றும் இலக்கியவாதிகள் எனப்பலரும் இதில்,பங்கேற்றிருந்தனர்.

## மட்பாண்ட கைத்தொழிலாளர்களின் வாழ்வாதாரத்திற்கு உதவ கோரிக்கை

(பாண்டிருப்பு தினகரன் நிருபர்)



பாண்டிருப்பு பிரதேசத்தில் மட்பாண்ட கைத்தொழிலில் ஈடுபடுவோரின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு உதவுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி,இந்தத் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தையும் பாதித்துள்ளதாக பலரும் தெரிவிக்கின்றனர்.

இதனால், தங்களது குடும்ப ஜீவியத்தை நகர்த்த முடியாது இத்தொழிலாளர்கள் வறுமையில் வாடுவதாகவும் கவலை தெரிவிக்கப்படுகிறது.

கல்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பாண்டிருப்பு கிராமத்தில் பாரம்பரிய ரீதியாக மட்பாண்ட கைத்தொழிலில் பலர் ஈடுபட்டுவந்தனர். தற்போது இத்தொழிலில் 55 குடும்பங்களே ஈடுபட்டுவருகின்றன. நிலவும் பொருளாதார பிரச்சினையால், மட்பாண்டத்திற்குரிய மூலப்பொருட்களான களிமண், பட்டுமண், உரிமட்டை, வைக்கோல் உள்ளிட்ட பொருட்களை பெற்றுக்கொள்வதில் இவர்கள் சிரமங்களை எதிர்நோக்குவதுடன், இப்பொருட்களின் விலையேற்றத்தால் மட்பாண்ட தொழிலை கைவிடும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

பாரம்பரியமாக மட்பாண்ட தொழிலையே தமது வாழ்வாதாரமாக செய்துவரும் குடும்பங்கள், பொருட்களின் விலையேற்றம் காரணமாக வேறு தொழிலுக்கும் செல்ல முடியாதுள்ளனர். அரசாங்கம் இவ்வாறான குடிசைக் கைத்தொழிலில் ஈடுபடும் மக்களின் வாழ்வாதாரத்திற்கு உதவுவதுடன், இத்தொழிலை மேம்படுத்த பல்வேறு நலத்திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் என மட்பாண்ட கைத்தொழிலாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## உளவளத்துணை,உடல் ஆரோக்கியம் பேணும் கருத்தரங்கு நிகழ்வுகள்

(கிண்ணியா தினகரன் நிருபர்)



தி /கிண்ணியா அல்ஹிரா முஸ்லிம் மகளிர் மஹாவித்தியாலத்தின் உயர்தர மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல் ,உளவளத்துணைசெயற்பாடுகள் மற்றும் நஞ்சற்ற விவசாயத்தின் மூலம் உடல் ஆரோக்கியம் பேணல் வழிகாட்டல் நிகழ்சிகள் என்பன செவ்வாய்க்கிழமை (16) நடைபெற்றன.

பாடசாலை அதிபர் எம்.எஸ்.நசூர்தீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வை, வழிகாட்டல் ஆலோசனை பிரிவின் பொறுப்பாளர் அ.வ.மு.கியாஸ் ஆசிரியர் நெறிப்படுத்தினார்.

இந்நிகழ்விற்கு, வளவாளர்களாக கிண்ணியா பிரதேச செயலகத்தின் மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.ஏ. பஹிமா பேகம்,உளவளத்துணை உத்தியோகத்தர் எஸ்.எப்.சக்னா,விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர் டீ.தானிஸ், எம்.சில்மியா,ஏ. எம் முர்மிசா ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## பௌத்த சகோதரர்களுக்கு உலருணவு விநியோகம்



(மணல்சேனை நிருபர்)

அம்பாறை வீரகெட்டிய திஸ்ஸபுர பிரதேசத்தில் வறுமை கோட்டுக்கு கீழ் வசிக்கும் பெரும்பான்மை இன சகோதரர்களுக்கு உலருணவுகள் வழங்கப்பட்டன.'ரெலோ சர்வதேச அமைப்பின் நமக்காக நாம்' வேலைத்திட்டத்தின் கீழ்,வீரகெட்டிய திஸ்ஸபுர ஸ்ரீ சுதர்சநானாராம விகாரையில் வைத்து இவை வழங்கப்பட்டன. இந்நிகழ்வு,

செஞ்சோலையில் கொலைசெய்யப்பட்ட மாணவர்களின் நினைவாக கடந்த (14) நடைபெற்றது.கல்முனை மாநகர சபை உறுப்பினர் சமூகசேவகர் சந்திரசேகரம் ராஜனின் ஏற்பாட்டிலும் தலைமையிலும் இது, நடைபெற்றது.

## ஆணொருவர் அடித்துக்கொலை மட்டக்களப்பில் சம்பவம்

(மண்டூர் தினகரன் நிருபர்)

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ்பிரிவிற்குட்பட்ட லொயிஸ் அவனியூர் வீதியில் உயிரிழந்த நிலையில் ஆணொருவர் சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

கடந்த (11)இல்,இச்சம்பவம் இடம்பெற்றது.

பெரியபோரதீவு முனைத்தீவைச்சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான (53) வயதுடைய வல்லிபுரம் அன்பழகன் என்பவரே சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் (15) மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய நிபுணர் ஏ.இளங்கோவன் தலைமையிலான சட்ட வைத்திய அதிகாரிகள் பிரேத பரிசோதனை மேற்கொண்டனர்.

தலைப்பகுதி பலமாக தாக்கப்பட்டதால் மரணம் சம்பவித்ததாக,பிரேத பரிசோதனையில் கண்டறியப்பட்டுள்ளது.

வீதியில் பொருத்தப்பட்டிருந்த சிசிரிவி கமராவை பரிசீலித்த பொலிஸார், மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் பொல்லால் அடித்து தாக்கும் காட்சிகள் பதிவாகியிருந்தன. இதனையடுத்து சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் கைதாகினர். நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்ட இவர்கள்,விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.சம்பவம் பற்றிய மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு தலமையகப்பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## காரைதீவு பிரதான வீதியில் சுவாமி விபுலானந்தரின் சிலை திறந்து வைப்பு

( காரைதீவு குறூப் நிருபர்)



முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் மற்றுமொரு சிலை, அவர் அவதரித்த காரைதீவு பிரதான வீதியில் திறந்து வைக்கப்பட்டது.

விபுலாநந்தர் ஞாபகார்த்தப் பணி மன்றத்தினரின் ஏற்பாட்டில், இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையோடு கண்ணகை அம்மன் ஆலய முச்சந்தியில் நிறுவப்பட்ட அடிகளாரின் மார்பளவிலான சிலையே திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில்,மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் உதவிப் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தஜீ மஹராஜ் திருமுன்னிலை அதிதியாக கலந்துகொண்டதுடன், தலைவர் வெ.ஜெயநாதன் தலைமை வகிக்க, சுபவேளையில் இச்சிலை திறக்கப்பட்டது.

சுவாமிகளின் "வெள்ளை நிற மல்லிகையோ.. " என்ற பாடல் இசைக்க ,அதிதிகளால் சுவாமிகளின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டது.

சுவாமி பிறந்த காரைதீவு மண்ணில் நிறுவப்படும் ஐந்தாவது சிலை இதுவென்பது குறிப்பிடத்தக்கது.இச்சிலையை இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் அருளானந்தம் உமாமகேஸ்வரன் வழங்கி இருந்தார்.

நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம்ஜெகதீஸன், காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் ,பிரதேச செயலாளர் சிவ.ஜெகராஜன் ,, திருக்கோவில் வலய பிரதி கல்வி பணிப்பாளர் சோ.ஸூரநுதன், சம்மாந்துறை வலய உதவி கல்வி பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா ஆகியோருள்ளிட்ட பல பிரமுகர்கள் கலந்து சிறப்பித்தனர்.

## ஆஷூறாதின கர்பலாவை நினைவுகூரும் புனித அஹ்லுல்பைத் மனாகிப் மஜ்லிஸ்

(நற்பிட்டிமுனை விஷேட நிருபர் )



புனித ஆஷூறாஃ தினத்தில் கர்பலாஃ நினைவாக பரிசுத்த அஹ்லுல்பைத் மனாகிப் நிகழ்வு, கல்முனை தாறுஸ்ஸபா அமையத்தின் ஏற்பாட்டில் தாறுஸ்ஸபா தலைமையகத்தில் (ஹிஜ்ரி 1444 முஹர்ரம் 10 மிக சிறப்பாக இடம்பெற்றது.

தாறுஸ்ஸபாஅமையத்தின்தலைவர் மௌலவி ஏ.ஆர். சபா முஹம்மட் (நஜாஹி) தலைமையில் உலமாக்கள், மார்க்க அறிஞர்கள் கலந்துகொண்டு ஆஷூறாஃ தினத்தின் சிறப்புக்கள் மற்றும் கர்பலாஃ நினைவான பரிசுத்த அஹ்லுல்பைத் மணாகிப் மஜ்லிஸை நடத்தினர். இதன்போது இஸ்லாமிய வரலாற்று நிகழ்வுகள் தொடர்பிலான சிறப்புரைகளும் நிகழ்த்தப்பட்டன.

இந்நிகழ்வில், சமாதான கற்கைகள் நிலைய பணிப்பாளர் பேராசிரியர் எஸ்.எல். றியாஸ், பார்ட்னர்ஸ் போ சேன்ஜ் இன்டெர்னசனலின் சிரேஷ்ட நிகழ்ச்சித்திட்ட பணிப்பாளர் றிசாத் செரீப், கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர் சட்டத்தரணி ஏ.எல்.எம். றிபாஸ், கிழக்கின் கேடயம் அமைப்பின் பொதுச் செயலாளரும், அல் மீஸான் பௌண்டேஷன் ஸ்ரீலங்காவின் தவிசாளருமான யூ.எல்.என். ஹுதா, கல்முனையான்ஸ் போரம் செயற்பாட்டாளர் எம்.எச். முபாரிஸ், பொது அமைப்புக்கள் பலவற்றினது முக்கிய நிர்வாகிகள், அரசியல் கட்சிகளின் முக்கியஸ்தர்கள், கல்விமான்கள், கல்முனை தாறுஸ்ஸபா அமைய நிர்வாகிகள், உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

# நகர்வலம்



## தென் மாகாணத்தில்; முட்டை, இறைச்சி வகைகளின் விலை அதிகரிப்பு

**(வெலிகம தினகரன் நிருபர்)**

தென் மாகாண பகுதியில் இறைச்சி, முட்டை, கோழி இறைச்சி, மீன் ஆகியவற்றின் விலைகள் அதிகரித்துள்ளதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

முட்டை ஒன்றின் விலை தற்போது ரூ. 60க்கும் மேல் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. மேலும் மீன் ஒரு கிலோ 2400 ரூபா வரை விற்கப்படுகிறது. கோழி இறைச்சி, மாட்டிறைச்சி விலைகளும் பாரிய அளவில் உயர்ந்துள்ளன.

மின்சார கட்டணங்களும் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் வாடிக்கையாளர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர். மரக்கறி வகைகள் மற்றும் அத்தியாவசிய பொருட்களின் விலைகளும் அதிகரித்துள்ளன. மிக விரைவில் மேற்குறிப்பிட்ட பொருட்களின் விலைகளை குறைக்க துறைசார் அதிகாரிகள் கூடிய கவனம் செலுத்த வேண்டுமென வாடிக்கையாளர்கள் எதிர்பார்க்கின்றனர்.

## கட்சி பேதமின்றி

# ஜனாதிபதியின் திட்டங்களுக்கு பூரண ஆதரவு வழங்க அனைவரும் தீர்மானம்

### தெவிநுவர பிரதேச சபையில் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றம்

**(மாத்தறை தினகரன் நிருபர்)**




எமது நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு கண்டு நாட்டின் எதிர்கால சந்ததியினர் சுபீட்சமாக வாழ்வதற்கான துரித நடவடிக்கைகளை எடுத்து வரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கவும் கட்சி பேதமின்றி சகலரும் ஆதரவு தெரிவிக்க வேண்டும் என்ற பிரேரணையொன்று தெவிநுவர பிரதேச சபையில் (15) ஏகமனதாக நிறைவேறியது.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சி அதிகாரத்திலுள்ள தெவிநுவர பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினருமான லயனல் கொடிகார இப் பிரேரணையை சபையில் முன்மொழிந்தார். இதன் போது அவர் பிரேரணையை முன்மொழிந்து உரையாற்றுகையில், நாடு நெருக்கடியானதொரு சந்தர்ப்பத்தில் குறுகிய நோக்கங்களைக் கொண்டு செயற்படாது நாட்டின் எதிர்கால நன்மை கருதி அனைவரும் ஒன்றிணைந்து ஆதரவு தெரிவிக்க வேண்டுமென்று தெரிவித்தார்.

தெவிநுவர பிரதேசசபைத் தலைவர் எஸ். வெதகேயும் இதன் போது உரையாற்றினார்.

## கண்டெய்னர் பெட்டிக்குள் இருந்து சடலம் மீட்பு

### புத்தளம் மஹகும்புக்கடவல பகுதியில் சம்பவம்

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**



புத்தளம் மஹகும்புக்கடவல கவயன்குளம் பகுதியில் உள்ள தோட்டமொன்றில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (14) சடலமொன்று மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பகுதியில் உள்ள 33 ஏக்கர் பரப்பளவில் உள்ள மாமரத் தோட்டம் ஒன்றின் கண்டெய்னர் பெட்டிக்குள் இருந்து மேற்படி சடலம் மீட்கப்பட்டுள்ளதாக மஹகும்புக்கடவல பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி மாமரத் தோட்டத்தில் பணிபுரிந்த மஹவ பகுதியைச் சேர்ந்த 56 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு மீட்கப்பட்ட சடலத்தின் தலைப்பகுதியில் அடிகாயங்கள் காணப்படுவதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர். குறித்த தோட்டத்தின் கண்டெய்னர் பெட்டிக்குள் சடலமொன்று கிடப்பதாக கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

மேற்படி மாமரத் தோட்டத்தில் வேலை செய்யும் மூவர் சனிக்கிழமை (13) குறித்த கண்டெய்னர் பெட்டிக்குள் இருந்துகொண்டு மது அருந்தியதாகவும், அதன் பின்னர் அவர்களிடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளதாகவும் மேற்கொள்ளப்பட்ட முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.



கொழும்பு மாநகர சபையினால் சுமார் 325 லட்சம் செலவில் மட்டக்குளியில் நிர்மாணிக்கப்பட்ட பல்வகை செயல்பாட்டு கட்டடத்தை மாநகர மேயர் ரோஸி சேனாநாயக்க நாடாவை வெட்டி திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம். மாநகர சபை உறுப்பினர் ரோய் போகஹவத்தவின் வேண்டுகோளின் பேரில் இந்த வேலைத்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் பிரதி மேயர் எம்.ரீ.எம்.இக்பால் உள்ளிட்ட உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டுள்ளதை படத்தில் காணலாம்.

(படம்:பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

## எரிபொருள் விநியோகத்தில் QR முறை நீண்ட கியூ வரிசைக்கு முற்றுப்புள்ளி

### அமைச்சர் கஞ்சனவுக்கு மக்கள் பாராட்டு

**(வெலிகம தினகரன் நிருபர்)**

எரிபொருள் விநியோகத்தில் QR முறை அறிமுகப்படுத்தியதன் காரணமாக எரிபொருள் நிலையங்களில் காணப்பட்ட நீண்ட கியூ வரிசை மற்றும் நெரிசல்கள் குறைந்து வருகின்றன. இதனால் எரிபொருள் நிலைய ஊழியர்களும் சுலபமான முறையில் எரிபொருள்களை வாகனங்களுக்கு செலுத்தி வருகின்றனர்.

குறிப்பாக வெலிகம நகரத்தில் இரண்டு எரிபொருள் நிலையங்களிலும் இதற்குமுன்னர் காணப்பட்ட நீண்ட கியூ வரிசைகள் தற்போது குறைந்துள்ளன. இதற்கு முன்னர் இப்பகுதியில் வீதிகள் முற்றாக போக்குவரத்துத் தடைப்பட்டிருந்தது. இதனால் பல்வேறு அசௌகரியங்களுக்கு மக்கள் முகம்கொடுத்து வந்தனர். எரிபொருள் நிலையங்களில் முறுகல் நிலைமைகளும் காணப்பட்டன. இந்த QR முறையை அறிமுகப்படுத்தி கியூ வரிசைக்கு முடிவுகட்டிய அமைச்சர் கஞ்சன விஜேசேக்கரவுக்கு மக்கள் நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துள்ளனர்.

## கண்டி மாவட்ட சில பகுதிகளில் 14 மணிநேர நீர்வெட்டு அமுல்

**(பேருவளை பி.எம். முக்தார்)**

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் கண்டி வடக்கு ஒன்றிணைந்த நீர் வழங்கல் திட்டத்தின் நவயாலதென்ன முற்சந்தி பிரதேசத்துக்கு குழாய்நீர் இணைப்பு வழங்கப்படவுள்ளதால் நாளை 18ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப. 5 மணி முதல் மறுநாள் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 7 மணி வரையிலான 14 மணிநேர நீர் விநியோகத்தடை பின்வரும் பகுதிகளில் அமுலாகும் என தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை அறிவித்துள்ளது.

உடதலவின்ன, வத்தேகெதர, கங்கா மாவத்தை, நவயாலதென்ன, சரசவி மாவத்தை, கலதெனிய, இந்திரா மாவத்தை, பல்லேதலவின்ன, உஸ்ஸியாகொட, வத்தளவத்தை மற்றும் பொல்கொல்ல ஆகிய பகுதிகள் நீர் விநியோத் தடையினால் பாதிக்கப்படும். இதனால் பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை கவலை தெரிவிப்பதோடு, நீரை முன்கூட்டியே சேமித்து வைத்து சிக்கனமாக பயன்படுத்துமாறு கேட்டுக்கொண்டுள்ளது. இதுபற்றிய மேலதிக விபரங்களுக்கு 1939 என்ற இலக்கத்துடன் தொடர்புகொள்ள முடியும்.

## நாமல் உயனவில் சுற்றித்திரிந்த யானையை மின்சாரம் பாய்ச்சி கொலை செய்த குற்றச்சாட்டு

### பொலிஸ் கான்ஸ்டபிள் சேவையிலிருந்து இடைநிறுத்தம்

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**



கலாவெவ, நாமல் உயன மற்றும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களில் பல ஆண்டுகளாக சுற்றித்திரிந்த 'பரனா' என்றழைக்கப்படும் யானையை மின்சாரம் பாச்சி கொலை செய்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்த சந்தேக நபரான பொலிஸ் கான்ஸ்டபிளை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் கடந்த (10) சேவையில் இருந்து நிறுத்தப்பட்டுள்ளதாக பிரதேசத்திற்கு பொறுப்பான உதவி பொலிஸ் கண்காணிப்பாளர் நாமல் பெரேரா தெரிவித்தார்.

கல்கிரியாகம பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வந்த ஜயசுந்தர ஹேரத் முதியன்சலாகே அஜித் குமார ஜயசுந்தர ( 51622 ) என்ற சந்தேக நபர் கடந்த 06 ஆம் திகதி கல்கிரியாகம வனவிலங்கு அலுவலகத்தில் சரணடைந்த பின்பு கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

மின்சாரம் தாக்கியதனால் ஏற்பட்ட தாக்கத்தினாலேயே பரனா உயிரிழந்துள்ளதாக யானையின் மரண பரிசோதனை நடத்திய வனவிலங்கு வைத்தியர் இசுரு ஹேச்சகோட்டகே முடிவு செய்துள்ளார்.

30 வயதுடைய 9 அடி உயரம் உடைய 4 அடி நீளமுடைய இரு தந்தங்களை கொண்ட பரனா என்றழைக்கப்படும் யானையே உயிரிழந்துள்ளதாக வைத்தியர் தெரிவித்துள்ளார்.



சீனன்கோட்டை பாஸிய்யா ஜும்ஆப் பள்ளிவாசலின் உள்ளக தரைக்கு கிரனைட் பதிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (15) பள்ளிச் சங்கத் தலைவர் அல்ஹாஜ் முக்தார் அவர்களின் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பள்ளிச் சங்க செயலாளர் அல்ஹாஜ் சிஹாப், பள்ளிச் சங்க உறுப்பினர்கள், ஊர் ஜெமாஅத்தார்கள், ஏற்பாட்டாளர்களும் கலந்து சிறப்பித்தனர். படம் பேருவளை விசேட நிருபர்

## தனியார் பஸ்ஸூடன் மோ.சைக்கிள் மோதி விபத்து; இளைஞன் பலி

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**

ஹம்பாந்தோட்டை பிரதேச கடுவன, கொமடிய, அலுபொத்தெனிய வீதியில் தனியார் போக்குவரத்து பஸ் வண்டியொன்றுடன் மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதி ஏற்பட்ட விபத்தில் மோட்டார் சைக்கிளில் வருகை தந்து கொண்டிருந்த இளைஞர் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளதாக கடுவன (13) பொலிஸார் தெரிவித்தனர்.

கடுவன, ஹிகுரகந்தவை வசிப்பிடமாகக் கொண்ட 25 வயது விவாகமாகாத இளைஞர் ஒருவரே இவ்விபத்தில் உயிரிழந்துள்ளார்.

தனியார் போக்குவரத்து பஸ் வண்டியையும் சாரதியையும் கைது செய்த பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.




புத்தளம் சென்மேரிஸ் தமிழ் மகா வித்தியாலய கணனி அறைக்கு 40 ஆயிரம் ரூபாய் செலவில் 25 பிளாஸ்டிக் கதிரைகள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன. ஆசிரியரும், சமூக ஆர்வளருமான எஸ். ஆர். எம். முஹ்ஸி மேற்கொண்ட முயற்சியின் பலனாக இந்த கதிரைகள் (16) வழங்கி வைக்கப்பட்டன. அதிபர் அருட்சகோதரி ஜெனட் ரோட்ரிகோவிடம் சமூக ஆர்வலர் எஸ்.ஆர்.எம்.முஹ்ஸி கையளிப்பதை படத்தில் காணலாம்.

படம்: புத்தளம் தினகரன் நிருபர்

## கலாபூஷணம் ஸக்கியா ஸித்திக் பரீடின் 'நமது வரலாற்று ஆளுமைகள்' (பகுதி –1) நூல் வெளியீடு

**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**




பிரபல எழுத்தாளரும், பன்னூலாசிரியரும், ஓய்வுபெற்ற ஆசிரியையுமான கலாபூஷணம் ஸக்கியா ஸித்திக் பரீட் எழுதிய 'நமது வரலாற்று ஆளுமைகள்' (பகுதி 1) எனும் நூலின் வெளியீட்டு விழா எதிர்வரும் 20 ஆம் திகதி காலை 9 மணிக்கு கொழும்பு 10, தபால் தலைமை கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது. முஸ்லிம் கவுன்சில் ஒப் ஸ்ரீ லங்காவின் தலைவர் என்.எம் அமீன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவுக்கு பாராளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவருமான ரவூப் ஹக்கீம் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

பாராளுமன்ற உறுப்பினர்களான ரிசாத் பதியுதீன், கபீர் ஹாசிம், முஜிபுர் ரஹ்மான், இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், எஸ்.எம்.மரிக்கார், அப்துல் ஹலீம் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சபீக் ரஜாப்டீன், முன்னாள் மேல் மாகாண ஆளுநர் அசாத் சாலி ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் தேசிய எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் உறுப்பினர் ஏ.எம். நஹியா, முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் கலாசாரப் பணிப்பாளர் இப்ராஹீம் அன்ஸார், மாத்தளை சாஹிராக் கல்லூரியின் முன்னாள் அதிபர் புவாஜி ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்து கொள்வர். நூல் பற்றிய ஆய்வுரையை டாக்டர் அஷ்ஷெய்க் ரவூப் ஷெய்ன் (நளீமி) நிகழ்த்துவதோடு, நூலின் முதல் பிரதியை மூஷான் இன்டர்நெஷனலின் தலைவர் முஸ்லிம் சலாஹுடீன் பெற்றுக் கொள்வார்.

நிகழ்வை வசந்தம் தொலைக்காட்சியின் பொது முகாமையாளர் முஹம்மட் இர்பான் தொகுத்து வழங்குவார்.



இராஜகிரிய, ஸ்ரீ ஜயவர்தனபுர இந்து வித்தியால மாணவர்களின் வாசிப்புத்திறனை மேம்படுத்தவும் விஞ்ஞான அறிவை வளர்க்குமுகமாகவும் நூலக கண்காட்சி மற்றும் விஞ்ஞான கண்காட்சி என்பன புதன்கிழமை (10.08.2022 ) பாடசாலையில் நடைபெற்றன. வித்தியாலய அதிபர் த.பேரின்ப ராஜா தலைமையில் ஆசிரியர்களின் வழிகாட்டலில் இடம்பெற்ற இக்கண்காட்சியின் போது எடுக்கப்பட்ட படங்களை காணலாம்.

## அட்டோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

கொச்சிக்கடை, மனவேரிய, இல. 52/4 ஐச் சேர்ந்த வர்ணகுலசூரிய நெலும் லக்ஷிகா விலஷானி பெர்னான்டோ ஆகிய என்னால் கொச்சிக்கடை, மனவேரிய, இல. 52/4ஐச் சேர்ந்த பீட்டர்ஸ் ஜுட் லால் இனால் வழங்கப்பட்ட, நீர்கொழும்பு பகிரங்க நொத்தாரிசு ஜெஹான் குரூஸ் புள்ளேயினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2015.09.03ம் திகதிய அட்டோர்ணி தத்துவ இல. 1337ஐ இரத்துச் செய்து இல்லாதொழிப்பதாக இலங்கை சனநாயக சோசலிச குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன். என் சார்பாக சொல்லப்பட்ட பீட்டர்ஸ் ஜுட் லால் இனால் மேற்கொள்ளப்படும் எந்த கொடுக்கல் வாங்கல்களுக்கும் நான் பொறுப்பாக மாட்டேன்.

## பெறுகை அறிவித்தல்

### இலங்கை தேசிய வைத்தியசாலை - கொழும்பு 10

இலங்கை தேசிய வைத்தியசாலையின் புதிய வெளிநோயாளர் பிரிவிற்கு உபகரணங்களை வழங்குதல்.

இலங்கை தேசிய வைத்தியசாலையின் தேவைப்பாட்டிற்காக கீழ்க்காணும் உருப்படிகளை கொள்வனவு செய்வதற்காக கேள்விகள் கோரப்படுகின்றன.

| விபரம் | தொடர் இலக்கம் |
|---|---|
| 1. அலுவலக உபகரணங்கள் | SI/16/2021 |

மேற்படி வழங்கலுக்காக தகைமையுள்ள நிறுவனங்கள் மற்றும் தனி நபர்களுக்கு இதற்காக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடிவதுடன் அலுவலக உபகரணங்களுக்காக மீளளிக்கப்படாத ரூ. 12500.00 வைப்பை இலங்கை தேசிய வைத்தியசாலையின் காசாளர் பிரிவிற்கு செலுத்திய பின்பு 2022.08.18ம் திகதி முதல் 2022.09.05 வரை வார நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.00 வரையான காலத்திற்குள் இலங்கை தேசிய வைத்தியசாலையின் வழங்கல்கள் பிரிவில் குறித்த கேள்வி நிபந்தனைகளுடனான விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளலாம்.

2022.09.06 மு.ப. 10.00 இற்கு இலங்கை தேசிய வைத்தியசாலையின் பிரதம கணக்காளர் பணிமனையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

**மருத்துவர். டபிள்யூ.கே. விக்ரமசிங்ஹ**
**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**இலங்கை தேசிய வைத்தியசாலை.**

**திருகோணமலை வளாகம்**
**இலங்கை கிழக்கிலங்கை பல்கலைக்கழகம்**

### டிப்ளோமா கற்கைநெறிகளுக்காக விண்ணப்பங்களை அழைத்தல் – 2022

கீழேயுள்ள கற்கைநெறிகளை பயிலுவதற்காக பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா (DHRM) - II ஆம் உட்சேர்ப்பு
- கணினி அடிப்படையிலமைந்த கணக்கிடல் டிப்ளோமா (DCBA)

இக்கற்கைநெறியானது இலங்கை, கிழக்கிலங்கை பல்கலைக்கழக, திருகோணமலை வளாகத்தின் தொடர்பாடல் மற்றும் வர்த்தக கற்கைநெறிகள் பீடத்தின் வெளிவாரி கற்கைநெறிகள் அலகினால் நடாத்தப்படுகின்றது.

- மொழிமூலம் - ஆங்கிலம்
- காலப்பகுதி - 12 மாதங்கள்
- வார இறுதிகளில் வகுப்புக்கள் நடைபெறும்.

**விண்ணப்பங்களை மூடும் திகதியானது 2022 ஒக்ரோபர் 15 ஆம் நாளாகும்.**

மேலதிக விபரங்கள்:

- மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா (DHRM)
  - ➢ தொடர்பெண் - 0766503294
  - ➢ மின்னஞ்சல் - Coordinator_dhrm@esn.ac.lk
  - ➢ தொடர்பு - http://www.tc.esn.ac.lk/DHRM/
- கணினி அடிப்படையிலமைந்த கணக்கிடல் (DCBA)
  - ➢ தொடர்பெண் - 0775241170
  - ➢ மின்னஞ்சல் - Coordinator_dcba@esn.ac.lk
  - ➢ தொடர்பு - http://www.tc.esn.ac.lk/DCBA/

### 1964 இலக்கம் 28ன் திருத்தப்பட்டபடி காணி சுவீகரித்தல் (திருத்தச்) சட்ட காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. :- மீரி/பி.செ/கா/3/146

காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/7/2020/எச்டப்ளிவ்/146

கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிகளை சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் 01.08.2022 ஆம் திகதிய 2291/10 இலக்க அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

**அட்டவணை**

மாகாணம் : மேல்
மாவட்டம் : கம்பஹா
பிரதேச செயலாளர் பிரிவு : மீரிகமை

| ஆ.வ. இலக்கம்/ கடத்திரல் இலக்கம் | துண்டு இல. | விஸ்தீரணம் (ஹெக்டயார்) | கிராமம் | கிராம நிலதாரி பிரிவு |
|---|---|---|---|---|
| 510302/04/7 | 01 | 0.0009 | ஹக்குருகும்புர | இல. 7, ஹக்குருகும்புர |
| 510302/06/5 | 03 | 0.0148 | ஹக்குருகும்புர | இல. 7, ஹக்குருகும்புர |
| 510302/02/6 | 04 | 0.0523 | ஹக்குருகும்புர | இல. 7, ஹக்குருகும்புர |
| 510302/05/12 | 25 | 0.3766 | ஹக்குருகும்புர | இல. 7, ஹக்குருகும்புர |
| 510302/06/12 | 12 | 0.1687 | ஹக்குருகும்புர | இல. 7, ஹக்குருகும்புர |

**டப்ளிவ்.பி. பிரசாத் இந்திக**
**பிரதேச செயலாளர்,**
**மீரிகமை.**

**பிரதேச செயலாளர் காரியாலயம்,**
**மீரிகமை.**
**2022.08.16**

உக்ரைன் அணுமின் உலை மீது தாக்குதல் வேண்டாம்

# பாதுகாப்பு சபையில் இந்தியா வேண்டுகோள்




உக்ரைனில் ஸெபோரிஷியா அணுமின் நிலைய வளாகத்துக்கு அண்மித்ததாக தாக்குதல்களை மேற்கொள்ள வேண்டாம் என சம்பந்தப்பட்ட இரு நாடுகளையும் இந்தியா கேட்டுக் கொண்டுள்ளது.

ஐ.நா.பாதுகாப்பு சபையில் உரையாற்றிய இந்தியாவின் ஐ.நா.வுக்கான நிரந்தர பிரதிநிதியான ருசிரா காம்போஜ், அந்த அணுமின் நிலையத்தின் உபயோகிக்கப்பட்ட எரிபொருள் களஞ்சியத்துக்கு அண்மையில் ஷெல்வீச்சு நடைபெற்றதாக கிடைத்த தகவல் தொடர்பாக இந்தியா கரிசனை கொண்டிருப்பதாகவும் அணுஉலை ஒன்றின் பாதுகாப்புக்கு குந்தகமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டாமெனக் கேட்டுக் கொள்வதாகவும் தெரிவித்தார். இந்த அணுமின் நிலையத்தின் மீது ரஷ்யா ஷெல் தாக்குதல் நடத்துவதாக உக்ரைன் குற்றஞ்சாட்டியதையடுத்தே இவ்விடயம் வெளியே தெரியவந்தது.

ரஷ்ய – உக்ரைன் மோதல் ஆரம்பமானதிலிருந்து யுத்தத்தை நிறுத்திவிட்டு பேச்சுவார்த்தைக்கு திரும்புமாறும் இந்தியா கேட்டு வருவதாகவும் இராஜதந்திர ரீதியாக பிரச்சினைக்கு முடிவு காணும் முயற்சிகளுக்கு இந்தியா ஆதரவாக இருக்கும் என்றும் தமது உரையில் கம்போஜ் மேலும் தெரிவித்திருந்தார்.

உணவு தானியங்களை அபிவிருத்தி அடையும் நாடுகள் பெற்றுக் கொள்வதற்கான கதவுகள் திறக்கப்பட வேண்டும், தானியங்கள் மற்றும் எரிபொருட்களை விநியோகிப்பதில் தடைகள் ஏற்படக்கூடாது என்று தெரிவித்த இந்திய நிரந்தர பிரதிநிதி, கருங்கடல் வழியாக உக்ரைன் தானிய ஏற்றுமதியில் ஈடுபடவும் பசளை மற்றும் உணவுப் பண்டங்களை ரஷ்யா ஏற்றுமதி செய்யவும் வழிவகுக்கும்.

### 1964 இலக்கம் 28ன் திருத்தப்பட்டபடி காணி சுவீகரித்தல் (திருத்தச்) சட்ட காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. :- மீரி/பி.செ/கா/3/2021/10

காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/7/2020/எச்டப்ளிவ்/213

கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிகளை சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் 01.08.2022 ஆம் திகதிய 2291/09 இலக்க அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

**அட்டவணை**

மாகாணம் : மேல்
மாவட்டம் : கம்பஹா
பிரதேச செயலாளர் பிரிவு : மீரிகமை

| ஆ.வ. இலக்கம்/ கடத்திரல் இலக்கம் | துண்டு இல. | விஸ்தீரணம் (ஹெக்டயார்) | கிராமம் | கிராம நிலதாரி பிரிவு |
|---|---|---|---|---|
| 510248/01/8 | 01 | 0.0962 | கொட்டல | இல. 338ஏ, கல்கமுவ மேற்கு |
| 510282/02/8 | 19 | 0.3349 | வந்துரவ | இல. 337, வந்துரவ |
| 510282/03/12 | 48 | 0.9020 | வந்துரவ | இல. 337, வந்துரவ |
| 510282/02/4 | 01 | 0.0173 | வந்துரவ | இல. 337, வந்துரவ |
| 510282/02/3 | 01 | 0.0253 | வந்துரவ | இல. 337, வந்துரவ |
| 510282/03/4 | 01 | 0.0018 | வந்துரவ | இல. 337, வந்துரவ |

**டப்ளிவ்.பி. பிரசாத் இந்திக**
**பிரதேச செயலாளர்,**
**மீரிகமை.**

**பிரதேச செயலாளர் காரியாலயம்,**
**மீரிகமை.**
**2022.08.16**

## பெறுகை அறிவித்தல்

**மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்**
**கிழக்கு மாகாணம்**

### நாய்களை மலடாக்கும் திட்டத்தின் பெறுகை

கிழக்கு மாகாணம், மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம், அம்பாறை, கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை பிராந்தியங்களின் நாய்களை மலடாக்கும் திட்டத்தினை நடத்துவதற்காக தகைமையும் தகுதியும் உள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்களை பெறுகைக்குழுவின் தலைவர் அழைக்கின்றார்

| விலைமனு குறியீட்டு இல | பெறுகையின் தலைப்பு | நாய்களின் எண்ணிக்கை | விலைமனு பிணைத் தொகை | விலைமனு பிணைக் காலம் | மீளளிக்கப்படாத கட்டணம் |
|---|---|---|---|---|---|
| EP/PD/Dog Ste/ Tri/2022 EP/ | அம்பாறை பிராந்தியத்திற்கான நாய்களை மலடாக்குதல் | 1176 | 180,000.00 | 21.09.2022 | 2000/- |
| EP/PD/Dog Ste/ Bat/2022 | மட்டக்களப்பு பிராந்தியத்திற்கான நாய்களை மலடாக்குதல் | 1486 | 180,000.00 | 21.09.2022 | 2000/- |
| EP/PD/Dog Ste/ Kal/2022 | கல்முனை பிராந்தியத்திற்கான நாய்களை மலடாக்குதல் | 1176 | 180,000.00 | 21.09.2022 | 2000/- |
| PD/Dog Ste/ Amp/2022 | திருகோணமலை பிராந்தியத்திற்கான நாய்களை மலடாக்குதல் | 3378 | 180,000.00 | 21.09.2022 | 2000/- |

தேசிய போட்டி கேள்விகோரல் (NCB) முறைமையின் ஊடாக விலைமனுக்கள் நடத்தப்படும்.

02. திருகோணமலை, கிழக்கு மாகாணம், மாகாண சுகாதார சேவைகள் திணைக்கள அலுவலகத்தின் கணக்குக் கிளைக்கு ஒவ்வோர் உருப்படிக்கும் மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்துவதன் பேரிலான பற்றுச்சீட்டு மற்றும் வியாபார பதிவுச் சான்றிதழின் உறுதி செய்யப்பட்ட பிரதி, எழுத்துமூல விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் பேரில் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம், பெறுகைப்பிரிவிலிருந்து 2022.08.17 முதல் 2022.08.30 வரை அலுவலக நேரங்களில் ஆங்கில மொழியிலான ஓர் முழுமையான தொகுதி விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.
03. விலைமனுக்கள் விலைமனு திறக்கப்படும் தினத்திலிருந்து 60 நாட்கள் கால எல்லைக்கு செல்லுபடியாதல் வேண்டும். மேற்படி அட்டவணையில் விலைமனுப் பிணையின் பெறுமதி தரப்பட்டுள்ளது உங்களது விலைமனுச்செய்யும் உருப்படியின் முழு விலைமனுப் பிணைத்தொகையை சமர்ப்பித்தல் வேண்டும்.
04. ஒவ்வொரு பெறுகைக்கும் வெவ்வேறாக விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் சமர்ப்பிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பெறுகையின் தலைப்பு மற்றும் விலைமனு குறியீட்டு இலக்கம் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.
05. முறையாக பூர்த்தி செய்யப்பட்ட பொறியிடப்பட்ட விலைமனுக்கள் நகல்களுடன் விநியோகிக்கப்படல் வேண்டும் அல்லது திருகோணமலை, நீதிமன்ற வீதி, 120, மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம், திணைக்கள பெறுகைக்குழு தலைவருக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது 2022.08.31 மு.ப.10.30 இற்கு அல்லது அதற்கு முன்பு பெறுகைப்பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் வைப்பிலிட முடியும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள், விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் மூடப்பட்ட பின்பு உடனடியாகத் திறக்கப்படும்.
06. விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளல் அல்லது ஒரு பகுதியை அல்லது சகலதையும் நிராகரித்தல் அல்லது இந்த கேள்வியை வழங்குவதில் பெறுகைக்குழுவின் தீர்மானம் இறுதித்தீர்மானமாக இருக்கும்.
07. மேலதிக தகவல்களை திருகோணமலை - மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம், பிரதம கணக்காளரிடம் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

**(தொ.பே - 026-2227438)**

**தலைவர்**
**திணைக்கள பெறுகைக்குழு,**
**மாகாண சுகாதாரத் திணைக்களம்**
**கிழக்கு மாகாணம்.**

அவுஸ்திரேலிய போர்ப் பயிற்சியில் பிரெஞ்சு விமானங்கள்

# தமிழ்நாடு சூளூரில் தரையிறங்கி சென்றன




அவுஸ்திரேலியாவுக்கு அருகே அமைந்துள்ள நியூ கலடோனியா நோக்கிய நெடிய விமான பயணத்தின் ஒரு கட்டமாக பிரெஞ்சு போர் விமானங்கள் கடந்த 10ம் திகதி தமிழக சூளூர் விமான படைத்தளத்தில் தரையிறங்கின. இவற்றில் மூன்று விமானங்கள ரஃபெல் யுத்த விமானங்களாகும். பிரான்சில் இருந்து கலடோனியாவுக்கு இடைவிடாமல் பறந்து 72 மணித்தியாலத்தில் 16,600 கி.மீ. தூரத்தைக் கடக்கும் பிரெஞ்சு விமானப்படையின் ஒரு முயற்சியாகவே இப்பயணம் மேற்கொள்ளப்பட்டதாகவும் எரிபொருள் நிரப்பும் பொருட்டே இவை சூளூரில் தரையிறங்கியதாகவும் டில்லி பிரெஞ்சு தூதரகம் தெரிவித்துள்ளது.

ஒகட்ஸ் 10 முதல் செப்டம்பர் 18 வரையில் பிரெஞ்சு விமானப்படை இந்தோ – பசுபிக் நோக்கிய நீண்டதூர விமானப் பயணங்களை 'பெகசஸ் 22' என்ற பெயரில் மேற்கொள்ளவுள்ளது. இம்மாதம் 17ம் திகதி முதல் செப்டெம்பர் 10ம் திகதிவரை அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள 'காரிருள்' என்ற பெயரிலான பன்னாட்டு விமானப் படைகளின் கூட்டுப் பயிற்சியில் அவுஸ்திரேலிய, ஜப்பானிய, இந்திய, அமெரிக்க, இந்தோனேசிய, சிங்கப்பூர், இங்கிலாந்து, தென்கொரிய மற்றும் ஜெர்மனிய விமானப்படை விமானங்களுடன் பிரெஞ்சு விமானங்களும் கலந்து கொள்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தோ – பசுபிக் பிராந்தியத்தில் சீன பிரசன்னத்தை எதிர்கொள்ளும் வகையில் அமெரிக்க, இந்திய மற்றும் ஐரோப்பிய நாடுகள் தமது பிரசன்னத்தை இப்பிராந்தியத்தில் விரிவுபடுத்துமுகமாகவே இக் கூட்டுப் பயிற்சி நடத்தப்படுவதாக அரசியல அவதானிகள் கருதுகின்றனர்.

அக்கரப்பத்தனை உட்லெக் தோட்ட

# மக்கள் பயணிக்கும் பாலத்தின் அவல நிலை

ஹற்றன் சுழற்சி நிருபர்



அக்கரப்பத்தனை பிரதேச சபைக்கு உட்பட்ட உட்லெக் தோட்டத்திற்கு செல்லும் பிரதான பாலம் ஆபத்தான நிலையில் இருப்பதாக தோட்ட மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறித்த பாலத்தை, 800க்கும் மேற்பட்டவர்கள் பயன்படுத்தி வருகின்றனர்.92 ஆம் ஆண்டுக்கு முன்னர் இங்கு பலகைகளால் ஆன பாலத்தையே பிரதேசவாசிகள் பயன்படுத்தி வந்த நிலையில், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரால் இரும்பினால் இரண்டரை அடி அகலமும் 30 அடி நீளமும் கொண்ட பாலம் நிர்மாணித்து கொடுக்கப்பட்டது..

எனினும், கடும் மழையின் போது பாலம் வெள்ளத்தில் மூழ்குவதுடன், மழைக் காலங்களில் பாலத்தை கடக்க முடியாதவாறு பாலம் பழுதடைந்து காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த பாலத்தை புனரமைத்து தருமாறு, மலையக அரசியல்வாதிகளிடம் பலமுறை கோரிக்கை விடுத்த போதிலும் இதுவரை எவரும் இதனை புனரமைத்து கொடுக்க முன்வரவில்லை என மக்கள் தெரிவிக்கின்றனர்.

மூன்றரை மாத காலத்தில் அறுவடை

# AD 378 புதிய வகை நெல் கண்டுபிடிப்பு; விவசாயிகளுக்கு வழங்கவும் நடவடிக்கை

ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்

அம்பலாந்தோட்டை அரச நெல் ஆராய்ச்சி நிலையத்தில் AD 378 எனும் புதிய வெள்ளை அரிசி (நாடு) வகை நெல் கண்டுபிடிக்கப்பட்டு விவசாயிகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மூன்றரை மாத காலத்தில் அறுவடை செய்யக் கூடியதாக இந்த புதிய வகை நெல் காணப்படுகிறது. ஒரு ஏக்கருக்கு 180 புசல் நெல்லை அறுவடையாக பெற முடியும் எனவும் நம்பப்படுகிறது. ஒரு புசல் நெல்லின் எடை 21 கிலோ கிராமிற்கு அண்மித்து காணப்படுகிறது.

13 வருடங்களாக மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின் பயனாக நீண்ட காலத்திற்கு பிறகு இவ் புதிய வகை நெல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஹம்பாந்தோட்டை, பொலன்னறுவை, அநுராதபுரம், மாத்தறை, காலி மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் இது பயிரிடப்படவுள்ளது.

## கிழக்கு பிரதம செயலாளரின் புதல்வர் சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம்



நிபுன வணிகசிங்க உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். ஒகஸ்ட் மாதம் எட்டாம் திகதி குறித்த சத்தியப்பிரமாண நிகழ்வு உயர்நீதிமன்றத்தில் இடம்பெற்றிருந்தது.

சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் சட்டத்துறை கற்கை நெறியினை பூர்த்தி செய்த நிபுன வணிகசிங்க, தனது ஆரம்பக் கல்வியை மாத்தறை ராகுல கல்லூரியில் கற்றிருந்தார்.

சட்டத்தரணி நிபுன வணிகசிங்க கிழக்கு மாகாண பிரதம செயலாளர் துசித்த பீ வணிகசிங்க மற்றும் அசோக்கா நாணயக்கார தம்பதியரின் புதல்வர் என்பது குறிப்பிடத்தக்கது.

பிரதம செயலாளர் துசித்த பீ வணிகசிங்கவின் மூத்த புதல்வி நதுணி வணிகசிங்க கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்டத்தரணியாக வெளியேறி, அதே பீடத்தில் விரிவுரையாளராக கடமையாற்றி தற்போது இலங்கை நிருவாக சேவை அதிகாரியாக கடமையாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.

துசித்த பீ வணிகசிங்க அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபராக இருந்து பல்வேறு அர்ப்பணிப்பு மிகுந்த சேவையை வழங்கி, கிழக்கு மாகாண பிரதம செயலாளராக மூவின மக்களுக்கும் சிறப்பான முறையில் தனது சேவையை வழங்கி வருகின்றார். அவரது சேவைகள் குறித்து மக்கள் பலரும் பாராட்டுத் தெரிவிக்கின்றனர்.

## afc தங்கக் கடன் சேவை
## தங்க நகை ஏல விற்பனை

எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சி உடன் கீழேயுள்ள நிலையங்களில் அடகு வைக்கப்பட்டு 31.05.2022 வரை மீட்கப்படாத ஆபரணங்கள் 25.08.2022 முற்பகல் 9.30 மணிக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

### தங்கக் கடன் சேவை நிலையங்கள்

அழுத்கம, அனுராதபுரம், அத்துருகிரிய, அவிசாவளை, மட்டக்களப்பு, சங்கானை, சாவகச்சேரி, சிலாபம், சுன்னாகம், கலேவெல, ஹொரண, ஜா-எல, யாழ்ப்பாணம், கதுருவெல, கடுவெல, கல்பிட்டி, தம்புள்ளை, கிளிநொச்சி, கடவத்தை, களனி, நீர்கொழும்பு, மொனராகலை, மாத்தறை, ஹோமாகம, மாலபே, ஹட்டன், பலாங்கொடை, பதுளை, பாணந்துறை, பிலியந்தலை, பருத்தித்துறை, இரத்தினபுரி, ரிகில்லகஸ்கட, திருகோணமலை, திருநெல்வேலி வவுனியா, அம்பாறை, பூகொட, அம்பலங்கொட, நிட்டம்புவ, கிரிபத்கொட, கிரிந்திவெள, வெலிமடை, நாவலபிட்டி, ராகல, தெஹியத்தகண்டி, கல்கமுவ, களுத்துறை, கேகாலை, குருணாகல், வெல்லவாய, ராஜகிரிய, கோஹவலை, நுவரெலியா, நிக்கவரெட்டியா, மாத்தளை, மதவாச்சிய, ஹிங்குரககோட, எம்பிலிபிட்டியா, அம்பாந்தோட்டை, புதுக்குடியிருப்பு, அக்குரஸ்ஸா, கிளிநொச்சி, கிரிபத்கொடை, மாலபே, மன்னார, காலி, புத்தளம், வோட் இடம், மஹியங்கனை, வென்னப்புவ, மஹரகம, உடப்புவ, கம்பளை, தெனியாய, குளியாப்பிட்டி, பராக்கிரமபுரம், தலவாக்கலை, பசறை, கணேமுல்ல, குருமன்காடு, திருகோணமலை - 2

### ஏல விற்பனை இடம் பெறும் நிலையம் மற்றும் திகதி:

722, கோட்டை வீதிஇராஜகிரிய

25.08.2022

ஏலவிற்பனைக்காக வருகை தரும் அனைவரும் தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும். எவ்வித அறிவித்தலுமின்றி ஏல விற்பனையை இரத்துச் செய்தல், பிற்போடல் மற்றும், இணைப்பதற்கான உரிமையை எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சி கொண்டுள்ளது.

65 1956 இல் இருந்து
எலாயன்ஸ் பினான்ஸ் கம்பனி பி.எல்.சி
சௌபாக்கியத்திற்கோர் நம்பிக்கையான அத்திவாரம்

அடகுச் சேவைத் தலைவர்
எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சீ
722, கோட்டை வீதிஇராஜகிரிய
தொலை : 0115 573600

---

**மத்திய சுற்றாடல் அதிகாரசபை**

## இறுதி தீர்மான பொது அறிவித்தல்
## தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரிவு 23வ (4) இன் கீழான அறிவித்தல்

### உத்தேசிக்கப்பட்ட மீதமவிலிருந்து அம்பாறை வரையான 132 கி. வ மின் கடத்தும் கம்பி மீளமைத்தல் செயற்திட்டத்திற்கான ஆரம்ப சுற்றாடல் பரிசீலனை (ஆ.சு.ப.) அறிக்கை

மேற்கூறப்பட்ட ஆரம்ப சுற்றாடல் பரிசீலனை பிற்சேர்க்கை (ஆ.சு.ப.) அறிக்கையை ஆய்வு செய்ததன் பின்னர் மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது 22 நவம்பர் 2000 ம் திகதியன்று வெளியிடப்பட்ட 1159/22 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் திருத்தியமைக்கப்பட்ட 1993 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க் தேசிய சுற்றாடல் சட்ட (கருத்திட்டங்களை அங்கீகரிப்பதற்கான அறிவித்தல் முறை) ஒழுங்குவிதி 9(1) இற்கமைவாக இல. 50, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்த, கொழும்பு-02 எனும் முகவரியில் அமைந்துள்ள இலங்கை மின்சார சபைக்கு மேற்கூறப்பட்ட செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான அங்கீகாரத்தினை குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகள், விசேட விதிகளுக்கமைவாக வழங்க தீர்மானித்துள்ளது என்பதனை இத்தால் பொதுமக்கள் யாவருக்கும் அறியத்தருகிறேன். 2000 ஆம் ஆண்டின் 53வது இலக்க (திருத்தியமைக்கப்பட்ட) தேசிய சுற்றாடல் சட்டத்தின் பொது ஆவணமாக மேற்கூறப்பட்ட ஆ.சு.ப. அறிக்கையானது மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் நூலகத்தில் உள்ளது.

**பணிப்பாளர் நாயகம்**
**மத்திய சுற்றாடல் அதிகாரசபை "பரிசரபியச",**
**இல.104, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்ல.**

---

**இலங்கை துறைமுக அதிகார சபை**

## திருத்த அறிவித்தல்

2022.08.18 ஆம் திகதி திறக்கப்படவிருந்த, சிலோன் டெயிலிநியூஸ், தினமின, தினகரன் பத்திரிகைகளில் 2022 ஜுலை 28 மற்றும் 29ம் திகதிகளில் ஆரம்பத்தில் பிரசுரமான கீழ்க்காணும் கேள்வியின் மூடப்படும் திகதி இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பாக திணைக்களப் பெறுகைக்குழுவின் தலைவரால் திருத்தப்படுகிறது.

| கேள்வி இலக்கம் | கேள்வியின் பெயர் | குறிப்பிடப்பட்டவாறு மூடப்படும் திகதி | புதிய மூடப்படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|
| CMS/LP/22/ PT/04/021 | ரெடிமிக்ஸ்ட் கொங்றீட் - 30G | 18.08.2022 13.30 மணி | 26.08.2022 13.30 மணி |

**ஏனைய நிபந்தனைகள் மாற்றமின்றி இருக்கும்**

**வழங்கல்கள் பிரிவு**
**இலங்கை துறைமுக அதிகார சபை**
**இல.45, லெயிடன் பெஸ்தியன் வீதி,**
**கொழும்பு - 01**

**தொ.பே இலக்கங்கள் : 2482231,2483338,2482832,2482409**
**பெக்ஸ் இலக்கங்கள் : 2381652, 2470443**

---

### நீர் வழங்கல் அமைச்சு

# தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை

## விலைக்கோரல் அறிவித்தல்

பின்வரும் வேலைகள் / வழங்கல்கலுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை சார்பில் பெறுகைக் குழு தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | தேவையான விலைமனு பிணை | தேவையான தகைமை | VAT உட்பட மதிப்பீட்டுச் செலவு (ரூபா) | தொடர்புகொள்ள வேண்டிய நபர் மற்றும் ஆவணங்கள் வழங்கப்படும் இடம் | இறுதித் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|---|
| | **வழங்கல் கேள்விகள்** | | | | | | |
| 01 | அநுராதபுரம் பிராந்தியத்திற்கு நீர்க் கட்டண பற்றுச்சீட்டுகளை (சாதாரணம் மற்றும் சிவப்பு) அச்சிடுதல், வழங்குதல் மற்றும் விநியோகிப்பதற்கான ஒப்பந்தம். **ஒப்பந்த இல: O&M/NC/DGM/BILL PRINTING/ RSA/2022/106** | 4000/-+ VAT | ரூபா **36,0**00/- | பதிவு செய்யப்பட்ட அச்சிடல் சேவை வழங்குநர்கள் | - | பிஓநி (வடமத்தி), தேநீவவச, கொடகே மாவத்தை, அநுராதபுரம். Tele: 025-2222296, Fax: 025-2225609 | 31/08/2022 பி.ப. 2.00 |
| 02 | Portable Type Ultrasonic Flow மீற்றர்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல் **ஒப்பந்த இல: WC/SS/M(NRW)FLOW METERS/ 2021/182-RH-R** | 6,000/-+ VAT ** | ரூபா 180,000/- | Portable Type Ultrasonic Flow மீற்றர்கள் வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | - | பிஓநி (மேற்கு - மத்திய) தேநீவவச, இல. 175A, கலுதொட்ட கட்டிடம், நாவல வீதி, நுகேகொட. Tele:/Fax: 011- 2856421/ 0112856420-2 | 31/08/2022 மு.ப. 10.00 |
| 03 | மாத்தறை பிராந்திய வேலைத்தளத்திலுள்ள வாகனங்கள் கழுவும் முற்றவெளிக்கு மின்சாரத்தினால் இயங்கும் இரண்டு கம்ப உயர்த்தி ஒன்றை வழங்குதல் மற்றும் நிறுவுதல் **ஒப்பந்த இல: RSC/S/P&C/S/HOIST/WORKSHOP/RH/2021-55R** | 2,000/-+ VAT | ரூபா 15,000/- | இரண்டு கம்பங்கள் கொண்ட மின்சார உயர்த்தி உற்பத்தியாளர்கள் அல்லது இரண்டு கம்ப மின்சார உயர்த்திகளை வழங்குவதற்கு அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்கள் | 0.72 மில்லியன் | பிஓநி (தெற்கு) அலுவலகம், தேநீவவச, 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை. Tele:041-2222105, Fax 041-2221329 | 07/09/2022 பி.ப. 2.00 |
| 04 | மாலிம்பட நீர் சுத்திகரிப்பு பொறித்தொகுதிக்கு மின்னல் மற்றும் இடி பாதுகாப்பு முறைமையை வழங்குதல் மற்றும் நிறுவுதல் **ஒப்பந்த இல: RSC(S)/P&C/S/LPS&SPS/ MALIMBADA/RH/2022-02** | 6,000/-+ VAT | ரூபா 120,000/- | மின்னல் மற்றும் இடி பாதுகாப்பு முறைமையை வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | 8.00 மில்லியன் | பிஓநி (தெற்கு) அலுவலகம், தேநீவவச, 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை. Tele:041-2222105 Fax 041-2221329 | 07/09/2022 பி.ப. 2.00 |
| 05 | களனி பிராந்தியத்திலுள்ள வேலைகளுக்கு Aggregate Base Course (ABC) மற்றும் கற் துகள்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல் **ஒப்பந்த இல: RSC(W/N)/SS/ABC/KEL(O&M)/2022/53** | 4,000/- + VAT | ரூபா 52,000/- | ஆவணத்தின் பிரகாரம் | 3.47 மில்லியன் | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (W/N) அலுவலகம், இல. 433/4A, கணேமுல்ல வீதி, கடவத்தை. Tele: 0112922129, Fax: 0112922146 | 31/08/2022 மு.ப. 10.00 |
| | **M & E கேள்விகள்** | | | | | | |
| 06 | புத்தளம் மாவட்டத்தில் பாடசாலை நிகழ்ச்சித் திட்டத்திற்கு Bore Hole type Submersible (படிநிலை II) நீர்ப் பம்பித் தொகுதிகளை வழங்குதல் மற்றும் விநியோகித்தல். (20 kWக்குக் குறைவானவை ) **ஒப்பந்த இல: RSC(NW)/M(PUT)/P/RC(SCH/PRO)/PUT DIS/2022/43** | 4,000/-+ VAT | ரூபா 60,000/- | உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் | 4.0 மில்லியன் | பிஓநி (வட மேல்) அலுவலகம், தேநீவவச, தம்புல்லை வீதி, குருநாகல். Tele: 037-2223158 Fax : 037-2230086 | 07/09/2022 பி.ப. 2.00 |
| | **சேவைக் கேள்விகள்** | | | | | | |
| 07 | பியகம நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிக்கான சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்பு சேவைகள் **ஒப்பந்த இல : DPC/WP/S/BIY/CIVIL/O&M/2022/06** | 12,500/- + VAT | ரூபா 300,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | - | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவச, காலி வீதி, இரத்மலானை. Tele: 011-2605328, Fax: 011-2635885 | 07/09/2022 மு.ப. 10.00 |
| 08 | பொல்பித்திகம, மாஹோ நீர் வழங்கல் திட்டங்கள் மற்றும் தெதுருஓயா நீர் சுத்திகரிப்பு பொறித்தொகுதிகளுக்கு தொழிலாளர் சேவைகளை வழங்குதல் **ஒப்பந்த இல : RSC(NW)/M-KURU/SER/O&M/POLPI/2022/49** | 12,500/- + VAT | ரூபா 165,000/- | தேர்ச்சியற்ற மற்றும் தேர்ச்சிபெற்ற தொழிலாளர் சேவைகளை வழங்குவதில் குறைந்தபட்சம் 02 வருடங்கள் அனுபவம் வாய்ந்த இயைபுடைய பிரதேசங்களிலுள்ள பிரதேச செயலகங்களின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள சமூக அடிப்படையிலான அமைப்புகள் (COB) அல்லது வியாபாரப் பதிவின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவனம் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 16.43 மில்லியன் | பிஓநி (வட மேல்) அலுவலகம், தேநீவவச, தம்புல்லை வீதி, குருநாகல். Tele: 037-2223158 Fax : 037-2230086 கேள்வி முன்னோடிக் கூட்டம் 2022-08-29ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு குருநாகல் முகாமையாளர் அலுவலகத்தில் இடம்பெறும். | 31/08/2022 பி.ப. 2.00 |
| 09 | நாரம்மல மற்றும் கிரிஉல்ல நீர் வழங்கல் திட்டங்களுக்கு தொழிலாளர் சேவைகளை வழங்குதல் **ஒப்பந்த இல: RSC(NW)/M-KURU/SER/O&M/NARA-GIRI/2022/52** | 12,500/- + VAT ** | ரூபா 131,000/- | தேர்ச்சியற்ற மற்றும் தேர்ச்சிபெற்ற தொழிலாளர் சேவைகளை வழங்குவதில் குறைந்தபட்சம் 02 வருடங்கள் அனுபவம் வாய்ந்த இயைபுடைய பிரதேசங்களிலுள்ள பிரதேச செயலகங்களின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள சமூக அடிப்படையிலான அமைப்புகள் (COB) அல்லது வியாபாரப் பதிவின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவனம் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 13.05 மில்லியன் | பிஓநி (வட மேல்) அலுவலகம், தேநீவவச, தம்புல்லை வீதி, குருநாகல். Tele: 037-2223158 Fax : 037-2230086 கேள்வி முன்னோடிக் கூட்டம் 2022-08-29ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு புத்தளம் முகாமையாளர் அலுவலகத்தில் இடம்பெறும். | 31/08/2022 பி.ப. 2.00 |
| 10 | பிஓநி வடக்கு கட்டிடம் மற்றும் இடப்பரப்புக்கு ஜெனிட்டோரியல் சேவைகளை வழங்குதல் **ஒப்பந்த இல: RSC/N/DGM/JANITORIAL-RSC(N) /2022/008** | 4,000/-+ VAT | ரூபா 48,000/- | ஆவணத்தின் பிரகாரம் | 4.87 மில்லியன் | பிஓநி (வடக்கு) அலுவலகம், தேநீவவச, யாழ்ப்பாணம் வீதி, வவுனியா. Tele:024-2227313/ 024-2225719/ 024-2227340 Fax:024-2225088/ 024-2227341 கேள்வி முன்னோடிக் கூட்டம் 2022-08-30ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு யாழ்ப்பாணம் வீதி, வவுனியா தேநீவவ சபையில் இடம்பெறும். | 07/09/2022 மு.ப. 10.00 |
| 11 | ரதம்பல நீர் வழங்கல் திட்டம் மற்றும் பிரவுன்ஸ்ஹில் நிலத்தடி நீர்த்தேக்க இடப்பரப்புக்கு ஜெனிட்டோரியல் சேவைகளை வழங்குதல் **ஒப்பந்த இல: RSC(S)/P&C/J/RADAMPALA & BROWNSHILL/ O&M/2022-81** | 4,000/-+ VAT | ரூபா 37,500/- | மூன்று வருடங்கள் அல்லது அதற்கு மேல் ஜெனிட்டோரியல் சேவைகளில் அனுபவம் வாய்ந்த வியாபார பதிவு ஒழுங்குபடுத்தலின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் | 2.5 மில்லியன் | பிஓநி (தெற்கு) அலுவலகம், தேநீவவச, 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை. Tele:041-2222105, Fax 041-2221329 | 31/08/2022 பி.ப. 2.00 |
| | **வாகனங்களை வாடகைக்கமர்த்துதல்** | | | | | | |
| 12 | களனி பிராந்தியத்திற்கு பக்கோ லோடர் ஒன்றை வாடகைக்கமர்த்துதல் **ஒப்பந்த இல: RSC(W/N)/SS/HIRING/KEL(O&M)/2022/50** | 6,000/-+ VAT | ரூபா 6,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (W/N) அலுவலகம், இல. 433/4A, கணேமுல்ல வீதி, கடவத்தை. Tele: 0112922129 Fax: 0112922146 | 31/08/2022 மு.ப. 10.00 |

2022-08-10ஆம் திகதி பிரசுரமான விளம்பரம் தொடர்பானது. தேவையற்ற வாகனங்கள் மற்றும் உபகரணங்களை விற்பனை செய்தல் **ஒப்பந்த இல: DGM/M&E/REDUNDANT VEHICLES & EQUIOMENT/2022/01 -** இந்தக் கேள்விக்கான ஆவணங்கள் பின்வரும் அலுவலகங்களில் வழங்கப்படும் என்பதை தயவு செய்து கவனத்திற் கொள்ளவும்.
கேள்வி மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு தேநீவச தலைமை அலுவலகம் மற்றும் சகல பிராந்தியங்களின் பிஓநி (மே/வ), பிஓநி (மே/தெ), பிஓநி (மே/ம), பிஓநி (ஊவா), பிஓநி (சப்ரகமுவ), பிஓநி (வ/ம), பிஓநி (கிழக்கு), பிஓநி (தெற்கு), பிபொமு (கி/தெ), பிஓநி (வ/மே), பிஓநி (வடக்கு), பிஓநி (மத்திய), பிஓநி (மேற்கு உற்பத்திகள்)

2022-08-03ஆம் திகதி பிரசுரமான விளம்பரம் தொடர்பானது. ஹிக்கடுவ நீர் வழங்கல் திட்டத்திற்கு முச்சக்கர வண்டியொன்றை வாடகைக்கமர்த்துதல் **ஒப்பந்த இல: RSC(S)/P&C/HIRING/T.WHEELER/ HIKKADUWA/O&M/2021-191R -** இந்தக் கேள்வியின் முடிவுறுத்தல் திகதி 2022-08-24ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

2022-08-03ஆம் திகதி பிரசுரமான விளம்பரம் தொடர்பானது. வெலிகம நீர் வழங்கல் திட்டத்திற்கு க்றூ கெப் ஒன்றை வாடகைக்கமர்த்துதல் **ஒப்பந்த இல: RSC(S)/P&C/HIRING/CREW CAB/WELIGAMA/O&M/2022-107 -** இந்தக் கேள்வியின் முடிவுறுத்தல் திகதி 2022-08-24ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

தயவு செய்து PCA 3 படிவத்தைப் பெற்றுக்கொள்ள இணையதளத்தில் நிகழ்நிலை (online) ஊடாக கம்பனி பதிவாளருடன் பதிவு செய்து கொள்ளவும். ("**" எனக் குறியீடு இடப்பட்ட கேள்விகளுக்கு மட்டும்) பதிவு செய்து கொள்வதற்கு gmail பயன்படுத்த வேண்டுமென மேலும் தயவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது.

முடிவுத் திகதிக்கு முதல் நாள் வரை சாதாரண வேலை நேரங்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் மற்றும் வியாபாரக் கடிதத் தலைப்பிலான வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும்.

சாதாரண வேலை நேரங்களில் ஆவணங்கள் வழங்கப்படும் இடத்திலேயே கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

சமுகம்தந்துள்ள கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்விகள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் கேள்விகள் திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பப்படும்.

**தலைவர்,**
**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை.**

# காணிகளைக் குத்தகைக்கு விடுவதற்காக செயற்றிட்ட முன்மொழிவுகளைக் கோரல்

### மாநகர சபை - நுவரெலியா

நுவரெலியா மாநகர சபைக்கு உரித்தான ஹாவாஎளிய உடபுஸ்ஸலாவ வீதியிலுள்ள 02 ரூட் 34.8 பேர்ச் காணியிலமைந்துள்ள நிரந்தர கட்டிடத்துடன் கூடிய காணியில் கீழ்க்குறிப்பிடப்படும் செயற்றிட்டங்களின் தகுதி வாய்ந்த செயற்றிட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்காக மாநகர ஆணையாளரினால் முன்மொழிவுகள் கோரப்படுகின்றன.

- ➢ தனியார் மருத்துமனையொன்றை நடைமுறைப்படுத்தல்
- ➢ காட்சிக்கூடமொன்றை நடைமுறைப்படுத்தல்
- ➢ ஆடைத்தொழிற்சாலையொன்றை நடைமுறைப்படுத்தல்
- ➢ தேசிய பொருளாதாரத்திற்கு அந்நிய செலவாணியை பெற்றுக்கொள்ளக்கூடிய ஏனைய தகுதியான முன்மொழிவுகள்

இதற்கான, நிபந்தனைகளுடன் கூடிய விண்ணப்பப்படிவத்தை, வைப்புத்தொகை மற்றும் படிவக்கட்டணத்தைச் செலுத்தி நுவரெலியா மாநகர சபையின் காணிப் பிரிவில் 2022.08.24 முதல் 2022.09.07 அன்று பி.ப.03.00 வரை பெற்றுக்கொள்ளலாம். படிவக்கட்டணம் ரூபா 5000/- மற்றும் அரசு அனுமதித்த வரிகளும் செலுத்தப்படல் வேண்டும்.

முன்மொழிவுகளை உள்ளடக்கும் உறையின் இடதுபக்க மேல் மூலையில், “செயற்றிட்டத்திற்கான முன்மொழிவுகளை சமர்ப்பித்தல்” எனக் குறிப்பிடுதல் வேண்டுமென்பதுடன் “மூலப்பிரதி” மற்றும் “நகல்பிரதி” எனத் தெளிவாக குறிப்பிட்டு தனித்தனியாக முத்திரையிட்டு மாநகர ஆணையாளர், மாநகர சபை, நுவரெலியா என்ற முகவரிக்கு இரண்டு தபாலுறைகளில் 2022.09.08 அன்று 10.30 மணிக்கு முன்னர் பதிவுத்தபாலில் அனுப்புதல் அல்லது நேரடியாக ஒப்படைத்தல் மேற்கொள்ளல் வேண்டும். நேரடியாக ஒப்படைப்பதானால், மாநகர ஆணையாளரின் அலுவலகத்தில் முத்திரையிட்டு வைக்கப்பட்டுள்ள “காணி குத்தகைக்கு விடுதல்” எனக் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிற் சேர்த்தல் வேண்டும்.

2022 செப்டம்பர் 08 அன்று மு.ப.10.30 இற்கு விலைமனு திறக்கப்படுவதுடன், அவ்வேளையில் செயற்றிட்ட முன்மொழிவாளர் அல்லது அவரின் அதிகாரம் அளிக்கப்பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.

தாமதமாகக் கிடைக்கப்பெறும் செயற்றிட்ட முன்மொழிவுகள் நிராகரிக்கப்படுவதுடன் சமர்ப்பிக்கப்படும் முன்மொழிவுகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் முழுமையான அதிகாரம் நுவரெலியா மாநகர சபைக்கு உரித்தாகும்.

| தொடர் இலக்கம் | விபரம் | கேள்விப் படிவக் கட்டணம் ரூபா | மீளளிக்கப் படும் வைப்புத் தொகை ரூபா |
|---|---|---|---|
| 01 | ஹாவாஎளிய உடபுஸ்ஸலாவ வீதியிலமைந்துள்ள 02 ரூட் 34.8 பேர்ச் அளவான காணியிலமைந்துள்ள நிரந்தரக் கட்டிடத்துடன் கூடிய காணியைக் குத்தகைக்கு விடல் | 5,000.00 | 20,000.00 |

**எஸ்.பி.கே.போதிமான்ன**
**பதில் மாநகர ஆணையாளர்**
**மாநகரசபை, நுவரெலியா**

விசாரணைகள் : - 052-2222275

# பெறுகை அறிவித்தல்

## குருநாகல் பிரதேச சபை

குருநாகல் பிரதேச சபைக்கு உரித்தான கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் காணப்படும் ஆதனங்களை 2022.10.01 முதல் 2025.10.01 வரையான காலத்திற்குக் குத்தகைக்கு விடுவதற்காகக் கேள்விகள் கோரப்படுகின்றன.

1. பெறுகைப்படிவங்களை வழங்கல் 2022.08.17 முதல் 2022.09.14 வரை மேற்கொள்ளப்படும்.
2. 2022.09.14 அன்று பி.ப. 03.00 வரை மாத்திரம் கேள்விப்படிவங்கள் வழங்கப்படுவதுடன், 2022.09.15 அன்று மு.ப. 10.00 வரை மாத்திரம் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படுவதுடன், அன்றையதினம் மு.ப. 10.30 இற்கு பெறுகை திறக்கப்படும்.
3. உரித்தான பெறுகைக்கான பிணைத் தொகை, விலைமனுப் பிணை மற்றும் படிவக்கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பெறுகைப் படிவங்களைப் பூரணப்படுத்தி, ‘செயலாளர், குருநாகல் பிரதேச சபை, உடதிகண, சாரகம’ என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்புதல் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்த்தல் மேற்கொள்ளலாம்.
4. நீங்கள் வரி செலுத்தும் அனைத்து ஆதனங்களிற்கும், அரசு அவ்வப்போது விதிக்கும் வரிகள் மற்றும் கட்டணங்களைச் செலுத்துதல் வேண்டும்.

**தலைவர்,**
**குருநாகல் பிரதேச சபை**
**உடதிகண - சாரகம.**

**அட்டவணை 01**

**2022ஆம் ஆண்டில் குத்தகைக்கு விடப்படும் ஆதனங்கள்**

| தொடர் இலக்கம் | 2022ஆம் ஆண்டில் குத்தகைக்கு விடப்படும் ஆதனங்கள் | கேள்விப் படிவக் கட்டணம் ரூபா. ச | மீளளிக்கப்படும் கேள்விப் பிணைத் தொகை ரூபா. ச. | 2022ம் ஆண்டிற்கான ஆகக்குறைந்த கேள்வி ரூபா.ச. |
|---|---|---|---|---|
| 1 | பிரதான அலுவலக சிற்றுண்டிச்சாலை | 250.00 | 25,500.00 | 510,000.00 |
| 2 | பிரதான அலுவலக உடல் வலுவூட்டல் நிலையம் | 250.00 | 19,200.00 | 384,000.00 |

**குருநாகல் பிரதேச சபை**
**உடதிகண - சாரகம**
**2022.08.17**

**தலைவர்**
**குருநாகல் பிரதேச சபை**

# மீட்கப்படாத அடகு தங்க ஆபரண ஏலவிற்பனை

மக்கள் வங்கியின் கேகாலை பிராந்தியத்துக்கு உட்பட்ட கீழ்காணும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் **31.12.2020** ம் திகதி வரை அடகு வைக்கப்பட்டுள்ள **23 செப்டம்பர் 2022** திகதி வரை மீட்கப்படாத அடகு தங்க ஆபரணங்கள் கீழே குறிப்பிட்டுள்ள திகதிகளில் கீழ்க்காணும் இடங்களில் மு.ப.9.00 மணி முதல் ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

| **ஏலவிற்பனை திகதி** | **2022 செப்டம்பர் 24 (சனி தினம்)<br>2022 செப்டம்பர் 25 (ஞாயிறு தினம்)** | | | |
|---|---|---|---|---|
| **ஏலவிற்பனை இடம்** | கேகாலை கிளை வளாகம் | ருவன்வெல்ல கிளை வளாகம் | மாவனல்லை கிளை வளாகம் | வரக்காபொல கிளை வளாகம் |
| **அடகு வைக்கப் பட்டுள்ள கிளை** | கேகாலை, கேகாலை கடை வீதி, புலத் கொஹுபிட்டிய, கொட்டியாகும்புர | ருவன்வெல்ல, எட்டியாந் தோட்டை, தெரணியகல, தெஹிஓவிட்ட, கோனகல்தெனிய | மாவனல்லை, இறம்புக்கனை, ஹெம்மாத்தகம, அரநாயக்க | வரக்காபொல, துல்ஹிரிய, கலிகமுவ |
| **அடகு வைக்கப் பட்டுள்ள சேவை நிலையங்கள்** | மொறொன் தொட்ட, தேவாலகம | கரவனல்லை கித்துல்கல, அமித்திரிகல | மாவனல்லை, அலுத்நுவர, பத்தம்பிட்டிய | அல்கம, கலப்பிட்டமட, ஹொரகஸ் மங்கட, நெலுந்தெனிய |

மேற்குறிப்பிட்ட பிரகாரம் நடைபெறவுள்ள இந்த ஏலவிற்பனை மறுஅறிவித்தல் ஏதுமின்றி வங்கியின் விருப்பத்திற்கு ஏற்ப இரத்துச் செய்தல், ஒத்தி வைத்தல் அல்லது ஒன்றிணைத்து நடாத்தல், ஏலவிற்பனை நடைபெறும் இடத்தை மாற்றியமைத்தல் போன்ற எந்த நடவடிக்கையையும் எடுக்கும் அதிகாரம் வங்கிக்கு உள்ளது

**பிராந்திய முகாமையாளர்**
**மக்கள் வங்கி**
**பிராந்திய தலைமைக் காரியாலயம்**
**இல.14, வின்ஸ்டன் விக்ரமசிங்க மாவத்தை, கேகாலை**

**தொலைபேசி இல: 035-2222300**
**035-2222396**

மக்கள் வங்கி PEOPLE'S BANK
www.peoplesbank.lk
AA+ (lka) Fitch Rating, AA - Brand Finance Rating

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## பரீட்சைகள் திணைக்களம்

## காகிதாதிகளின் வழங்கலுக்கான பெறுகை

**2022.08.01 ஆம் திகதியிலிருந்து 2023.07.31 ஆம் திகதி வரையிலான ஒருவருட கால எல்லைக்கானது)**

**Contract No.: EX/SB/04/04/2022**

2022.08.01 ஆம் திகதியிலிருந்து 2023.07.31 ஆம் திகதி வரையிலான ஒருவருட கால எல்லைக்கு காகிதாதிகளின் வழங்கலுக்கான பெறுகைக்காக விதிக்கப்பட்ட ஆகக் குறைந்த அனுபவத்தையுடைய தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பரீட்சைகள் திணைக்கள பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் இப்போது முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார். முழுமையான விபரங்கள் விலைமனுக்கோரல் ஆவணத்தில் அடக்கப்பட்டுள்ளன.

2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. ஒப்பந்த தகுதியைப் பெறுவதற்கு சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் காகிதாதிகளை வழங்குவதில் மூன்று வருட அனுபவத்தையுமுடையவராகவுமிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பரீட்சைகள் திணைக்கள, 3 ஆம் மாடியின் வழங்கல் கிளையிலிருந்து (தொலைபேசி : 011-2786200 அல்லது 011-2785219) பெற்று 2022.09.06 ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரை விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.
5. ஒவ்வொரு ஆவணத்திற்கும் மீளளிக்கப்படாத கட்டணமான 7000 ரூபாவைச் செலுத்திய பின்னர் 2022.09.06 ஆம் திகதி பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதியுடன் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் வழங்கல் பிரிவிலிருந்து கொள்வனவு செய்யப்படலாம். (பணக்கொடுப்பனவு ரொக்கப்பணத்திலேயே இருத்தல் வேண்டும்)
6. விலைமனுக்கள் அவற்றை திறக்கும் நாளிலிருந்து 90 நாட்களுக்கு (2022.12.06 ஆம் திகதி வரையும்) செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
7. அனைத்து விலைமனுக்களும் பின்வருமாறு அமைந்துள்ள விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும் : இலங்கையில் செயற்படும் புகழ் வாய்ந்த வர்த்தக வங்கியொன்றிலிருந்து நிபந்தனையற்ற வங்கி உத்தரவாதத்துடனும் விலைமனுக்கோரல் ஆவணத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரியில் விலைமனுக்களை சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 120 நாட்களுக்கு (2023.01.05 ஆம் திகதி வரையும்) செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதுமான விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| விலைமனுவின் பெறுமதி | விலைமனுப்பிணை |
|---|---|
| 500,000 ரூபா வரையிலானது | 5,000 ரூ. |
| 500,001 ரூபாவிலிருந்து 1,000,000 வரையிலானது | 10,000 ரூ. |
| 1,000,000 ரூபாவிற்கு மேற்பட்டது | 15,000 ரூ. |

8. விலைமனுக்கள் 2022.09.07 ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பத்தரமுல்ல, பெலவத்த, பரீட்சைகள் திணைக்கள, 3 ஆம் மாடியின் வழங்கல் கிளையில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் திறக்கப்படாமல் திருப்பி அனுப்பப்படும். விலைமனுக்களை மூடிய பின்னர், மேலேயுள்ள முகவரியில் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் அவைகள் திறக்கப்படும்.
9. உரிய முறையில் பூரணப்படுத்தப்பட்டதுடன் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **“Procurement of Supplying Stationery”, Contract No. EX/SB/04/04/2022** என குறிப்பிடப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
10. எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக் கொள்வதற்கும் நிராகரிப்பதற்கும் விலைமனுக்கோரல் செயன்முறையை ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன்னராக எந்த நேரத்திலும் விலைமனு முன்னெடுத்தலை இல்லாதொழிப்பதற்காகவும் இதன் வழியாக பாதிப்படைந்த விலைமனுதாரருக்கு அல்லது விலைமனுதாரர்களுக்கு எவ்வித பொறுப்பையும் வழங்காமலிருப்பதற்கும் திணைக்கள பெறுகைக் குழுவின் நடவடிக்கைகளுக்கான காரணத்தையும் பாதிப்படைந்த விலைமனுதாரர் அல்லது விலைமனுதாரர்களுக்கு எவ்வித கடப்பாட்டையும் காரணத்தையும் சுமத்தாமலிருப்பதற்கான உரிமையை திணைக்கள பெறுகை குழுவானது கொண்டுள்ளது.

**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,**
**பரீட்சைகள் திணைக்களம்,**
**பெலவத்த, பத்தரமுல்ல.**
**17.08.2022**

BE BETTER INFORMED! News you can trust now free on your mobile phone.
Visit - apps.lakehouse.lk
Dinamina Daily News Thinakaran
DOWNLOAD TODAY!
AVAILABLE AT
LAKE HOUSE

# பெறுகை அறிவித்தல்

## தேசிய வைத்தியசாலை கண்டி

## சுகாதார அமைச்சு

01. கண்டி தேசிய வைத்தியசாலையின் பெறுகைக் குழுத் தலைவரினால் பின்வரும் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்காக 2022-09-09ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**● Procurement of Firewall, UPS and Ink Tank Printer for National Hospital Kandy**

| Item Description | | Qty |
|---|---|---|
| 1 | Firewall | 01 |
| 2 | 6 kVA Online Uninterrupted Power Supply System | 02 |
| 3 | Existing 10 kVA Uninterrupted Power Supply System Battery Replacement | 32 |
| 4 | Ink tank Printer with tone and other accessories | 20 |

02. 2022 ஆகஸ்ட் மாதம் 18ஆம் திகதி முதல் 2022 செப்டெம்பர் மாதம் 08ஆம் திகதி வரை மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தினுள் கண்டி தேசிய வைத்தியசாலைக்கு 2000.00 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி வேண்டுகோள் ஒன்றைச் செய்து பெற்றுக்கொள்ளப்படும் மாதிரிப் படிவங்களில் விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். கண்டி தேசிய வைத்தியசாலையில் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவுறுத்தப்பட்டதன் பின் மு.ப. 10.30 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் கலந்துகொள்வதற்கு இடமளிக்கப்படும்.

03. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை பதிவுத் தபால் மூலம் பின்வரும் முகவரிக்கு அனுப்பி அல்லது கண்டி தேசிய வைத்தியசாலை பிரதான கணக்காளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டு ஒப்படைக்கலாம். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் நீங்கள் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் வேலையைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

04. எவ்வாறாயினும் விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள் மற்றும் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பப்படும். விலைமனு ஆவணங்களை கண்டி தேசிய வைத்தியசாலையில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.


05. 05 மில்லியன் ரூபாவுக்கும் மேற்பட்ட விலைமனுக்களுக்கு இலங்கை கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் பதிவுச் சான்றிதழ் (PCA3) இருத்தல் வேண்டும்.

06. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் (Per bid meeting) 2022-08-30ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கண்டி தேசிய வைத்தியசாலையில் இடம்பெறும்.

07. போட்டி ரீதியிலான முறையின் கீழ் விலைக்கோரல் இடம்பெறும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**தேசிய வைத்தியசாலை,**
**கண்டி.**

# சிறு விளம்பரம்






**மோட்டார் வாகனங்கள்**



119

**பஸ்கள், லொறிகள்**
விற்பனைக்கு

61-1477 Mitsubishi L300, 1991, Bus கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே 0714 5 42 958 . 047401



122

**மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்**
விற்பனைக்கு

WP AAV-7596 Bajaj, 2014, WP ABE-4203 b ajaj, 2015, Threew heel கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே 0711 2 10 810 . 047398

**இலக்கம் 693ஏ, நீர்கொழும்பு வீதி, மாபோல, வத்தளை இல் உள்ள**

**C.R.பெரேரா அடகு நிலையம்**

**2022.08.31 முதல் மூடப்படும் என அறிவிக்கப் படுகின்றது.**

**உரிமையாளர் தொலைபேசி இல : 0112940140 0723464367**

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

கொழும்பு மாவட்டத்தின் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே பிரதேச செயலாளர் பிரிவின் 514 வெலிக்கட கிழக்கு கிராம அலுவலர் பிரிவின், இலக்கம் 216, ராஜகிரிய வீதி, ராஜகிரிய என்ற முகவரியில் வசிக்கும், ஜயலத் சேனாரத்னகே வருணபிரிய சேனாரத்ன ஆகிய நான், இதன் பின்னர், ஜயலத் சேனாரத்னகே வருண ஜயலத் என உபயோகிப்பேன் என இலங்கை குடியரசிற்கும் அனைத்து இலங்கைப் பிரசைகளிற்கும் மிகவும் கௌரவமாக அறிவித்துக் கொள்கின்றேன்.

J.S. வருண ஜயலத்

எனது இல. 3/2/1/142
பிரதேச செயலகம்
மினுவங்கொடை
2022.08.08

## காணி சுவீகரிப்பு சட்ட மூலம் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

இங்கு கீழே உப அட்டவணையில் விபரிக்கப்படும் காணியை அரசாங்கம் சுவீகரிக்க உத்தேசித்துள்ளது. மேலதிக விபரங்களுக்கு 2022.05.09 திகதி இலக்கம் 2279/08 உடைய அரச அதிவிசேட வர்த்தமானி பத்திரிகையின் பகுதி III ஐ பார்க்கவும்.

**உப அட்டவணை**

| | |
|---|---|
| மாவட்டம் : | கம்பஹா |
| பிரதேச செயலகப் பிரிவு | : மினுவங்கொடை |
| கிராம சேவகர் பிரிவு | : இல. 125/5 மினுவங்கொடை வடக்கு |
| ஊரின் பெயர் | : மெடமுல்லை |
| காணியின் பெயர் | : கோன் கஹவத்தை அல்லது கோன் கஹவத்தே கெபல்ல |
| காணிப் பிரித்தெடுப்பு இல | : மு.பி.கம் 4289 |
| காணித்துண்டு இல | : 01 |
| பரப்பளவு : | 0.1012 ஹெக்டயார் |

**யு.டப்ளிவ்.ரி.யு. ராஜகருண**
**பிரதேச செயலாளர்**
**மினுவங்கொடை.**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# இலங்கை பரீட்சைத் திணைக்களம்

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப் பரீட்சை - 2021(2022)

### செய்முறைப் பரீட்சைக்குத் தோற்ற முடியாமல் போன பரீட்சார்த்திகளுக்காக மீண்டும் செய்முறைப் பரீட்சையை நடாத்துதல்

இப்பரீட்சையின் எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றி செய்முறைப் பாடங்களின் செய்முறைப் பரீட்சைக்குத் தோற்ற முடியாமல் போனதற்காக எங்களிடம் வேண்டுகோள் விடுத்த பரீட்சார்த்திகளின் செய்முறைப் பரீட்சை கீழே குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் பின்வரும் நிலையங்களில் நடாத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

| பாட எண் | பாடம் | செய்முறைப் பரீட்சை நடைபெறவுள்ள பரீட்சை நிலையம் | பரீட்சை நடைபெறும் திகதி |
|---|---|---|---|
| 52 | நடனம் (தேசிய) | மஹரகம ம.ம.வி, மஹரகம - மண்டப இல 01, 02 | 2022.08.20 |
| 53 | நடனம் (பரதம்) | இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு-04 | 2022.08.20 |
| 28 | மனைப்பொருளியல் | அநுலா வித்தியாலயம், நுகேகொட.<br>சென் அந்தோனி மகளிர் வித்தியாலயம், கொழும்பு-03 | 2022.08.20 |
| 54 | சங்கீதம் (கீழைத்தேய) | சென் ஜோன் ம.வி, நுகேகொட. | 2022.08.20 |
| 55 | சங்கீதம் (கர்நாடகம்) | இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு-04 | 2022.08.20 |
| 56 | சங்கீதம் (மேலைத்தேய) | இலங்கை பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்ல. | 2022.08.19 |
| 57 | நாடகமும் அரங்கியலும் (சிங்களம்) | ஜனாதிபதி வித்தியாலயம், மஹரகம - மண்டப இல 01, 02 | 2022.08.20 |
| 58 | நாடகமும் அரங்கியலும் (தமிழ்) | இந்துக் கல்லூரி, கொழும்பு-04 | 2022.08.20 |
| 65 | பொறிமுறை தொழில்நுட்பவியல் | கொட்டாஞ்சேனை ம.ம.வி, கொழும்பு-13<br>புஷ்பதான மகளிர் ம.வி , கண்டி<br>வவுனியா தமிழ் ம.ம.வி, வவுனியா | 2022.08.21 |
| 66 | உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல் | மஹரகம ம.ம.வி , மஹரகம | 2022.08.21 |

02. மேற்படி செய்முறைப் பரீட்சைக்கான உரிய அனுமதிப்பத்திரம் இதுவரையில் தங்களுக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஏதேனும் விசாரணைகள் இருப்பின் பின்வரும் தொலைபேசி இலக்கங்களூடாக தொடர்பு கொள்ளவும்.

**விசாரணை :**

தொலைபேசி இலக்கம் 011- 2784208, 2784537, 2786616

தொலைநகல் இலக்கம் 011 - 2784422

தபால் முகவரி : பரீட்சை ஆணையாளர் நாயகம், பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேற்றுக் கிளை, த.பெ.இல. 1503, கொழும்பு.

**எல்.எம்.டீ . தர்மசேன**
**பரீட்சை ஆணையாளர் நாயகம்**

**6/3/NOTICE**
**பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேற்றுக் கிளை,**
**இலங்கை பரீட்சைத் திணைக்களம்**
**பெலவத்தை, பத்தரமுல்ல**
**2022.08.17ஆம் திகதி**

# பெறுகை அறிவித்தல்

## ஊவா மாகாண கல்வித் திணைக்களம்

### ஊவா மாகாண சபை

ஊவா மாகாண கல்வித் திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் தலைவரால் OFID நிதியின் கீழ் செயற்படும் கீழ்க்காணும் வேலைகளை நிறைவேற்றுவதற்காக நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA) பதிவுடன் தகைமையுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 2022.08.17 முதல் 2022.09.12 வரை பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. தேசிய கேள்விகோரல் முறையின் மூலம் கேள்விகள் கோரப்படுவதுடன் ஒப்பந்தக்காரர்களின் மாகாண முன்னுரிமை மற்றும் நிர்மாண அபிவிருத்தி அதிகார சபையின் பதிவுத்தர முன்னுரிமை, கேள்வி மதிப்பீட்டின் போது கவனத்தில் கொள்ளப்படும்.

| தொடர் இலக்கம் | வேலை இலக்கம் | கைத் தொழிலின் பெயர் | சிவில் வேலைகளின் பெறுமதி மில்லியன் | தேவைப் படும் குறைந்த பட்ச இக்டாட் தரம் மற்றும் துறை | நிர்மாண காலம் மாதங்கள் | கேள்விப் பிணைத் தொகை ரூ | கேள்வி ஆவணக் கட்டணம் ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | UP/ ED/01/202 | பொ/ஒப்பேகொட ம.வி மூன்று மாடி தொழில்நுட்ப வசதிகளுடனான கட்டிடத்தை அமைத்தல் | 65.93 | C4 | 08 | 660,000.00 | 6,000.00 |

மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்படும் குறைந்தபட்ச சீடா (CIDA) பதிவுடன் மற்றும் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாத வெற்றிகரமான, தகைமையுடைய கேள்விதாரர்கள் கேள்வி வழங்கலுக்காக தகைமை பெறுவர்.

03. கேள்வி மதிப்பீட்டின் போது கீழ்க்காணும் தகைமைகள் கவனத்தில் கொள்ளப்படும்.

I. கடந்த ஐந்து ஆண்டுகளில் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்படும் கைத்தொழிலை நிறைவேற்றி இருத்தல் அல்லது அக்கைத்தொழிலின் பெறுமதியில் 60% இற்கு மேல் கூடுதலான பெறுமதியுடைய அதற்கு சமமான கட்டிடமொன்றை நிறைவேற்றிய அனுபவம்

II. கடந்த ஐந்து ஆண்டுகளில் ஒரு வருடத்திற்கு ரூ.50 மில்லியன் வருமானத்தை நடத்தி சென்றிருத்தல்

III. கேள்விதாரர்கள் தற்போது நிர்மாண விடயங்களை நடத்திச் செல்கின்ற கைத்தொழில்களின் பெறுமதி மற்றும் அக்கைத்தொழில்களின் பௌதீக முன்னேற்றம்

IV. வேலைத்தளத்திற்காக முழுநேர அல்லது பகுதிநேர தகைமையுடைய பொறியியலாளர் மற்றும் தொழில்நுட்ப அதிகாரி ஒருவரை இணைத்தல்

04. சிவில் வேலைப் பெறுமதி ரூ.5மில்லியனுக்கு மேற்பட்ட வேலைகளுக்கு 1987 இல 03 பொது ஒப்பந்த சட்டத்தின் கீழ் பதிவு செய்திருத்தல் வேண்டும். இல.400, டி.ஆர்.விஜேவர்தன மாவத்த, கொழும்பு - 10) பதிவுச்சான்றிதழை இணைத்தல் வேண்டும்.

05. பெறுகை மாதிரிப் பத்திரங்களை 2022.08.17 முதல் 2022.09.09 வரை மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரை அலுவலக நேரங்களில் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்படுமாறு அக்கைத்தொழிலுக்கு உரிய மீளளிக்கப்படும் கேள்விப்பிணை வைப்பு மற்றும் கேள்வி ஆவணக் கட்டணத்தை ஊவா மாகாண கல்விப் பணிப்பாளரின் பெயரில் திணைக்களத்தின் காசாளரிடம் செலுத்தி பெறுகை மாதிரிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். அவ்வாறு இல்லையெனில் கேள்விப்பிணை சார்பாக அப்பெறுமதியில் இலங்கை மத்திய வங்கியின் அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக்கொண்ட 90 நாட்கள் செல்லுபடியாகும் வங்கிப் பிணைமுறியொன்றை கேள்வியுடன் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விப் பிணையை காசாக செலுத்துவதாயின் அத்தொகையை 2022.09.12 பி.ப.1.00 இற்கு முன் செலுத்துதல் வேண்டும்.

06. முறையாக பூர்த்தி செய்யப்பட்ட கேள்விகள் இரு பிரதிகளுடன் குறித்த பெறுகைக்குழுவிற்கு 2022.09.12 பி.ப.2.00 இற்கு முன் சமர்ப்பித்தல் வேண்டும் அத்துடன் கேள்விப் பத்திரங்களில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என்று குறிப்பிட்டு வேறுவேறாக இரு உறைகளில் இட்டு இவ் உறைகள் இரண்டையும் ஒரு கடித உறையில் இட்டு, அம் மூன்று உறைகளிலும் இடதுபக்க மேல் மூலையில் குறித்த கைத்தொழிலின் பெயரைக் குறிப்பிட்டு பொறியிட்டு, தலைவர், பெறுகைக்குழு, ஊவா மாகாண கல்வித் திணைக்களம், வெலகெதர வீதி, பதுளை என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது அவ் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். குறித்த மேலதிக விபரங்களை, ஊவா மாகாண கல்வித் திணைக்களத்தின் பாடசாலை கட்டிடப்பிரிவு (தொ.பே இலக்கம் 055-2229635) இடம் பெற்றுக்கொள்ளலாம்.

07. நகல்பிரதி, மூலப்பிரதியின் சகல பக்கங்களும் உறுதி செய்யப்பட்ட போட்டோப்பிரதியாக இருத்தல் வேண்டும்.

08. கேள்வி செல்லுபடியாகும் காலம் 2022.12.12 வரையானதாக இருத்தல் வேண்டும்.

09. கேள்விக்கு முன்னரான கூட்டம் 2022.09.07 மு.ப.9.00 இற்கு ஊவா மாகாண கல்வித் திணைக்களத்தில் நடைபெறும்.

10. 2022.09.12 பி.ப.2.00 இற்கு பதுளை, ஊவா மாகாண கல்வித்திணைக்களப் பணிமனையில் கேள்விகள் திறக்கப்படுவதுடன் அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

11. கிடைக்கப்பெறும் கேள்விப் பத்திரங்களில் தகைமையான கேள்விப் பத்திரத்தை ஏற்றுக்கொள்ளல் அல்லது பூர்த்தியற்று சமர்ப்பிக்கும் கேள்விப்பத்திரங்களை நிராகரிக்கும் முழுமையான உரிமை பெறுகைக்குழுவிற்கு உரியதுடன், பெறுகைக்குழுவின் தீர்மானம் இறுதித்தீர்மானம் ஆகும்.

**டி.எம்.ரத்நாயக்க**
**பெறுகைக்குழுவின் தலைவர்**
**ஊவா மாகாண கல்வித் திணைக்களம்**
**பதுளை**

**2022.08.17**

**அற்றோணித் தத்துவத்தை இரத்துசெய்தல்**


இல:147 ருஸ்கின் அவனியு, இலண்டன் E12 6PP, ஐக்கிய இராச்சியம் இடத்தில் மயில்வாகனம் மகாதேவன் அல்லது இராமாசாமி மயில்வாகனம் மகாதேவன் ஆகிய என்னால் கலைவாணி கோபாலரத்தினம் இலண்டன் மன்றாடியார் நாயகத்தினால் உறுதிப்படுத்தப் பட்ட 2017ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 23ஆந் திகதிய அற்றோணித் தத்துவ பதிவிலக்கம் 34 பக்கத்தில் 7 ஆம் பிரிவில் 2280 தினப்புத்தகத்தில் 2017ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 23 ஆந் திகதிய அற்றோணி அனுமதிப்பத்திரம் மூலம் கொழும்பு -101/3A, சென்.பெனடிக் வீதி, கொழும்பு-13 இடத்தில் வசிக்கும் மைதிலி மயில்வாகனம் என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவப்பத்திரம் இத்தால் இரத்துச் செய்யப் பட்டு செல்லுப் படியற்றதாக்கப்படுகிறது.

**திகதி: 17.08.2022**
**மயில்வாகனம் மகாதேவன் அல்லது**
**இராமாசாமி மயில்வாகனம் மகாதேவன்**

BE BETTER INFORMED! News you can trust now free on your mobile phone.

Dinamina Daily News Thinakaran

AVAILABLE AT



Visit - apps.lakehouse.lk

DOWNLOAD TODAY!

LAKE HOUSE

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

**கேள்வி அறிவித்தல்**

**திருகோணமலையில் சீனக் குடாவிலுள்ள 12 எண்ணிக்கையான எண்ணெய் களஞ்சிய தாங்கிகளின் இயந்திரவியல் சுத்திகரிப்புகள்**

**B/44/2022**

**திருத்தம்**

மேற்படி தலைப்பின் கீழ் இந்தப் பத்திரிகையில் பிரசுரமான விளம்பரத்தின் பிரகாரம் ஏற்கனவே குறித்த விலைமனுக்களை பெற்றுக்கொண்ட வளமுள்ள மற்றும் இந்த விலைக்கோரல் செயற்பாடுகளில் பங்குபற்ற ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கவனத்திற் கொள்ளுமாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இத்தால் அழைப்பு விடுக்கப்படுகின்றது.

விலைக்கோரல் ஆவணத்தில் விலைக்கோரலின் நோக்கத்தின் உப பிரிவு 3.1 இவ்வாறு வாசிக்கப்பட வேண்டும் என்பதை தயவுசெய்து கவனத்திற் கொள்ளவும்.

பின்வரும் பிரிவுகளில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம், ''பொருத்தமான ஒப்பந்தக்காரரை நியமித்து, பன்னிரெண்டு (12) எண்ணிக்கையான எண்ணெய் களஞ்சிய தாங்கிகளை (தாங்கிகள் 38-41, 61, 64, 73-76) இயந்திரவியல் சுத்திகரிப்பு செய்வதே இந்தப் பணியின் நோக்கமாகும்.''

**இதற்குப் பதிலாக**

''பன்னிரெண்டு (12) எண்ணிக்கையான எண்ணெய் களஞ்சிய தாங்கிகளுக்கு (தாங்கிகள் 38-41, 61, 64, 73-76) பரிசோதனை சேவைகளை வழங்குவதற்கு பொருத்தமான ஒப்பந்தக்காரரை நியமிப்பதே இந்தப் பணியின் நோக்கமாகும். ஒப்பந்தக்காரர்கள் பரிசோதனை பணிகளை மேற்கொள்ளல் வேண்டும் மற்றும் தாங்கிகளின் பயன்பாடுகள் பற்றிய அறிக்கையை வழங்குதல் வேண்டும். மீள் மதிப்பீடு, திருத்தவேலைகள் அல்லது மீளமைப்பு வேலைகளுக்கு பரிந்துரைகளை வழங்குதல் வேண்டும்.''

ஏதேனும் சிரமத்திற்கு இபொகூ வருத்தத்தைத் தெரிவிக்கின்றது.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**மே/பா முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்),**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**1ஆம் மாடி, இல: 609, கலாநிதி டனிஸ்டர் டி சில்வா மாவத்தை,கொழும்பு-09**

**தொலைபேசி: 011-5455335**
**தொலைநகல்: 011-5455424**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை (PRDA) (மேல் மாகாணம்)

### மாகாண வீதிகள், போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தகம், வீடமைப்பு மற்றும் நிர்மாணம், பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி(மேல் மாகாணம்)

01. கீழேயுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள நெடுஞ்சாலை/பாலங்களின் நிர்மாணத்திற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து மேல் மாகாணத்தின் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் சார்பாக, பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

02. ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கும் எதிராக கூறப்பட்டுள்ள **CIDA** (ICTAD) பதிவு தேவைப்பாட்டை பூர்த்தி செய்பவராகவும் மற்றும் கம்பனிப் பதிவானது மேல் மாகாண நிருவாக எல்லையினுள் அமைந்திருத்தலும் வேண்டும்.

03. ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக ஒவ்வொரு விலைமனுவிற்கும் கேள்வியிடக்கூடிய தொகையானது 5.0 மில்லியன் ரூபாவிற்கு மேற்படின் விலைமனுதாரரானவர் 1987 ஆம் ஆண்டின 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8 ஆம் பந்தியின் கீழ் கம்பனிகளின் பதிவாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.

04. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை கொழும்பு-12, செயின்ற் செபஸ்தியன் மேடு, 59 ஆம் இலக்கத்திலுள்ள மேல் மாகாணத்திற்கான மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் 2 ஆம் மாடியிலுள்ள பெறுகை அலுவலகத்திலிருந்து பெற்று (தொலைபேசி: 011-5107010) 2022 ஓகஸ்ட் 17 ஆம் திகதியன்று ஆரம்பமாகும் வகையில் வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் மேலேயுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

05. கொழும்பு-12, செயின்ற் செபஸ்தியன் மேடு, 59 ஆம் இலக்கத்திலுள்ள மேல் மாகாணத்தின் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை, பெறுகை அலுவலரின் அலுவலகத்திலிருந்து 2022 ஓகஸ்ட் 17 ஆம் திகதியிலிருந்து 2022 ஒகஸ்ட் 31 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2.45 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர், எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணத்தின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் பெறுகை அலுவலரின் அலுவலகத்திலிருந்து கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.

06. ஒவ்வொரு பொதிக்குமான முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என தனித்தனியாக அடையாளமிடப்பட்டு தனித்தனியான தபாலுறைகளில் அடக்கப்பட்டு, தலைவர், மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை (மேல் மாகாணம்), இல. 59, செயின்ற் செபஸ்தியன் மேடு, கொழும்பு-12 என முகவரியிடப்பட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ''செயற்றிட்டப் பெயர்'' குறிப்பிடப்பட்டு பெறுகை அலுவலர், மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை (மேல் மாகாணம்)'' என முகவரியிடப்பட்டு 2022 செப்டம்பர் 1 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் மற்றும் இலத்திரனியல் மூலமாக அனுப்பப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

07. விலைமனுக்கள் அவைகளை சமர்ப்பிப்பதற்கான இறுதி தினத்தன்று விலைமனுதாரர்களின் முன்னிலையில் மற்றும்/ அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற நேரடியாக சமுகமளித்திருக்கும் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

08. அனைத்து விலைமனுக்களும் கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறான விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டுமெனவும் 2022 டிசம்பர் 28 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். விலைமனுக்களுக்கான உத்தரவாதம் வங்கி உத்தரவாதம்/ காப்புறுதி பிணையம் அல்லது ரொக்கப்பணத்தில் விலைமனுக்கோரல் ஆவணத்தில் வழங்கியுள்ளவாறான தரமாக்கப்பட்ட படிவத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.

09. பெற்றுக் கொண்ட எந்தவொரு விலைமனுக்களையும் ஏற்றுக் கொள்வதற்கும் அல்லது நிராகரிப்பதற்குமான அல்லது அதற்கான காரணங்களை முன்வைக்காமல் முன்னெடுத்தலை ஒழிப்பதற்கும் ஒப்பந்தக்காரர்களின் எண்ணிக்கையே பொருத்தமானது என கருதப்படின் அவர்களை வரையறுக்கப்படுவதற்குமான உரிமையை பெறுகைக் குழுவானது கொண்டுள்ளது.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை (மேல் மாகாணம்),**
**இல. 59, செயின்ற் செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு-12.**

**விலைமனு அட்டவணை – 2022**

| தொ. இல. | நி.பொ. இன் பிரிவு மற்றும் பி.செ. இன் பிரிவு | கேள்வி இல. | வீதியின் பெயர் | செயற்றிட்ட விபரங்கள் | பெசேவ நீங்கலாக கேள்வியிடக் கூடிய தொகை (மில்லியனில்) | ஆகக்குறைந்த ICTAD தரம் | செயற்றிட்ட காலம் (மாதங் களில்) | தடுப்புக் காலம் | 12% பெசேவ உடனான மீளளிக்கப் படாத கேள்விக் கட்டணம் (ரூபாவில்) | விலைமனு உத்தரவாதப் பெறுமதி: ரொக்கப் பணத்தில் | விலைமனு உத்தரவாதப் பெறுமதி: வங்கி உத்தர வாதம் அல்லது காப்புறுதி பிணையம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | அகலவத்த (மத்துகம) | PE/2022/ AG//04 | கல்மத்த பல்லேகொட ரிட்டிகெட்டிய வீதி | தடுப்புச்சுவரின் நிர்மாணம் | 2.43 | நெடுஞ் சாலைகளுக்கான சி-07 அல்லது சி-08 | 3 | 12 | 2,240.00 | 18,225.00 | 36,450.00 |
| 2 | அகலவத்த (பாலிந்தநுவர) | PE/2022/ AG//05 | பெல்லன யாக்குபிட்டிய வீதி | 1/9 ஆம் பாலத்தை அகலமாக்கல் | 3.13 | நெடுஞ் சாலைகளுக்கான சி-07 அல்லது சி-08 | 3 | 12 | 2,240.00 | 23,475.00 | 46,950.00 |
| 3 | அகலவத்த (பாலிந்தநுவர) | PE/2022/ AG//06 | பொல்கம்பள குருபிட்ட வீதி | பாலத்தை அகலமாக்கல் 5/3 | 2.72 | நெடுஞ் சாலைகளுக்கான சி-07 அல்லது சி-08 | 3 | 12 | 2,240.00 | 20,400.00 | 40,800.00 |
| 4 | அகலவத்த (பாலிந்தநுவர) | PE/2022/ AG//07 | ஹேவெஸ்ஸ பம்பரவன தொடர்பு வீதி | ஜக்கட் சுவரின் நிர்மாணம் | 2.65 | நெடுஞ் சாலைகளுக்கான சி-07 அல்லது சி-08 | 3 | 12 | 2,240.00 | 19,900.00 | 39,800.00 |
| 5 | அகலவத்த (பாலிந்தநுவர) | PE/2022/ AG//08 | இங்குருதலுவ கிராமத்தில் மாகுறு ஆற்றின் குறுக்காக தொங்கு பாலத்தின் நிர்மாணம் (2 ஆம் கட்டம்) | பாலத்தின் தூ ண்களை நிர்மாணித்தல் | 10.7 | பாலங்களுக்கான சி-05 அல்லது சி-06 | 4 | 12 | 3,920.00 | ------------- | 161,000.00 |

# காலி மாநகர சபை – கேள்வி அறிவித்தல்

1. காலி மாநகர சபைக்கு சொந்தமான கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் காலி தர்மபால பூங்காவின் A உணவகத்தை 5 வருட கால எல்லைக்காக, குத்தகைக்கு விடுவதற்காக பொறியிடப்பட்ட கேள்விகள் என்னால் கோரப்படுகின்றன.

2. சிறந்த அனுபவமுள்ள, பேக்கரி உற்பத்தி மற்றும் ஏனைய உணவுப் பொருட்கள் விற்பனை செய்யப்படும் நிறுவனங்களில் இருந்து மாத்திரம் கேள்விகள் கோரப்படுகின்றன.

3. 2022.08.18 முதல் 2022.09.07 பி.ப. 3.00 வரை கேள்வி நிபந்தனைகளுடன் கேள்வி மாதிரிப் பத்திரங்களை காலி மாநகர சபையின் மாநகர கணக்காளர் (அறவிடல்) இடம் கீழே அட்டவணையில் காணப்படும் கேள்வி மாதிரிப் பத்திர கட்டணம் மற்றும் கேள்விப் பிணை வைப்புத் தொகையைச் செலுத்திய பின்பு பெற்றுக்கொள்ளலாம். (கேள்வி விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ளும் போது வியாபார பதிவுச் சான்றிதழை சமர்ப்பித்தல் கட்டாயமாகும்.)

4. 2022.09.08 மு.ப. 10.00 வரை கேள்விகள் ஏற்கப்படுவதுடன், அன்றே மு.ப. 10.30 இற்கு கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர்களுக்கு மற்றும் அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு இவ்வேளையில் சமுகமளிப்பதற்கு அனுமதியளிக்கப்படும்.

5. சகல கேள்விகளும் இரு பிரதிகளுடன் சமர்ப்பித்தல் வேண்டும். மூலப் பிரதி ஒரு உறையிலும், நகல் பிரதி மற்றொரு உறையில் இட்டு பொறியிட்டு மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென குறிப்பிட்டு அவ் உறைகள் இரண்டையும் ஒரு உறையில் இட்டு சீல் இட்டு உறையின் இடது பக்க மேல் மூலையில் 'தர்மபால பூங்காவின் A உணவகத்தை குத்தகைக்கு விடல் 2022' என்று குறிப்பிட்டு கேள்வி ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினமான 2022.09.08 மு.ப. 10.00 இற்கு முன் கிடைக்குமாறு காலி மாநகர ஆணையாளருக்கு பதிவுத் தபாலில் அல்லது நகர சபையின் மாநகர ஆணையாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். சகல கேள்வியுடனும் கேள்வி நிபந்தனையையும் கையொப்பமிட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.

6. வெற்றிகரமான கேள்விதாரருக்கு அவரது விலைமனுக்கள் அங்கீகரிக்கப்பட்டதாக அறிவித்து 14 நாட்களுக்கு 03 மாத குத்தகைக்குச் சமமான குத்தகை தொகையை காலி மாநகர சபையில் வைப்புச் செய்து முறையான உடன்படிக்கை ஒன்றிற்கு வரல் வேண்டும். (அரசினால் விதிக்கப்படும் குத்தகை தொகையும் பொருந்தும்)

7. சமர்ப்பிக்கும் கேள்வி பற்றி கேள்வி திறக்கப்படும் வேளையில் இருந்து வேறுபாடுகள் ஏற்படும் இடத்து அல்லது இங்கு நிபந்தனைகளுக்கு அப்பால் கேள்வியை பாதிக்கும் விடயங்கள் சம்பந்தமாக கேள்விச் சபையின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும். குறித்த நேரத்தின் பின்னர் சமர்ப்பிக்கப்படும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

**அட்டவணை**

| தொடர் இல. | விபரம் | கேள்வி மாதிரிப் பத்திரக் கட்டணம் (ரூ) | கேள்விப் பிணை வைப்புத் தொகை (ரூ) | குறைந்த பட்ச மாதாந்த வாடகை (ரூ) | நீர் மற்றும் மின் பிணை வைப்பு (ரூ) |
|---|---|---|---|---|---|
| 01 | காலி தர்மபால பூங்கா A உணவகம் | ரூ. 5000.00 | ரூ. 100,000.00 | ரூ. 200,000.00 | ரூ. 75,000.00 |

**டி.வி. திலினி சுமாலி**
**மாநகர ஆணையாளர் (அ.பொ)**
**காலி மாநகர சபை**

**2022.08.12ம் திகதி**
**காலி மாநகர சபை அலுவலகத்தில்**

# காலி மாநகர சபை – கேள்வி அறிவித்தல்

01. காலி மாநகர சபைக்கு சொந்தமான கீழே அட்டவணையில் காணப்படும் தர்மபால பூங்காவின் B உணவகத்தை 30 வருட காலத்திற்கு குத்தகைக்கு விடுவதற்காக பொறியிடப்பட்ட கேள்விகள் என்னால் கோரப்படுகின்றன.

02. சர்வதேச தரத்திற்கு அமைவாக சர்வதேச பெயர் நாமத்தின் கீழ் தொழில்நுட்ப உணவுப் பான வகைகள் மற்றும் ஏனைய உணவு விற்பனை விடயங்கள் மேற்கொள்ளப்படுகின்ற, குறைந்தபட்சம் 20 வருட அனுபவத்துடன், இலங்கையில் தற்போது விற்பனை நிலைய வலையமைப்பை நடத்திச் செல்கின்ற கம்பனிகள்/இலங்கையின் அதிகாரமுடைய முகவர் நிறுவனங்களிலிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

03. 2022.08.18 முதல் 2022.09.07 பி.ப.3.00 வரை கேள்வி நிபந்தனைகளுடன் கேள்வி மாதிரிப்பத்திரங்களை காலி மாநகர சபையின் மாநகர கணக்காளர் (அறவிடல்) இடமிருந்து கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் கேள்வி மாதிரிப் பத்திர கட்டணங்கள் மற்றும் கேள்வி வைப்புத்தொகையை செலுத்திய பின்பு பெற்றுக்கொள்ளலாம். (கேள்வி விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளும் போது வியாபார பதிவுச்சான்றிதழை சமர்ப்பித்தல் கட்டாயமாகும்)

04. வெற்றிகரமான கேள்விதாரரால் இவ் உணவக கட்டிடத்தில் காணப்படும் பழுதுபார்த்தல் விடயங்கள் மாநகர பொறியியலாளர் (சிவில்) இன் மதிப்பீட்டின் கீழ் குத்தகைதாரரின் செலவில் இடம்பெற வேண்டியதுடன், பழுதுபார்த்தல் விடயங்களுக்காக ஏற்படும் செலவுகள் அரச மதிப்பீட்டு திணைக்களத்திற்கு சமர்ப்பித்து அரச மதிப்பீட்டு திணைக்களத்தினால் வழங்கப்படும் புதிய மதிப்பீட்டுடன் சம்பந்தப்பட்ட குத்தகை தொகையில் ஏதேனும் சலுகையொன்று வழங்கப்படின் - அக்குத்தகை சலுகையை வழங்குவதற்கு முதலாம் தரப்பினர் இணங்கி இருப்பர்.

05. அவ்வாறு பழுதுபார்த்தல் வேலைகளுக்கு உடன்படிக்கை ஆரம்பிக்கும் தினம் முதல் 06 மாத காலத்திற்கு குத்தகை சலுகைக்காலம் உரித்தாவதுடன், அதன் முதல் 06 மாத காலத்திற்கு வரித்தொகை அறவிடல் இடம்பெறுவது அத்துடன், மேற்படி குத்தகை சலுகை காலத்திற்குள்ளும் இரண்டாம் தரப்பினரால் இவ் உணவகத்தின் வர்த்தக விடயங்கள் ஆரம்பிக்கப்படின், அன்றைய தினம் முதல் குத்தகை தொகையை இரண்டாம் தரப்பினரால் முதலாம் தரப்பினருக்கு செலுத்த வேண்டியதுடன், பழுதுபார்த்தல் விடயங்கள் முடிவடையாவிடினும் மேலே குறிப்பிடப்படும் குத்தகையை விடுவித்து வழங்கப்படும் 06 மாதத்திற்கு பின்னர் முதலாம் தரப்பினருக்கு இரண்டாம் தரப்பினரால் குறித்த குத்தகை தொகையை குறித்தவாறு செலுத்துதல் வேண்டும்.

06. 2022.09.08 மு.ப.10.00 வரை கேள்விகள் ஏற்கப்படுவதுடன், அன்றே மு.ப.10.30 இற்கு கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர்களுக்கு மற்றும் அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு இவ்வேளையில் சமுகமளிப்பதற்கு அனுமதியளிக்கப்படும்.

07. சகல கேள்விகளும் இரு பிரதிகளுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி ஒரு உறையில், நகல்பிரதி வேறு உறை ஒன்றிலும் இடப்பட்டு சீல் இடப்பட்டு மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியென குறிப்பிடப்பட்டு அவ் உறையில் இரண்டையும் ஒரு உறையில் இட்டு பொறியிட்டு உறையின் இடதுபக்க மேல் மூலையில் "தர்மபால பூங்காவின் B உணவகத்தை குத்தகைக்கு விடல் - 2022" என்று குறிப்பிட்டு கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதியாகிய 2022.09.08 மு.ப.10.00 இற்கு முன் கிடைக்குமாறு காலி மாநகர ஆணையாளருக்கு பதிவுத்தபாலில் அல்லது காலி நகர சபையின் மாநகர ஆணையாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். சகல கேள்விக்கும் கேள்வி நிபந்தனையையும் கையொப்பமிட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.

08. சித்திகரமான கேள்வியை பெற்றுக்கொண்ட நிறுவனத்தின் விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவித்து 14 நாட்களுக்குள், கேள்வி விண்ணப்பத்தில் குறிப்பிடப்படும் சேர்ந்த தொகையை மாநகர சபைக்கு செலுத்தி மற்றும் 03 மாத குத்தகைத் தொகைக்கு சமமான குத்தகை தொகையை பாதுகாப்பு பிணை வைப்பாக மற்றும் நீர்மின் பிணை வைப்பாக ரூ.75000.00 (எழுபத்தையாயிரம்) தொகையை பதுளை மாநகர சபையில் வைப்பு செய்து முறையான உடன்படிக்கை ஒன்றுக்கு வரல் வேண்டும். (அரசினால் விதிக்கப்படும் குத்தகைத் தொகையும் பொருந்தும்)

09. சமர்ப்பித்த கேள்வி பற்றி கேள்வி திறக்கப்படும் வேளையில் கருத்து வேற்றுமை ஏற்படுமிடத்து அல்லது இதன் நிபந்தனைகளுக்கு வெளியில் கேள்வியை பாதிக்கும் விடயம் சம்பந்தமாக கேள்விச் சபையின் தீர்மானம் இறுதித்தீர்மானமாகும். குறித்த நேரத்தின் பின்னர் சமர்ப்பிக்கும் கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

**அட்டவணை**

| தொடர் இலக்கம் | விபரம் | கேள்வி மாதிரிப் பத்திரக் கட்டணம் (ரூ) | கேள்விப் பிணை வைப்புத் தொகை (ரூ) | நீர் மற்றும் மின் பிணை வைப்பு (ரூ) | மாதாந்த வாடகை (ரூ) | குறைந்த பட்ச சேர்ந்த தொகை (ரூ) |
|---|---|---|---|---|---|---|
| 01 | காலி தர்மபால பூங்கா B உணவகம் | 5000.00 | 300,000.00 | 75000.00 | 125,000.00 | 12,500,000.00 |

**2022.08.12ஆம் திகதி**
**காலி மாநகர சபை அலுவலகத்தில்**

**டி.வி.திலினி சுமாலி**
**மாநகர ஆணையாளர் (அ.பொ)**
**காலி மாநகர சபை**

The Housewives' companion
Classifieds on
Daily News

## களுத்துறை நகர சபை

# லெப்டொப் கணனிக்கான பெறுகை அறிவித்தல்

சபைக்குத் தேவையான லெப்டொப் கணனிகள் 12ஐ வழங்கக்கூடிய உற்பத்தியாளர்களிடம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளிடமிருந்து பெறுகைப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

பெறுகை படிவங்கள் விநியோகித்தல் - 2022.08.17 பி.ப.3.00 வரை

பெறுகைப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் - 2022.08.31 மு.ப.10.00வரை

பெறுகைப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் பெறுகை பத்திரங்கள் திறக்கப்படும்.

**நிபந்தனைகள்**

01. பெறுகைப்படிவக் கட்டணமாக ரூ.1000/- தொகையை இவ் அலுவலகத்திற்கு காசாக செலுத்திப் பெற்றுக்கொள்ளும் மாதிரிப் பத்திரத்தின் மூலம் பெறுகைகளை சமர்ப்பித்தல் வேண்டும். (தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும்) பெறுகைப் பத்திரத்துடன் வழங்கப்படும் பெறுகை நிபந்தனைகளுக்கு அமைவாக பெறுகைப்பத்திரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

02. முறையாக பூர்த்தி செய்து பொறியிடப்பட்ட பெறுகைப் பத்திரங்களை மேற்படி குறித்த நேரத்திற்கு முன், "தலைவர், களுத்துறை நகரசபை" இற்கு கிடைக்குமாறு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். குறித்த நேரத்தின் பின்பு கிடைக்கும் பெறுகைப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

03. மேற்படி உருப்படியை வழங்குவதற்கு ஆர்வம் காட்டுகின்ற நிறுவனங்களுக்கு அலுவலக நேரங்களில் களுத்துறை நகர சபைக்கு வருகைதந்து அல்லது 034-2222273/75 மூலம் தகவல்களை தெரிந்து கொள்ள முடியும்.

04. எந்தப் பெறுகையை அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை களுத்துறை நகரசபைக்கு உரியது.

05. வழங்கப்படுகின்ற மாதிரிகளின் கீழ் விலைமனுக்களை சமர்ப்பிக்க முடிவது, ஒரு மொடலுக்கு ஒரு பெறுகைப் படிவம் மூலமாகும். ஒரு நிறுவனத்தினால் பல மொடல்களுக்கு விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதாயின் மற்றும் குறித்த மாதிரியையும் மாற்றுவதாயின் மற்றும், குறித்த மாதிரியும் மாற்றமடைவதாயின் மாத்திரம் வேறாக பெறுகைப் படிவமொன்றை சமர்ப்பித்தல் வேண்டும் அத்துடன், அதற்காக மேற்படி கட்டணத்தில் 50% தொகையை மேலதிக பெறுகைப் படிவத்திற்காக செலுத்துதல் வேண்டும்.

**கலாநிதி, சாமஸ்ரீ, தேசசக்தி,**
**அல்ஹாஜ் மொஹமட் அமீர் நசீர்**
**2022.08.17**
**களுத்துறை நகரசபை வளாகத்தில்**

**தலைவர்**
**களுத்துறை நகரசபை**

# பெறுகை அறிவித்தல்

## தேசிய வைத்தியசாலை - கண்டி

## சுகாதார அமைச்சு

01. கண்டி தேசிய வைத்தியசாலையின் பிரதேச பெறுகைக் குழுவின் தலைவரால் கீழ்க்காணும் சேவைகளை கொள்வனவு செய்வதற்காக 2022.09.09 மு.ப.10.00 வரை கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

- Procurement of Maintenance of Health Information and Management System (HIMS) at National Hosppital Kandy 2022/2023

02. 2022 ஓகஸ்ட் 18 முதல் 2022 செப்டம்பர் 08ம் திகதி வரை மு.ப.8.30 முதல் பி.ப.3.00 வரையான காலத்திற்குள் கண்டி தேசிய வைத்தியசாலையிலிருந்து ரூ.2000/- மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி வேண்டுதலின் பேரில் பெற்றுக்கொள்ளும் மாதிரிப்பத்திரத்தின் மூலம் கேள்விகளை சமர்ப்பித்தல் வேண்டும் கண்டி தேசிய வைத்தியசாலையில் கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த பின்னர் மு.ப.10.30 இற்கு கேள்விகள் திறக்கப்படும் கேள்விதாரர்களுக்கு அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரிகளுக்கு கேள்விகள் திறக்கப்படும் வேளையில் சமுகமளிப்பதற்கு வாய்ப்பளிக்கப்படும்.

03. பொறியிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் ஒப்படைத்தல் பதிவுத்தபாலில் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பலாம் அல்லது கண்டி தேசிய வைத்தியசாலையின் பிரதம கணக்காளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் நீங்கள் விலைமனுக்களை சமர்ப்பிக்கும் சேவையின் பெயரைத் தெளிவாக குறிப்பிடுங்கள்

04. எவ்வாறெனினும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதிக்கு மற்றும் நேரத்தின் பின்னர் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்பட்டு திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பபப்படும். கேள்விப் பத்திரங்களை பரீட்சித்தல் கட்டணங்கள் இன்றியே கண்டி தேதிய வைத்தியசாலையில் மேற்கொள்ளலாம். தொலைபேசி இல 081-2222261 மூலம் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

05. 05 மில்லியனுக்கு மேற்படும் கேள்விப்பத்திரங்களுக்கு இலங்கை கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் பதிவுச் சான்றிதழ் (PCA 03) இருத்தல வேண்டும்)

06. கேள்விக்கு முன்னரான கலந்துரையாடல் (Prebid Meeting) 2022.08.30 மு.ப.11.00 இற்கு கண்டி தேசிய வைத்தியசாலையில் நடைபெறும்.

07. திறந்த போட்டி முறைமையின் கீழ் கேள்விகள் கோரப்படும்

**தலைவர்**
**பிரதேச பெறுகைக்குழு,**
**தேசிய வைத்தியசாலை**
**கண்டி**

# மக்கள் வங்கி

# மீட்கப்படாத அடகு நகைகள்

# பகிரங்க ஏல விற்பனை

31.12.2020ம் திகதி வரை வன்னிப் பிராந்தியத்தில் உள்ள மக்கள் வங்கியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள் மற்றும் சேவை நிலையங்களில் அடகு வைக்கப்பட்டு 19.09.2022 திகதி வரை மீட்கப்படாத நகைகள் கீழே கொடுக்கப்பட்ட திகதி மற்றும் இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

ஒவ்வொரு நாளும் முற்பகல் 9.00 மணிமுதல் ஏல விற்பனை நடைபெறும்.

| **ஏலவிற்பனை திகதி** | **20.09.2022 மற்றும் 21.09.2022** |
|---|---|
| ஏல விற்பனை இடம் | பிராந்திய காரியாலயம், வன்னி, வவுனியா |
| அடகு வைக்கப்பட்ட கிளை | முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், கிளிநொச்சி, பரந்தன், மாங்குளம், முருங்கன், செட்டிக்குளம் |
| சேவை நிலையங்கள் | புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், வவுனியா நகரம், நெடுங்கோணி, பேசாலை, கிளிநொச்சி நகரம், பளை, மல்லாவி, கனகராயன்குளம், நானாட்டான், சிலாவத்துறை. |

மேற்படி ஏல விற்பனையை முன்னறிவித்தலின்றி ரத்துச் செய்யவோ, ஒன்று சேர்க்கவோ அல்லது பிற்போடவோ வங்கிக்கு சகல அதிகாரமும் உண்டு.


**பிராந்திய முகாமையாளர்,**
**மக்கள் வங்கி**
**பிராந்திய தலைமைச் செயலகம்,**
**வன்னி.**

**தொலைபேசி இல: 024-2225054/024-2222972**

மக்கள் வங்கி PEOPLE'S BANK
www.peoplesbank.lk

www.adz.lk
it's what you want

BE BETTER INFORMED!




News you can trust now free on your mobile phone.

Dinamina Daily News Thinakaran

VISIT
apps.lakehouse.lk

DOWNLOAD TODAY!

AVAILABLE AT

LAKE HOUSE

## பொலன்னறுவை மாநகர சபை

**2023 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவு அறிக்கையை தயாரிப்பதற்காக பொது மக்களின் முன்மொழிவுகளைப் பெற்றுக்கொள்ளல்**

பொலன்னறுவை மாநகர சபையானது, 2023ஆம் ஆண்டிற்கான வரவு செலவு அறிக்கையைத் தயாரிப்பதற்காக, மாநகர அதிகாரப்பிரிவிற்கான, புதிய வருமானத்திற்கான வழிமுறைகள், சீவனோபாய அபிவிருத்தி மற்றும் விவசாய மற்றும் தொழில்நுட்பம் அல்லாத சுயதொழில் கைத்தொழில் தொடர்பாக முன்னுரிமை அளிக்கப்படுவதுடன், அதற்காக பொது மக்களின் ஆலோசனைகள் மற்றும் முன்மொழிவுகளைப் பெற்றுக்கொள்ள எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

இதற்காக ஆர்வமுள்ள தரப்பினர் 2022.08.23 இற்கு முன்னர் தம் முன்மொழிவுகளை மாநகர ஆணையாளர், மாநகர சபை, பொலன்னறுவை என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் அல்லது நேரடியாக ஒப்படைக்கலாம் என அறிவித்துக் கொள்கின்றேன்.

எல்.ஜீ.சானக சிதத் ரணசிங்ஹ, மாநகர முதல்வர்
பொலன்னறுவை மாநகர சபை
விசாரணைகளிற்கு : 0272222275

mcpolonnaruwa @gmail.com
polonnaruwa Municipal Council
www.mcpolonnaruwa.lk

---

## மத்திய சுற்றாடல் அதிகாரசபை

சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு (சு.தா.ம) அறிக்கை

**உத்தேசிக்கப்பட்ட களனி பள்ளத்தாக்கு புகையிரதத்தட மேம்படுத்தல் செயல்த்திட்டம் கட்டம் 1 மருதானையிலிருந்து அங்கம்பிட்டிய வரை (38 + 380 கி.மீ.) தொடர்பான இறுதி தீர்மான பொது அறிவித்தல்**

**தேசிய சுற்றாடல் சட்டம் பிரிவு 23வ (4) இன் கீழான அறிவித்தல்**

மேற்கூறப்பட்ட சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு (சு.தா.ம) அறிக்கையை ஆய்வு செய்ததன் பின்னர் மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது 1993 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்ட (கருத்திட்டங்களை அங்கீகரிப்பதற்கான அறிவித்தல் முறை) ஒழுங்குவிதி 13 இற்கமைவாக குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகள் விசேட விதிகளுக்கமைவாக மேற்கூறப்பட்ட செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான அங்கீகாரத்தினை 7ம் மாடி, கட்டம் II செத்சிறிபாயவில் அமைந்துள்ள போக்குவரத்து அமைச்சிற்கு வழங்க தீர்மானித்துள்ளது என்பதனை இத்தால் பொதுமக்கள் யாவருக்கும் அறியத்தருகிறேன்.

**பணிப்பாளர் நாயகம்
மத்தியசுற்றாடல் அதிகாரசபை
“பரிசரபியச ”,
இல. 104, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்ல.**

---

# கேள்விமனுக்கோரல்

## தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்

**தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம் பொருட்டு 45,000 எண்ணிக்கையிலான பைகளின் பெறுகை**

1. தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம் சார்பாக திணைக்கள பெறுகைக் குழு தவிசாளர் பின்வரும் விடயத்தை திணைக்களத்திற்கு வழங்குவதற்காக தகுதியும் தகைமையுமுள்ள கேள்விமனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்களை தற்போது கோருகின்றார்.

| ஒப்பந்த இலக்கம் 01 | ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் விபரம் 02 | விலைமனு பாதுகாப்புமுறி தொகை (இ.ரூபா) 03 | மீளளிக்கப் படாத கட்டணம் (இ.ரூபா) 04 | விலைமனு ஆவணங்களை வழங்குதல் 05 | விலை மனுக்களை சமர்ப்பிப்பதற்கு முன்னரான கூட்டம் 06 | விலை மனுக்களை சமர்ப்பிக்கும் இறுதித் திகதி 07 | விலை மனுக்களை திறத்தல் 08 |
|---|---|---|---|---|---|---|---|
| DCS/AC/ CENPRO /08-10) | 45,000 எண்ணிக்கை யிலான பைகளின் பெறுகை | 562,500.00 விலைமனு பாதுகாப்புமுறி இலங்கை மத்திய வங்கியின் கீழ் இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கி யொன்றினால் வழங்கப்படுதல் வேண்டும். | 13,000.00 | 2022.08.17ம் திகதி முதல் 2022.09.06ம் திகதி வரை மு.ப.9.00 மணி முதல் பி.ப.3.00 மணி வரை வார நாட்களில் 2ம் மாடி பெறுகைக் கிளை தொகை மதிப்பு புள்ளி விபரத் திணைக்களம், சங்கியான மந்திரய, இல.306/71, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை | 2022.08.29ம் திகதி மு.ப.10.00 மணிக்கு மாநாட்டு மண்டபம் 4 ஆம் மாடி தொகை மதிப்பு புள்ளி விபரத் திணைக்களம், சங்கியான மந்திரய, இல.306/71, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை | 2022.09.07ம் திகதி பி.ப.2.00 மணிக்கு மாநாட்டு மண்டபம் 4 ஆம் மாடி தொகை மதிப்பு புள்ளி விபரத் திணைக்களம், சங்கியான மந்திரய, இல.306/71, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை | 2022.09.07ம் திகதி பி.ப.2.00 மணிக்கு மாநாட்டு மண்டபம் 4 ஆம் மாடி தொகை மதிப்பு புள்ளி விபரத் திணைக்களம், சங்கியான மந்திரய, இல.306/71, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை |

2. விலைகூறல் நடவடிக்கையானது தேசிய போட்டியடிப்படையிலான விலைகூறல் நடைமுறை (தே.போ.வி.) ஊடாக மேற்கொள்ளப்படும்.

3. அக்கறையுள்ள தகுதியான கேள்விமனுதாரர்கள் 011-2147007 எனும் தொலைபேசி இலக்கம் ஊடாக மேலதிக தகவல்களை பெற முடியும் என்பதுடன் அவர்கள் மேலே அட்டவணையின் 04ம் நிரலில் குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத கட்டணத்தை சிறாப்பருக்கு செலுத்துவதன் மேல், கணக்காளர் (நிதி 1), 2ம் மாடி. தொகைமதிப்பு. புள்ளிவிபரத் திணைக்களம், இல.306/71, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை எனும் முகவரிக்கு எழுத்திலான விண்ணப்பமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம் விலைமனு ஆவணங்களை முழுமையான தொகுதியொன்றைப் பெற்றுக் கொள்ளலாம். கொடுப்பனவு முறை ரொக்கப் பணமாக மட்டுமே ஆகும்.

4. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் கீழே தரப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது அதே முகவரியில் திணைக்களத்தின் பெறுகைப் பிரிவிலுள்ள கேள்விமனுப் பெட்டியினுள் இடுதல் வேண்டும். தாமதமாக கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சகல விலைமனுக்களும் மேலே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான பாதுகாப்புமுறி ஒன்றுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**தவிசாளர்,
திணைக்கள பெறுகைக் குழு,
தொகைமதிப்பு,
புள்ளிவிபரத் திணைக்களம்,
இல.306/71, பொல்தூவ வீதி,
பத்தரமுல்லை**

**2022.08.17**

---

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**பொது நிருவாகம், உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் அமைச்சு**

**உள்ளூராட்சி அபிவிருத்தி மேம்படுத்தும் செயற்றிட்டம் -**

**செயற்றிட்டம் ID:P 163305**

**கிழக்கு மாகாணம், திருகோணமலை**

01. இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசானது உலக வங்கியிடமிருந்து உள்ளூராட்சி அபிவிருத்தி மேம்படுத்தும் செயற்றிட்டத்திற்காக கடனொன்றைப் பெற்றுள்ளதுடன் இக்கடனின் பகுதியொன்றை கீழேயுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள பணிகளுக்கான பணக்கொடுப்பனவிற்காக செலவு செய்வதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறான பணிகளுக்கான உரித்தான கிண்ணியா நகர சபையின் சார்பாக உள்ளூராட்சி அதிகாரசபையின் பெறுகைக் குழுத் தலைவர் தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

03. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

04. ஒப்பந்தத்தை நிறைவேற்றும் தகுதிக்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தரம் மற்றும் விஷேடத்துவத்தை நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

05. தகைமைத் தேவைப்படுத்தல்கள் விலைமனுக்கோரல் ஆவணத்தின் 4 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ளன. மேலதிக விபரங்கள் விலைமனுக்கோரல் ஆவணத்தின் அட்டவணையின் 5 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ளன.

06. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ள உரித்தான உள்ளூராட்சி அதிகாரசபையின் தலைவர் / செயலாளரிடமிருந்து பெற்று அதே இடத்தில் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

07. 2022.08.17 ஆம் திகதியிலிருந்து 2022.08.31 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் உள்ளூராட்சி அதிகாரசபைக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.

08. 2022.09.01 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கீழேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டவாறு தலைவர், உள்ளூராட்சி அதிகாரசபை பெறுகைக் குழு, உரித்தான உள்ளூர் அதிகாரசபைகள் என்ற முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள், அவைகளை மூடிய பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.

09. கீழேயுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள தகவலுக்கமைவாக விலைமனுக்கள் விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

10. 2022 ஒகஸ்ட் 25 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு உரித்தான உள்ளூர் அதிகாரசபையில் விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும். ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் இக்கூட்டத்தில் அவர்களின் சொந்த செலவிலேயே பங்கு பெறலாம்.

| உள்ளூர் அதிகார சபையின் பெயர் | பணிகளின் விளக்கம் மற்றும் ஒப்பந்த இல. | பெசேவ நீங்கலாக கேள்வியிடக் கூடிய விலை மனுத் தொகை (மில்லியனில்) | ஒப்பந்தக் கால எல்லை | தேவைப் படும் தரம் மற்றும் விஷேடத்துவம் | கொள்வனவு செய்யும் நிறுவனத்தின் பெயர் | விலை மனுக் கோரல் ஆவணத்தை கொள்வனவு செய்யும் இடம் மற்றும் தொலை பேசி இல. | விலை மனு ஆவணத்தின் விலை (ரூபாவில்) | தேவைப் படும் விலை மனுப் பிணை: விலை மனுப் பிணைத் தொகை | தேவைப் படும் விலை மனுப் பிணை: செல்லுபடியாகும் கால எல்லை | விலை மனு செல்லுபடியாகும் காலம் – வரையும் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கிண்ணியா நகர சபை | கிண்ணியா நகர சபை அலுவலக கட்டிட புனர் நிர்மாணம் (31.00 மீ x 17.00 மீ. LDS p.PT1, $2^{nd}$ (50%) – 2022 Kinniya UC | 6.24 | 60 நாட்கள் | கட்டிடம் மற்றும் நிர்மாணத்தில் சி-6 மற்றும் சி-7. | நகர சபை, கிண்ணியா | நகர சபை, கிண்ணியா 0262236231/ 0262236232 | 2,500.00 | 63,000.00 | 2022. 12.13 ஆம் திகதி வரையும் | 2022. 11.16 ஆம் திகதி வரையும் |

**தலைவர், உள்ளூராட்சி அதிகாரசபை பெறுகைக் குழு,
கிண்ணியா நகர சபை,
கிண்ணியா.**

**15.08.2022**

---

**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு**
**நெடுஞ்சாலைகள் அமைச்சு**

# விலைமனுக்கோரல்

**அதிவேக வீதி செயற்பாடுகள், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவில் கடவத்த முதல் கொடகம வரையான பகுதியில் மின் பராமரிப்பு விடயங்களுக்காக தகைமையுள்ள தொழிலாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கான விலைமனுக்கோரல்**

01. அதிவேக வீதி செயற்பாட்டு பராமரிப்பு மற்றும் முகாமைத்துவப் பிரிவின் பெறுகைக்குழுத் தலைவரினால், வீதி அபிவிருத்தி அதிகார சபை சார்பாக தெற்கு அதிவேக வீதி பகுதி மற்றும் காட்டப்பட்டுள்ள செயற்றிட்டம் தொடர்பாக தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

| ஒப்பந்த இலக்கம் | செயற்றிட்டத்தின் பெயர் | நாளொன்றிற்கான மின் தொழிலாளர்களின் தொகை | ஒப்பந்த காலம் (மாதம்) | விலை மனுப் பிணை (ரூ) |
|---|---|---|---|---|
| RDA/EOM&M/ GOSL/ELE/MNT/ STDP&OCH /2022/33 | அதிவேக வீதி செயற்பாடுகள், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவில் கடவத்த முதல் கொடகம வரையான பகுதியில் மின் பராமரிப்பு விடயங்கள் சார்பாக தகைமையுள்ள தொழிலாளர்களை வழங்குதல் | 07 | 12 | 100,000.00 |

02. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அ.மா.மெ.ஹ மற்றும் க பிரிவு நடைமுறைப்படுத்தும் முகவராண்மையாகும்.

03. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறைக்கமைவாக விலைமனுக்கோரல் மேற்கொள்ளப்படும்.

04. ஒப்பந்தம் கையளிக்கப்பட்ட விலைமனுதாரர்கள், இது தொடர்பான நிகரான கொள்ளளவையுடைய, தொழிலாளர்களை வழங்குவது தொடர்பான அனுபவத்தைக் கொண்டிருப்பது தகைமையாகக் கொள்ளப்படும்.

05. விலைமனு மூடப்படும் திகதியிலிருந்து 91 நாட்கள் (**2022.12.13**) வரை விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும்.

06. விலைமனுக்கள் மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியைக் கொண்டுள்ள விலைமனுப்பிணையைக் கொண்டிருத்தல் வேண்டும். (**2023.01.10**) வரை செல்லுபடியாதல் வேண்டும். செல்லுபடியாகும் விலைமனுப் பிணையைக் கொண்டிராத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

07. விலைமனுதாரர்களினால் விலைமனு ஆவணங்களுக்குரிய அனைத்துப் பக்கங்களும் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரை பதியப்படல் வேண்டும்.

08. ஒரு முன்னோடி விலைமனுக் கூட்டம், **2022.09.05** அன்று மு.ப. **11.30** மணிக்கு கஹட்டகஹஹேன, வல்கம, பண்டாரகம என்ற இடத்தில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குரிய, “அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடுகள், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவின் பெறுகைப்பிரிவு அலுவலகத்தில் நடைபெறும்.” இதற்கு சமுகமளித்தல் கட்டாயமாவதுடன், அவ்வாறு இல்லையெனில் அந்நிறுவனத்தின் கேள்வி இரத்தாவதற்கு அல்லது வழங்கலுக்கு தகைமையற்றவராவதற்கு ஏதுவாகும்.

09. இது தொடர்பாக ஆர்வங்காட்டும் விலைமனுதாரர்களுக்கு சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்ட, முழுமைப்படுத்தப்பட்ட விலைமனு ஆவணத் தொகுதியொன்றை, மீளளிக்கப்படாத ரூ. **4,000.00 + 480.00 (VAT)** கட்டணத்தை ரொக்கப்பணமாகச் செலுத்துவதன் மூலம் கஹட்டகஹஹேன, வல்கம, பண்டாரகம என்ற இடத்தில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குரிய, அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடு, பராமரிப்பு மற்றும் முகாமைத்துவப் பிரிவின் பணிப்பாளர் அலுவலகத்திற்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்ததன் பின்னர் **2022.08.17** முதல் **2022.09.12** அன்று மு.ப.9.00 மணி முதல் பி.ப.13.15 வரையான காலத்தினுள் பெற்றுக்கொள்ளலாம். 1987 இலக்கம் 03உடைய பொது ஒப்பந்த சட்டத்தின் பிரகாரம், முகவராண்மை/பிரதிநிதி மற்றும் வெற்றியாளரான விலைமனுதாரர் பதிவாளர் இணையத்தளத்தில் பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும். **2022.09.13** அன்று பி.ப. **2.00** மணிக்கு விலைமனுக்கள் பொறுப்பேற்கப்படுவது முடிவடையும்.

10. முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இரண்டு பிரதிகளை கொண்டதாக, **2022.09.13** அன்று பி.ப. **02.00** மணிக்கு முன்னர் தலைவர், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பெறுகைக் குழு, வீதி அபிவிருத்தி அதிகார சபை, கஹட்டகஹஹேன, வல்கம, பண்டாரகம என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படவோ அல்லது நேரில் வந்து கையளிக்கப்படவோ வேண்டும். விலைமனுப்பத்திரங்கள் சேர்க்கப்படும் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் **“அதிவேக வீதி செயற்பாடுகள், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவில் கடவத்த முதல் கொடகம வரையான பகுதியில் மின் பராமரிப்பு விடயங்கள் சார்பாக தகைமையுள்ள தொழிலாளர்களை வழங்குதல்”** எனக் குறிப்பிட வேண்டும்.

11. வீதி அபிவிருத்தி அதிகார சபை, கஹட்டகஹஹேன, வல்கம, பண்டாரகம என்ற முகவரியில் அமைந்துள்ள பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகத்தில் விலைமனுக்கள் பொறுப்பேற்பது முடிவடைந்தவுடன் உடனடியாக மேற்படி விலைமனு திறக்கப்படும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் அச்சந்தர்ப்பத்தில் கலந்துகொள்ளலாம்.

12. மேலதிக விபரங்களுக்கான தொலைபேசி இலக்கம்

i. பொறியியல் (மின் - அ.மா.மெ.ந மற்றும் க பிரிவு) வீதி அபிவிருத்தி அதிகார சபை,
தொ.பே. இலக்கம் - 011-3047824, 0774777687

ii. பொறியியல் (நிர்மானம் - அ.மா.மெ.ந மற்றும் க பிரிவு) வீதி அபிவிருத்தி அதிகார சபை,
தொ.பே. இலக்கம் - 0113047806

**தலைவர்,
அதிவேக வீதி பராமரிப்பு, மற்றும் முகாமைத்துவ பிரிவு பெறுகைக் குழு
வீதி அபிவிருத்தி அதிகார சபை
கஹட்டகஹஹேன, வல்கம
பண்டாரகம.**

# அர்ஜுனவிடம் இழப்பீடு கோர இலங்கை கிரிக்கெட் முடிவு




தேசிய கிரிக்கெட் சபையின் தற்போதைய தலைவரும் முன்னாள் கிரிக்கெட் அணித் தலைவருமான அர்ஜுன ரணதுங்கவிடம் இரண்டு பில்லியன் ரூபா இழப்பீடு கேட்பதற்கு இலங்கை கிரிக்கெட் சபையின் நிறைவேற்றுக் குழு தீர்மானித்துள்ளது.

அர்ஜுன ரணதுங்க இலங்கை கிரிக்கெட் சபை மற்றும் இலங்கை கிரிக்கெட் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களின் நற்பெயருக்கு களங்கம் விளைவுக்கும் வகையில் கருத்து வெளியிட்டிருப்பதாக இலங்கை கிரிக்கெட் நிறைவேற்றுக் குழு தீர்மானித்திருப்பதாகவும் அதன்படி ரணதுங்கவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானித்ததாகவும் இலங்கை கிரிக்கெட் சபையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற ரணதுங்க, இலங்கை கிரிக்கெட் நிறைவேற்றுக் குழுவுக்கு எதிராக தவறான மற்றும் அவதூறு குற்றச்சாட்டுகளை சுமத்தியதாக இலங்கை கிரிக்கெட் சபை வெளியிட்ட அறிவிப்பு ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# டி20 லீக்கை வென்றது குசலின் ரெட்ஸ் அணி




இலங்கை கிரிக்கெட் சபையால் நடத்தப்பட்ட அழைப்பு டி20 லீக் தொடரின் இறுதிப் போட்டியில் குசல் மெண்டிஸின் அரைச்சதத்தின் மூலம் புளூஸ் அணியை ரெட்ஸ் அணி ஏழு விக்கெட்டுகளால் வீழ்த்தி சம்பியனானது.

பொருளாதார நெருக்கடியால் லங்கா பிரீமியர் லீக்கை ஒத்தி வைத்த நிலையில் ஆசிய கிண்ணத்திற்கான வீரர்களை தேர்வு செய்வதற்கு உதவியாக அமையும் வகையிலேயே இந்த அழைப்புக் கிண்ணம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கடந்த திங்கட்கிழமை (15) நடைபெற்ற இதன் இறுதிப் போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய தனஞ்சய டி சில்வா தலைமையிலான புளூஸ் அணி 20 ஓவர்களுக்கும் 6 விக்கெட்டுகளை இழந்து 136 ஓட்டங்களை பெற்றது. அஷேன் பண்டார ஆட்டமிழக்காது 40 ஓட்டங்களை குவித்தார்.

தொடர்ந்து பதிலெடுத்தாடிய ரெட்ஸ் அணிக்கு ஆரம்ப வீரராக வந்த அணித்தலைவர் குசல் மெண்டிஸ் சிறப்பாக ஆடினார். கடைசிவரை களத்தில் இருந்த அவர் ஆட்டமிழக்காது 45 பந்துகளில் 56 ஓட்டங்களை பெற்றதோடு அவருடன் சேர்ந்த வனிந்து ஹசரங்க ஆட்டமிழக்காது 14 பந்துகளில் 24 ஓட்டங்களை குவித்தார்.

இதன்மூலம் ரெட்ஸ் அணி 16.5 ஓவர்களிலேயே 3 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. இந்தத் தொடரில் 4 போட்டிகளில் மொத்தம் 10 விக்கெட்டுகளை வீழ்த்திய அசித்த பெர்னாண்டோ தொடர் நாயகன் விருதை வென்றதோடு சிறந்த துடுப்பாட்ட வீரர் மற்றும் இறுதிப் போட்டியின் ஆட்ட நாயகன் விருதை குசல் மெண்டிஸ் பெற்றார். சிறந்த பந்துவீச்சாளராக பிரவீன் ஜயவிக்கிரம விருது வென்றார்.

# சுபர் கிங்ஸில் மஹீஷ் தீக்ஷன



தென்னாபிரிக்காவில் அடுத்த ஆண்டு ஆரம்பமாகவுள்ள கிரிக்கெட் லீக் தொடரின், ஜொஹன்னஸ்பேர்க் சுபர் கிங்ஸ் அணியில் இலங்கை வீரர் மஹீஷ் தீக்ஷன ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

இந்தியாவின் ஐ.பி.எல் தொடரின் சென்னை சுபர் கிங்ஸ் அணி உரிமையாளர்கள், ஜொஹன்னஸ்பேர்க் சுபர் கிங்ஸ் அணியை வாங்கியுள்ளனர். இந்த நிலையில் வீரர்கள் ஏலத்துக்கு முன்னர் நேரடி ஒப்பந்தங்களை ஒவ்வொரு அணிகளும் அறிவித்து வருகின்றன.

அதன்படி தங்களுடைய 5 நேரடி ஒப்பந்த வீரர்களை ஜொஹன்னஸ்பேர்க் சுபர் கிங்ஸ் அணி கடந்த திங்கட்கிழமை (15) அறிவித்தது. சென்னை சுபர் கிங்ஸ் அணியின் முன்னாள் வீரர் பெப் டு பிளெசிஸ் ஜொஹன்னஸ்பேர்க் சுபர் கிங்ஸ் அணிக்காக நேரடியாக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். எனவே, சுபர் கிங்ஸ் அணியின் தலைவராக பெப் டு பிளெசிஸ் செயற்படுவார் என்று தெரிகிறது.

இலங்கை வீரர் மஹீஷ் தீக்ஷன, இங்கிலாந்தின் மொயீன் அலி, மே.தீவுகளின் ரொமாரியோ ஷெப்பர்ட் மற்றும் தென்னாபிரிக்காவின் புதுமுக வேகப்பந்துவீச்சாளர் ஜெரால்ட் கோட்ஸி ஆகியோர் நேரடியாக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர்.

# ஜெய்லானி தேசிய பாடசாலை தேசிய மட்ட போட்டிக்கு தகுதி



**பலாங்கொடை தினகரன் நிருபர்**

சப்ரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி–கேகாலை ஆகிய இரு மாவட்டங்களிலுள்ள பாடசாலைகளின் 16 வயதுக்கு உட்பட்ட உதைபந்தாட்ட சுற்றுபோட்டியில் பலாங்கொடை ஜெய்லானி தேசிய பாடசாலை சம்பியன் பட்டம் வென்று தேசிய மட்டப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஒப்பனாயக்க வித்தியாகர மகா வித்தியாலயத்துடனான இறுதிப் போட்டியில் ஜெய்லானி தேசிய பாடசாலை பெனால்டி முறையில் 3–0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இந்த சுற்றுப்போட்டிக்கு இரு மாவட்டங்களிலும் இருந்து 24 அணிகள் தகுதி பெற்றிருந்த போதிலும் 17 பாடசாலை அணிகள் மட்டுமே பங்கு பற்றின. போட்டிகள் இரத்தினபுரி சீவலி மற்றும் முத்துவ மைதானங்களில் நடைபெற்றன.

44th OBSERVER SLT-MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2022
Recognising talent, inspiring greatness
SLTMOBITEL The Connection

44th OBSERVER SLT- MOBITEL
மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2022

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் OBSERVER SLT- MOBITEL மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2022
இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2022
தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ……………
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை : ……………
(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)
பாடசாலை : ……………
வாக்களித்தவர் பெயர் : ……………
முகவரி : ……………
மொபைல் இல. : ……………
SUNDAY OBSERVER

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:
1வது பரிசு : ரூ. 2,500 2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000

44வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10 எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

நிபந்தனைகள்:
SLT- MOBITEL நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்குபெற முடியாது.
ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 20-08-2022 இல. 21

STREAM LIKE A BOSS!
SLTMOBITEL
இலங்கையின்
முதன்மையான,
அதிவேகமான
மற்றும் விஸ்தரிக்கப்பட்ட
PREMIUM FIBRE வலையமைப்பு.
FIBRE
Get Fibre
www.sltmobitel.lk

## சர்வதேச செய்திகள்

# கென்ய ஜனாதிபதியாக வில்லியம் ரூடோ வெற்றி



கென்ய ஜனாதிபதி தேர்தலில் உப ஜனாதிபதி வில்லியம் ரூடோ வெற்றியை அறிவித்துள்ளார்.

கடந்த ஒகஸ்ட் 9 ஆம் திகதி நடைபெற்ற தேர்தலில் 50.5 வீத வாக்குகளை வென்ற அவர், எதிர்த்துப் போட்டியிட்ட ரைலா ஒடிங்காவை குறுகிய வாக்கு வித்தியாசத்தில் தோற்கடித்திருப்பதாக உத்தியோகபூர்வ தேர்தல் முடிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.


எனினும் தேர்தல் மோசடி பற்றி ஒடிங்கா பிரசாரம் நடத்தியதால் முடிவுகள் வெளியாவதில் தாமதம் ஏற்பட்டது.

எனினும் தேர்தல் ஆணையத்தின் ஏழு உறுப்பினர்களில் நால்வர் இந்த முடிவை ஏற்க மறுத்திருப்பதோடு, முடிவு வெளிப்படையானதாக இல்லை என்று குறிப்பிட்டுள்ளனர்.

தேர்தல் முடிவை எதிர்த்து நாட்டின் பல இடங்களில் வன்முறை வெடித்துள்ளது.

உப ஜனாதிபதியாக இருந்த ரூடோ ஜனாதிபதியாக அறிவிக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து, ஒடிங்காவின் ஆதரவாளர்கள் தலைநகர் நைரோபியில் உள்ள கேபேரா பகுதியில் வன்முறையில் ஈடுபட்டனர்.

# புதிய கொவிட் தடுப்பூசிக்கு ஒப்புதல் அளித்தது பிரிட்டன்



பிரிட்டன் புதிய கொவிட்–19 தடுப்பூசிக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

இது கொரோனா மூலக் கிருமி அதன்பின் வந்த ஒமிக்ரோன் பிரிவுகள் ஆகியவற்றைக் குறிவைக்கும் தடுப்பூசியாகும். மொடர்னா நிறுவனம் இந்தப் புதிய தடுப்பூசியைத் தயாரித்துள்ளது.

பிரிட்டனில் பெரியவர்களுக்கு இந்தத் தடுப்பூசியைச் செலுத்த ஒப்புதல் தரப்பட்டுள்ளது.

கொரோனா மூலக் கிருமி அதன்பின் வந்த வைரஸ் வகைகள் இரண்டுக்குமே புதிய தடுப்பூசி நல்ல பலனைத் தருவது தெரிய வந்திருப்பதாக பிரிட்டிஷ் மொடர்னா நிறுவனத்தின் பொது நிர்வாகி டேரியஸ் ஹக்ஸ் தெரிவித்தார்.

புதிய வகை வைரஸ்கள் வரவர, அவற்றுக்கேற்பத் தடுப்பூசியை மொடர்னா நிறுவனம் மாற்றியமைத்துக் கொண்டே வரும் என்று அவர் கூறினார்.

# சீனாவின் திட்டங்களின் தோல்வியால் நெருக்கடி



சீனாவால் முன்னெடுக்கப்படும் பெல்ட் அண்ட் ரோட் முன்முயற்சி தவறான நிர்வாகத்தின் காரணமாக தற்போது ஒரு முக்கியமான கட்டத்தில் உள்ளது. அதன் குடையின் கீழ் உள்ள பல முக்கிய திட்டங்கள் செயற்படத் தவறியது அல்லது மோசமான முடிவுகளை வெளிப்படுத்தியுள்ளன.

இதனால், உலக ஆதிக்கத்தைப் பெறும் சீனாவின் எதிர்பார்ப்புக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

2013இல் சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் உரை ஒன்றில் “பட்டுப் பாதை” முயற்சியாகவே இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டது. 2015 ஏப்ரலில் சீன–பாகிஸ்தான் பொருளாதார தாழ்வார திட்டம் அறிவிக்கப்பட்டதன் மூலம் இது அமுலுக்கு வந்தது.

எனினும் பல முன்னணி திட்டங்கள் செயற்படத் தவறியது அல்லது சாதகமான முடிவைத் தர தவறியுள்ளன.

# பாக். பஸ் விபத்தில் 20 பேர் உயிரிழப்பு




பாகிஸ்தானில் எண்ணெய் டேங்கருடன் மோதிய பஸ் வண்டி ஒன்று தீப்பற்றியதில் குறைந்தது 20 பேர் உயிரிழந்துள்ளனர்.

பல மணி நேரம் பயணித்த பஸ் வண்டி மத்திய நகரான முல்தானின் புறநகர் பகுதியில் வைத்து நேற்று செவ்வாய்க்கிழமை விபத்துக்குள்ளானது. டேங்கரின் பின் பகுதியில் மோதிய பஸ் தீயில் கருகி இருப்பதை அங்கிருந்து எடுக்கப்பட்ட படங்கள் காட்டுகின்றன. இதில் மேலும் மூவர் காயமடைந்துள்ளனர். மோசமான வீதிகள், வாகனங்களில் மோசமான பராமரிப்பு மற்றும் பொறுப்பற்ற முறையில் வாகனத்தை ஓட்டுவது போன்ற காரணங்களால் பாகிஸ்தானில் வாகன விபத்துகள் அடிக்கடி நிகழும் ஒன்றாக மாறியுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஒகஸ்ட் மாதம் 17ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.